உ

சிவமயம்

ஸ்ரீ வைகைக் கருப்பர் துணை



நாகலிங்கய்யா



முத்துராமலிங்கய்யா

எண்பதாம் ஆண்டு சதாபிஷேக மலர்

செல்வ இல்லம்



நாள்:

04.09.2022

ஞாயிற்றுக்கிழமை

நா.பெ.நா.ராம.நா. இராமனாதன் செட்டியார்

இராம. இந்திரா ஆச்சி



மூத்த மகன் இராம. இராமநாதன், மருமகள் இராம. சாந்தி
மற்றும் பேத்திகள் இராம. உண்ணாமலை, இராம. கலைவாணி இந்திரா

உ

சிவமயம்

ஸ்ரீ வைகைக் கருப்பர் துணை

எண்பதாம் ஆண்டு
சதாபிஷேக விழா மலர்

"செல்வ இல்லம்"

KANDANUR

சதாபிஷேக தம்பதிகள்

திரு. நா. இராமநாதன் செட்டியார்

திருமதி. இந்திரா ஆச்சி

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 19 ம் தேதி

04.09.2022 ஞாயிற்றுக்கிழமை

இடம் : செல்வ இல்லம், கண்டனூர்

உ
சிவமயம்

முன்னுரை :

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி!

ஆன்றோர்களும் சான்றோர்களும் சித்தர்களும், வாழ்ந்த பூமி நம் பூமி, சைவத்தையும், வைணவத்தையும் தமது இரு கண்களைக்கொண்டு நம் முன்னோர்கள் வழிபட்டு வந்துள்ளனர். நம் பூமியில் சைவமும் வைணவமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்துள்ளன. சமயங்கள் இரண்டாகினும் நம் நகரத்தார்கள் சைவத்தையே தழுவியவர்கள்.

கடல் சீற்றத்திற்கு அஞ்சி சோழ நாடான காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து பாண்டி நாட்டிற்குப் புலம் பெயர்ந்தார்கள் என்பது வரலாறு.

வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பிரான்மலையாம்
தெள்ளார் புனல்வையை தெற்காம் - ஒள்ளிய சீர்
எட்டிக் கடல் கிழக்காம் இஃதன்றோ நாட்டரசன் சேர்
செட்டி நாட் டெல்லையெகச் செப்பு

எனப் பாடுவார் முத்தப்பையா பாடியதை நோக்குங்கால், வடக்கே வெள்ளாறு. மேற்கே பிரான்மலை, தெற்கே வைகை, கிழக்கே கடல் என இந் நான்கு எல்லைக்குட்பட்ட பகுதியில், 96 ஊர்களில் தங்களுடைய வாடிக்கையைத் தொடங்கியுள்ளார்கள் நகரத்தார்.

நகரத்தார்கள் ஒழுக்கத்தோடு பண்பையும் கடைபிடிப்பவர்கள். நேர்மையானவர்கள், உண்மையானவர்கள் தரும சிந்தனை உடையவர்கள். இரக்க குணம் பெற்றவர்கள். இறை சிந்தனை மேலோங்கியவர்கள். எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதைச் செவ்வனே செய்து முடிக்கக் கூடிய திறமை பெற்றவர்கள். பதறாத காரியம் சிதறாது என்பதற்கேற்ப, ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து. சிந்தித்து எச்செயலையும் செய்யக்கூடிய திறமைசாலிகள்.

இறை வழிபாடு நம்மவர்களின் வாழ்க்கையோடு ஊறிப்போன ஒன்று. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழிக்கேற்ப கோயிலைச் சுற்றியே தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டவர்கள். எந்த ஊரில் இருந்தாலும் எந்நாட்டில் வாழ்ந்தாலும் அங்கும் ஒன்று கூடி சங்கம் அமைத்து நற்செயல்கள் புரிந்து, தான் தர்ம காரியங்களை தவறாமல் கடைப்பிடிப்பவர்கள். எந்தவொரு வேறுபாடும் இல்லாமல் இறைவனை வணங்குவது நம்மவர்களின் சிறப்பாகும். பாதயாத்திரையாகச் சென்று இறைவனை வணங்குவது நகரத்தார்களின் சிறப்பாகும்.

வேலை, வணிகம், தொழில் இ.மெயில், இண்டர்நெட் என்று வாழ்க்கை வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த வேகமான ஓட்டத்தில். சற்று இளைப்பாறி இறைவனை சிந்திக்க, அவனை வழிபட, அவன் நாமங்களை ஜெபிக்க இம்மலர் உதவியாக இருக்கும். இறை வழிபாட்டிற்கான திருமறைப் பாடல்கள், பாசுரங்கள், மந்திரங்கள், ஸ்தோத்திரங்கள் போன்றவற்றைத் தொகுத்து அளித்துள்ளோம். குறை இருந்தால் மறந்து, நிறைகளை மட்டும் நினைவில் கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

உ
சிவமயம்

அற நெறியும் திரு நிறையும்
அருள் பொழிய அகம் மலர
வான் உயரக் கொண்டுயர்ந்து
வளம் கொழிக்க குலம் செழிக்க
நகரத் தாராம் செட்டி மக்கள்
நனி சிறக்க வாழ்க வாழ்க நயந்து!

நகரத்தார் மேம்படவும், நல்ல இனம் என்றிடவும்,
நன்மை பல பெற்றிடவும், நாடு பல போற்றிடவும்
செல்வச் சீருடனே, செழுமை வளத்துடனே
வளமை பெருகிடவே வாழ்க பல்லாண்டு!

சாதாபிஷேக தம்பதியர்களைப் பற்றி ஓரிரு வார்த்தைகள்

கண்டனூர் **நா.பெ. குடும்பத்தினர்** சூரைக்குடிக் கோயிலைச் சேர்ந்தவர்கள். **ஜீவன் முத்தர்களாகிய நாகலிங்க ஐயாவும்** அவர்கள் பரம்பரையில் வந்த **நாகப்ப செட்டியார், நா. மீனாட்சி ஆச்சியின்** மூத்த புதல்வர்

திரு. **நா. இராமனாதன் செட்டியார் 20.11.1941** அன்று பிறந்தார்

எஸ்.எஸ்.எல்.சி. படிப்புடன் ஹோமியோபதி மருத்துவப் படிப்பும் படித்துள்ளார். திரு. **இராமனாதன் செட்டியார்** அவர்கள் தாயின் அருகிலேயே இருந்து தாயின் ஒவ்வொரு செயலுக்கும் துணை நின்றவர்கள். நான்கு தம்பிகளுக்கும், ஒரு தங்கைக்கும் மூத்தவரான திரு. **இராமனாதன் செட்டியார்** அவர்கள் தங்கைக்கு பாசமான அண்ணன், தம்பிகளுக்கு நேர்மையான வழிகாட்டி. ப்ளாக் டெவலப்மெண்ட் அலுவலகத்தில் பணிபுரிந்த காரணத்தால் **ப்ளாக் இராமனாதன்** என்று அழைக்கப்படுகின்றார்கள். திரு. **இராமனாதன் செட்டியார்** மிகவும் எளிமையானவர்கள். சுறுசுறுப்பானவர்கள், நேரம் தவறாமையைக் கடைப்பிடிப்பவர்கள். நல்ல அண்ணனாக மட்டுமல்லாமல். பிள்ளைகளுக்கு அன்பான தந்தையாகவும் பேரன், பேத்திகளுக்குப் பிரியமான ஐயாவாகவும் திகழும் இவர்கள் எங்கள் குடும்பத்தின் வழிகாட்டி.

அரியக்குடி **சீ.வெ.கா. வெங்கிடாசலம் செட்டியார் வெ. உண்ணாமலை ஆச்சியின்** புதல்வி திருமதி. **இந்திரா ஆச்சி** ஸ்ரீ விய ஆண்டு சித்திரை மாதம் 8 ம் தேதி 20.04.1946 ம் வருடம் பிறந்தார். உடன் பிறந்த சகோதரர் ஒருவர் இந்திரா ஆச்சி பிறந்தது அரியக்குடி என்றாலும், அவர்தம் பெற்றோரைவிட ஆயா ஐயா மீது அதிக பாசமும் மரியாதையும் வைத்திருந்தார். ஐயா காரைக்குடி **மெ.வி.வி வினைதீர்த்தான் செட்டியார்**, ஆயா திருமதி. **வி. மீனாட்சி ஆச்சி** குடும்பத்தை எவ்வாறு வழி நடத்துவது என்று ஆயாவிடமும்,சிக்கனம், சேமிப்பு என்பதைப் பற்றி ஐயாவிடமும் கற்றுக்கொண்டார் ஐயா ஆயா இருவரிடமும் கற்றுக்கொண்டதை வைத்து இன்றளவும் **இந்திரா ஆச்சி** தனது குடும்பத்தை செம்மையாக நடத்திக் கொண்டிருக்கிறார்.

திரு. **இராமனாதன் செட்டியார்,** திருமதி. **இந்திரா ஆச்சி** இருவரும் என்றும் இளமையானவர்கள். சுறுசுறுப்பானர்கள். தெய்வ சிந்தனை உடையவர்கள், முருக பக்தி மிக்கவர்கள். வருடந்தோறும் பழநி பாதயாத்திரை செல்பவர்கள். தனது குடும்பத்தார்களுக்கு மட்டுமல்லாமல் யார் வந்து எந்தவிதமான உதவி கேட்டாலும் தட்டாமல் செய்யக்ககூடியவர்கள். மணிவிழாக் கண்டு, பீமரத சாந்தி கண்டு சாதாபிஷேகம் காணும் இவர்கள் கனகாபிஷேகம் காணவேண்டும்.

திரு. **இராமனாதன் செட்டியார்** அவர்களும்

திருமதி. **இந்திரா ஆச்சி** அவர்களும்

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 19 ம் தேதி 4.9.2022 ஆகிய

இன்றைய தினம்

செல்வ இல்ல மாகிய எங்கள் இல்லத்தில்

சதாபிஷேகம்

விழாவைக் கொண்டாடுகின்றார்கள்.

ஆன்றோர்களும், சான்றோர்களும், மூத்தோரும் வாழ்த்த இளையவர்களாகிய நாங்கள் அவர்கள் இருவரின் அடிபணிந்து வணங்குகின்றோம்.

வையாண்டியைத் தொழும்
வைகைக் கருப்பனை பணிந்து
கரக்காரியின் கரம் பிடித்து
செல்லாயியின் துணை கொண்டு
அப்பன் அம்மையின் அருளோடு

பீமரத சாந்தியைக் காணும் திரு. **இராமனாதன் செட்டியார்,** திருமதி. **இந்திரா ஆச்சி** இருவரையும் வாழ்த்த எங்களுக்கு வயதில்லை பாதம் பணிந்து வணங்குகின்றோம்.

திருமதி. **தமயந்தி நாச்சியப்பன்**

80 சதாபிஷேகம்

ஆயிரம் பிறைதொழுவர் சீர்பெறுவர் பேர்பெறுவர் அழியா வரம்பெறுவரே. என்பது அருணகிரிநாதரின் விருத்தம். இங்கே ஆயிரம் பிறை தொழுதல் என்பது சதாபிஷேகம் (எண்பதாண்டை)க் குறிக்கிறது.!

ஆயிரம் பிறை கண்டவர்களுக்கு ஆயுள், ஆரோக்ய ஹோமம் மற்றும் சாந்தி ஹோமங்கள்.. அறிந்து தெரிந்து புரிந்து கொள்வோம்.!

- 80 வயது ஆனவர்களை ஆயிரம் பிறை கண்டவர்கள் என்று அழைத்து மகிழ்கிறோம்.
- ஆயிரம் பிறை என்பதை எப்படிக் கணக்கிடுவது?
- 80 வயது 10 மாதம் ஆனவர்களை, ஆயிரம் பிறையை கண்டவர்கள் என்கிறோம். 80 வருடத்திற்கு 960 சந்திர தரிசனம்.
- சில வருடங்களில் 13 சந்திர தரிசனம் நிகழும். 80 வருடத்தில் 30 சந்திர தரிசனம் அதிகமாக இருக்கும்.
- அதையும் சேர்த்தால் 990 வரும்.
  பத்து மாதத்தில் பத்து சந்திர தரிசனத்தையும் சேர்க்கும் பொழுது 1000 பிறைகள் நிறைவுபெறும்
- **ஆயிரம் பிறை கண்ட வாழ்வு**
  ஆயிரம் பிறை காணுகிற பெரியவர்க்கு, ஆயிரம் பிறைகளைக் கணக்கிட்டால் 83 ஆண்டுகள் அவர் கடந்தாக வேண்டும்.
- அவர் 80 வது ஆண்டினை நிறைவு செய்கின்ற பொழுதே அவரை ஆயிரம் பிறை கண்டவர் என்று ஆசி பெறுகிறோம்.

- கணக்குப்படி அது 83 ஆண்டாக வருகிறது. ஆனால், நடைமுறையோ 80 என்று எடுத்துக் கொள்கிறோம்.
- பௌர்ணமிகள் சில ஆண்டுகளில் கூடுதலாகவும், குறைவாகவும் வரலாம். அந்தக் கணக்கின்படி, இந்த 80 ஆண்டுகளும் சற்றுக் கூடலாம்.
- 80 வயதைக் கடந்தாலே அது ஒரு பூரண வாழ்வு பெற்றார் எனப் பெருமிதம் அடைகிறோம்.
- 80 வயது பூர்த்தி என்பது ஒரு மிகப் பெரிய சரித்திரம் என்று சொல்வதற்குக் காரணம், அந்த 80 வயதிற்குள் 20 - வது வயதிலிருந்து 60 ஆண்டுக் காலத்திற்கான, சம்பந்தப்பட்ட வர்களுடைய செயல்கள் பதிவாகியிருக்கும்.
- அந்தப் பதிவுகள் அனைத்துமே அவர்பட்ட தோல்விகளாகவோ அல்லது வெற்றிகளாகவோ இருக்கும். மேலும் அவர் தமிழ் 60 ஆண்களையும் பூரணமாக கடந்து செல்லும் பாக்யம் பெறுகிறார் அத்தகைய சிறப்பு பெற்றவர்களாகிறார் ஆயிரம் பிறை கண்டவர்கள்.
- 30 ஆண்டுகளில் அவர் தோல்வி கண்டிருந்தால், மேலும் ஐந்து ஆண்டுகளோ, பத்தாண்டுகளோ செலவழித்து அந்தத் தோல்வியை வெற்றியாக்கி இருப்பார். அந்த ரகசியம் அவருக்குத்தான் தெரியும்...
  என்பது முன்னோர்கள் சொல்வார்கள்...
- மேலும்.. அது அவருடைய 60 ஆண்டு வாழ்வியல் சரித்திரத்தை நினைவுகூர்ந்தால் அவர் சிந்தனையிலிருந்து அது உடனே வெளிப்படும். இப்படித்தான் 80 ஆண்டு பெரியவரின் வாழ்க்கை, 60 ஆண்டு - பேசும் சரித்திரமாக நம் முன்னால் உலவும்

பகவான் சொன்ன பதிலோ, சனகாதிகளுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. அதற்காக சமஸ்கிருத சுலோகத்தைத் தமிழ்ப்படுத்தினால்.

நான் 6 முக்கியமானவர்களை வணங்குகிறேன். அவர்கள் வணங்கத்தக்கவர்கள். என்னால் வணங்கத்தக்கவர்கள் என்றால், அவர்கள் 6 பேரும் எப்பேர்ப்பட்டவர்கள் என்று எண்ணிப் பாருங்கள் என்றார்.
அவர்கள் யார் என்று கேட்க,
பகவான் கூறினார்

1. தினசரி அன்னம் பாலிப்பவன்,
2. வாலிப வயதிலேயே யாகம் செய்பவன்,
3. உலகத்தை ஒரு நாள், இரு நாள் அல்ல, மாதக்கணக்கில், வருடக்கணக்கில் மேற்கொள்பவன்,
4. கற்புக்கரசியாக வாழ்கிற பெண்கள்,
5. பிரமத்தை அறிந்த ஞானிகள்.

இந்த ஐவர்களை மட்டுமல்ல,

அந்த இடத்தின் மகிமை மேலும் பல நன்மைகளை ஆயிரம் பிறை கண்ட தம்பதிகளுக்கும் அதில் பங்கேற்க வந்த குடும்பத்தினர்களுக்கும் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை..

அதுமட்டுமல்ல, அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் சித்திக்கும். இதற்குச் சமமான ஜபம் வேதஸ்மிருதி எதிலும் இல்லை. இப்புண்ணியருக்கு அந்த யாகம் செய்த பிறகு வைக்கப்படும் நாமகரணம் சகஸ்ர தர்சி என்பதாகும்.

நமது இந்து புராணத்தில் மிக தெளிவாக சொல்வது..

சதாபிஷேகம் கண்டவரும், அவருடைய தர்மபத்தினியும் அந்த நிமிடம் முதல் பார்வதி பரமேஸ்வர தம்பதியாக மாறிவிடுகிறார்கள்.

இவர்களை நமஸ்கரித்து நாம் ஆசி பெற்றால், அவர்கள் நம்மை வாழ்த்தும் வாக்கு அப்படியே பலித்து நன்மை உண்டாகும்...

ஆசிர்வாதம் பெற்ற நமக்கும் அந்த பாக்கியம் கிட்டும்!

இந்த சாந்தியைச் செய்து ஆயிரம்பிறை கண்ட தெய்வத் திருவுருவங்களாகப் பேறு பெற்றவர்களை நாம் வணங்கினால் நீண்ட ஆயுள், தேக ஆரோக்கியம், ஐஸ்வர்யங்கள் முதலியவற்றைப் பெற்று நூறு ஆண்டுகள் நாம் வாழும் பாக்யம் பெறுவோம் என்பது ஆன்மீக நம்பிக்கையாகும்...

6 வதாகவும் ஒருவர் இருக்கிறார்

அவர்தான் ஆயிரம்பிறை கண்ட பெரியவர் என்கிறார் வாசுதேவர்.

ஸ்ரீமன் நாராயணன்

ஸ்ரீ கிருஷ்ண பகவானை உயிர்கள் அனைத்தும் நமஸ்கரிக்கின்றன. அவரோ சதாபிஷேகம் செய்யப்படும் சான்றோரை வணங்குகிறார் என்றால், நாம் அனைவரும் ஒன்றுமில்லை

ஆயிரம்பிறை காண்பவருக்கு எத்தனைப் பெரிய மதிப்பும், மரியாதையும் உள்ளது என்பதை நித்யசூரிகளான சனகாதிகளே புரிந்துகொள்ளும்படி கூறினார்.

இந்த ஆயிரம்பிறை சதாபிஷேகத்தை அதிருத்ர யாகம் செய்தும் கொண்டாடலாம் என்கிறது. நமது இந்து புராணங்கள்.

அதிருத்ர யாகம் என்பது அண்மையில் தன்வந்திரி பீடத்தில் நடைபெற்ற போது தக்ஷிண கர்நாடக மாநிலத்தில் இருந்து கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான வேதவிற்பன்னர்கள் வேத சுலோகங்களை இடைவிடாது ஓதி நிறைவு செய்கிற போது,

அவை கார்மேகங்களையே ஒன்றுதிரட்டி வெள்ளம்போல் மழையைப்பெய்யச் செய்யும் சக்தியுடையதாக அமைந்தது. இதில் ஏராளமான அன்பர்கள் பங்கேற்று பக்தி பரவசத்துடன் பிரார்த்தனை செய்தனர்.

ருத்ரகாதசினி என்று இன்னொரு யாகம். அதைச் செய்வதன்மூலம் சதாபிஷேகம் கண்டவர் தனது வாழ்க்கையில் தெரிந்தோ, தெரியாமலோ ஏதேனும் பாவம் செய்திருந்தால், இந்த யாகம் அதைப் போக்கும் சக்தியுடையதாக அமைகிறது.

இதைப் போன்றது தான் மகாருத்ர யாகம், ருத்ராகாதசினீ யாகத்தை பதினோரு கலசங்கள் வைத்து ஜபம் செய்வதாகும். ஒவ்வொரு கலசத்திலும்...

ஒரு ருத்திரம் ஆவாகனம் செய்யப்படுவார். இதை 11 முறை செய்வதுதான் மகாருத்ர யாகமாகும். 121 முறை செய்வதுதான் அதிருத்ர யாகமாகும்.

இத்தனை யாகங்களையும் செய்தால், அதற்கு உரியவன் எந்தப் பாவம் செய்திருந்தாலும் அதிலிருந்து விடுதலை பெறுவான் என்பது ஐதீகம்.

மேலும் தன்வந்திரி பீடத்தில் பல்லாயிரக்கணக்கான ஹோமங்கள் கடந்த 15 ஆண்டுகாளக நடந்து வருகிறது என்பதை அனைவரும் அறிந்ததே.

சைவத்திருமுறை 12

முதல் திருமுறை திருஞானசம்பந்தர் தேவாரம்

இரண்டாம் திருமுறை திருஞானசம்பந்தர் தேவாரம்

மூன்றாம் திருமுறை திருஞானசம்பந்தர் தேவாரம்

நான்காம் திருமுறை திருநாவுக்கரசர் அப்பர் தேவாரம்

ஐந்தாம் திருமுறை திருநாவுக்கரசர் அப்பர் தேவாரம்

ஆறாம் திருமுறை திருநாவுக்கரசர் அப்பர் தேவாரம்

ஏழாம் திருமுறை சுந்தரர் தேவாரம்

எட்டாம் திருமுறை மாணிக்கவாசகர் திருவாசகம் & திருக்கோவையார்

ஒன்பதாந் திருமுறையைப் பாடியருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மர் ஆவர்.

அவர்கள் திருமாளிகைத் தேவர். சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்திநம்பிகாடநம்பி, கண்டராதித்தர், சேவதிராயர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்பவராவர்.

பத்தாம் திருமுறை திருமூலர் திருமந்திரம்

பதினொன்றாந் திருமுறை திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் அருளியது பன்னிரெண்டாம் திருமுறை சேக்கிழார் பெருமாள் திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்)

தில்லையம்பதியின் நான்கு வாயில்கள் வழியாக வந்த நால்வர்களின் மார்க்கங்கள்

தெற்கு வாயில் - சத்புத்திரமார்க்கம்

தந்தை : ஈசன் - மகன் : திருஞானசம்பந்தர்

மேற்கு வாயில் - தாசமார்க்கம்

தலைவன் : ஆசான் - தொண்டன் : திருநாவுக்கரசர் (அப்பர்)

வடக்கு வாயில் - சஹமார்க்கம்

நண்பன் : ஈசன் - நண்பன் : சுந்தரமூர்த்தி சுவாமிகள்

கிழக்கு வாயில் - சன்மார்க்கம்

காதலன் : ஈசன் - காதலி : மாணிக்கவாசகர்

பயனில்லா ஏழு

ஆபத்திற்கு உதவாத பிள்ளை

அரும்பசி தீர்க்காத அன்னம்

தாகத்தை தீர்க்காத தண்ணீர்

தருத்திரம் அறியாத பெண்டிர்

கோபத்தை அடக்காத வேந்தன்

குரு வழி கொள்ளாத சீடன்

பாவத்தை தீர்க்காத தீர்த்தம்

பயனில்லை ஏழும்தானே

பஞ்சபாத்திரம் இதில் இடப்படும் பொருட்கள்

வில்வம்

வேம்பு

துளசி

அருகு

வன்னி... அத்தி

பச்சை கற்பூரம்

ஏலக்காய்

ஜாதிக்காய்

லவங்கம்

வெட்டிவேர்..

மஞ்சள் கூடுதலாக சேர்க்கவும்

விசேடங்கள்

54 ஆண்டுகள் பூர்த்தி - பீம சாந்தி

59 ஆண்டுகள் பூர்த்தி - உத்திர சாந்தி

60 ஆண்டுகள் பூர்த்தி - சஷ்டியப்த பூர்த்தி

69 ஆண்டுகள் பூர்த்தி - ரத சாந்தி

77 ஆண்டுகள் 7 மாதங்கள் 7 நாட்கள் பூர்த்தி - விஜயரத சாந்தி

80 ஆண்டுகள் 8 மாதங்கள் 8 நாட்கள் பூர்த்தி - சதாபிஷேகம்

100 ஆண்டுகள் பூர்த்தி - கனகாபிஷேகம்

முக்தி ஸ்தலங்கள்

திருவாரூர் பிறக்க முக்தி

திரு அண்ணாமலை நினைக்க முக்தி

காளஹஸ்தி பிரவேச முக்தி

தில்லை தரிசிக்க முக்தி

காசி இறக்க முக்தி

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் - நிலம் - பிருத்விலிங்கம்

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் - நெருப்பு - அக்னிலிங்கம் அல்லது ஜோதிலிங்கம்

திருவானைக்கா ஜம்புகேசுவரர் கோயில் - நீர் - அப்புலிங்கம் அல்லது ஜம்புலிங்கம்

சிதம்பரம் நடராசர் கோயில் - ஆகாயம் - ஆகாசலிங்கம்

திருக்காளத்தி காளத்தீசுவரர் கோயில் - காற்று - வாயுலிங்கம்

சிதம்பரம் நடராசர் கோயில் பொன்னம்பலம்

மதுரை மீனாட்சியம்மன் கோவில் வெள்ளியம்பலம்

திருவாலங்காடு வாடாரண்யேசுவரர் கோயில் - இரத்தினம்பலம்

திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் - தாமிர அம்பலம்

குற்றாலநாதர் கோயில் - சித்திர அம்பலம் (சித்திர சபை)

இவை கனகசபை, இரத்தினசபை, வெள்ளி சபை, தாமிர சபை, சித்திர சபை என்றும் அழைக்கப்படுகின்றன.

- ✦ பொற்சபை சிதம்பரம் அப்பன் நடராசர் சிவகாமி அம்மை
- ✦ வெள்ளிசபை மதுரை அப்பன் சொக்கநாதர் மீனாட்சி ∴ அம்மை
- ✦ தாமிரசபை திருநெல்வேலி அப்பன் நெல்லையப்பர் காந்திமதி அம்மை
- ✦ சித்ரசபை குற்றாலம் அப்பன் குற்றாலநாதர் குழல் வாய்மொழி அம்மை
- ✦ ரத்தினசபை திருவாலங்காடு அப்பன் வடாரண்யேஸ்வரர் வண்டார்குழலி அம்மை

பதினான்கு சிவதாண்டவ ஸ்தலங்கள்

1. சிவபெருமானின் காளிகா தாண்டவம் ஆடுவது எங்கு? எப்போது?
   காளிகா தாண்டவம் - படைத்தல் செய்யும் போது தலம் - நெல்லையப்பர் கோவில், திருநெல்வேலி ஆடிய இடம் - தாமிர சபை

2. சிவபெருமானின் சந்தியா தாண்டவம் ஆடுவது எப்போது? எங்கு?
   சந்தியா தாண்டவம் - காத்தல் செய்யும் போது தலம் - மீனாட்சி அம்மன் கோவில், மதுரை ஆடிய இடம் - வெள்ளி அம்பலம்

3. சிவபெருமானின் சங்கார தாண்டவம் ஆடுவது எப்போது?
   சங்கார தாண்டவம் - அழித்தல் செய்யும் போது

4. சிவபெருமானின் திரிபுர தாண்டவம் ஆடுவது எப்போது? எங்கு?
திரிபுர தாண்டவம் - மறைத்தல் செய்யும் போது தலம் - குற்றாலநாதர் கோவில் , கற்றாலம், ஆடிய இடம் - சித்திர சபை

5. சிவபெருமானின் ஊர்த்தவ தாண்டவம் - ஆடுவது எப்போது? எங்கு?
ஊர்த்தவ தாண்டவம் - அருளல் செய்யும் போது, தலம் - ஊர்த்தவதாண்டவம் கோவில், திருவாலங்காடு ஆடிய இடம் - இரத்தின சபை

6. சிவபெருமானின் ஆனந்த தாண்டவம் ஆடுவது எப்போது? எங்கு?
ஆனந்த் தாண்டவம் - இவ்வைந்து செயல்களையும் செய்யும் இடம் தலம் - நடராஜர் கோவில், சிதம்பரம் ஆடிய இடம் - கனக சபை

7. சிவபெருமானின் கௌரி தாண்டவம் ஆடுவது எப்போது? எங்கு?
கௌரி தாண்டவம் - பார்வதிக்காக ஆடிய போது தலம் - திருப்பத்தூர்

8. அஜபா நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
அஜபா நடனம் - சிவபெருமான் மேல்மூச்சில், கீழ்மூச்சில் (தவளை போல்) அசைந்தாடிய நடனம், ஆடிய தலம் - திருவாரூர்.

9. உன்மத்த நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
சிவபெருமான் பித்தனைப் போல் தலை சுற்றி ஆடிய நடனம் உன் மத்த நடனம் ஆகும்.

10. தரங்க நடனம் என்பது என்ன? இதை சிவபெருமாள் ஆடியது எங்கே?
தரங்க நடனம் என்பது கடல் அலை போல் அசைந்து ஆடுவது. இதை சிவபெருமான் நாகப்பட்டினத்தில் ஆடினார்

11. குக்குட நடனம் என்பது என்ன? இதை சிவபெருமதான் ஆடியது எங்கே?
குக்குட நடனம் என்பது கோழி போல் ஆடுவது. ஆடிய நடனம் - திருக்காறாயில்.

12. பிருங்க நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
பிருங்க நடனம் என்பது வண்டு மலரைக் குடைது போல் ஆடுவது. இதை சிவபெருமான் ஆடியது இடம் திருக்கோயில் ஆகும்.

13. கமல நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
கமல நடனம் என்பது தாமரை காற்றில் அசைவது போல் ஆடுவது. ஆடிய தலம் - தீவாய்மூர்

14. ஹம்சபாத நடனம் என்பது என்ன? இதை சிவபெருமான் ஆடியது எங்கே?
ஹம்சபாத நடனம் என்பது அன்னம் போல அடியெடுத்து ஆடுவது, ஆடிய தலம் - திருமறைக்காடு (வேதாரண்யம்)

ஓம் சிவாய நம

சர்வம் சிவமயம்

உற்றாரை யான் வேண்டேன்
ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பணவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா
உன் குறை கழர்கே
கற்றாவின் மனம் போல கசிந்து உருக வேண்டுவனே

பெற்ற தாய் தனை மகமறந்தாலும்
பிள்ளையைப்பெரும் தாய் மறந்தாலும்
உற்றதேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவியஉடல் மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்தார் உள்ளியிருந்து ஓங்கும் நமச்சிவாயத்தை நான் மறவலே

உருத்தெரியா காலத்தே உள்புகுந்து என் உளம் மன்னி கருத்திருத்தி
ஊன்புக்கு கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானை தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லைகண்டணே

ஈசனை அடித்தவர்கள்

அர்ஜுனன்.. வில்லால் அடித்தார்
பாண்டி மன்னன்.. பிரம்பால் அடித்தார்
ஸ்லாக்கிய நாயனார்.. கல்லால் அடித்தார்
கண்ணப்ப நாயனார்.. செருப்பு காலால் மிதித்தார்

தில்லை தரிசனம்

தரிசனம் கண்டவர்க்கு மறுஜனனம் இல்லை
வரிசையுடன் அம்பலவன் வாழ்கின்ற தில்லை
இரவு பகல் இடைவிடா ஏகாசபக்தி
இன்பமொரு ஆனந்தம் பொங்கி வரும் பக்தி
பரவிவரும் அவனருகில் அணிமாதி சித்தி
பணிந்துவந்து சிற்றம்பலத்தை வலம்சுற்றி
சொப்பணக்கண்டு இவ்வுலகில் தோன்றி வரும் வேதம்
சொன்னது நீயென்றபடியாகும் போதும்
அற்புதமிரு தங்கமதில் தாளமொரு கீதம்
அவர்தம் திருநடனம் ஆடி வரு பாதம்
அல்லு-பகல் ஓயாது அடியவர்கள் கோஷ்டி
அரகரா என்றமிர்த வானவரை ஒட்டி
தில்லைவாழ் அந்தணர்கள் கையெடுத்து கூப்பி
சிக்கெனவே திரை விளக்கி பரவடிகள் காட்டி
நஞ்சுண்டகண்டனுக்கு கொன்றை மலர் சாற்றிநல்லதொரு
சார்ந்தனையும் அம்பிகையை போற்றி
குஞ்சிதபாதம் மனதில் உருவேற்றி
கோபாலகிருஷ்ணன் தொழும் நடராஜ மூர்த்தி.

அழகு செல்லாயி

எந்த சேலை கட்டினாலும், நீயே அழகு செல்லாயி..
என்ன பெத்த தாயி, நா வாங்கி வாரேன் போயி,

காஞ்சிபுரம் பட்டுச் சேலை ஒன்க்கு வேணுமா..
காசு பணம் பார்க்காமா வாங்கி வந்து தாரேன்,
தர்வமாவரம் பட்டுச் சேலை ஒனக்கு புடிக்குமா,
தயங்காம கேளு ஆத்தா, வாங்கி நானும் வாரேன்.

திருபுவனம் பட்டுச்சேலை ஒனக்கு இஷ்டமா,
தஞ்சாவூரு போயிதங்கி வாங்கி வந்து தாரேன்,
நெகமம் புடமைதான் அழகா இருக்கும்மா,
பொள்ளாச்சிக்கு தேடி போயி வாங்கி நானும் வாரேன்.

கோயம்புத்தூர் காட்டன் புடவை ஒனக்கு அழகம்மா,
கோவையில்தான் நா இருக்கேன் உடனே வாங்கி வாரேன்
சாங்குடி சேலை கட்டினாலும் நீயே அழகு சுந்தரி,
கணங்காமல் மதுரை போய் வாங்கி வந்து தாரேன்.

கண்டாங்கி சேலைதான் கண்ணுக்கு நிறைவம்மா,
காரைக்குடி பக்கம் போயி கரெக்டா வாங்கி வாரேன்,
ஆரணி பட்டுச் சேலை ஒனக்கு ஆசையா,
அத்த பஸ் புடுச்சு போயி வாங்கி வந்து தாரேன்.

நேரடியா கடைக்கு போக ஒனக்கு விருப்பமா, கண்டனூரு
வந்து ஒன்ன கூட்டிப்போறேன்
நம்ம ரெண்டு பேரும் வண்டியில போயி வாங்குவோம்.
சாயரட்ச பூசைக்குள்ள திரும்பி வந்துருவோம்.

விஷேசங்கள் வரும்போது உடுத்திக்கம்மா
பருத்தி நூலில் ஆன சேலைய தினமும் கட்டுங்கம்மா,
அழகழகா விதவிதமா நீயும் போட்டுக்கம்மா,
அடி என்தாயி என்னைக்குமோ ஒசத்திதானம்மா

அன்புடன்,
ராம்சரவணன்

ஓசைமணி காளியம்மன் அந்தாதி

அம்மன் துதி

அருட்பால் வார்க்கும் அன்னைதனை துதித்து
அந்தாதி பாடலை அன்பினால் அமைத்து
அவள்தம் நற்பாதம் ஆனந்த அர்ப்பணம்
அவள்தம் பொற்பாதம் அனைத்தும் சமர்ப்பணம்

புகழ்

ஓசைமணி காளியெங்கள் குலதெய்வ நாமம்
நாமம் சொல்லச்சொல்ல நடப்பதெல்லாம் சேமம்
சேமங்கள் நல்கிடஅவள் விழிமலர்கள் பூக்கும்
பூக்கும் பூக்களெல்லாம் புகழ்நிலைகள் சேர்க்கும்

கல்வி



சேர்க்கும் நற்கல்வி நன்மைகளை பயக்கும்
பயக்கும் பகுத்தறிவு கற்பவர்களை இயக்கும்
இயக்கம் எல்லாமே என்றுமெங்கள் காளி
காளியின் அருளிருந்தால் கல்விநமக்கு ஏணி

அறிவு

ஏணிகளை வேண்டுவோர்க்கு வழங்கிடுவாள் பயிற்றறிவு
பயிற்றறிவு மறுத்தோர்க்கு தந்திடுவாள் பட்டறிவு
அறிவின் மூலதனம் அன்னையவள் சீதனம்
சீதனம் நூதனம் சாதனைகட்கு சாதனம்

ஆற்றல்

சாதனங்கள் எல்லாமே திறன்களின் திறவுகோல்
திறவுகோல் தான்பெறவே திறமைகளே ஊன்றுகோல்
ஊன்றி உள்ளத்தில் உண்மைகள் உறைந்திருந்தால்
உறைந்திருப்பாள் நிறைந்திருப்பாள் உள்ளகத்தில் காளி

துணிவு

காளியவள் கைகளிலே கருணைமனு கொடுங்கள்
கொடுத்தபின்னர் பயமெதற்கு துணிவுதனை பெறுங்கள்
பெறுகின்ற துணிவையே துணையெனச் சொல்லுங்கள்
சொல்லிலும் செயலிலும் துணிவோடு வெல்லுங்கள்

பெருமை

வெல்லுகின்ற வயதே வாழ்க்கைக்கு சாட்சி
சாட்சியாய் அன்னையவள் ஆசிகளே காட்சி
காட்சியாய் நெஞ்சகத்தில் காளியவள் ஆட்சி
ஆட்சியாய் ஓசைமணி காளியம்மன் மாட்சி

இளமை

மாட்சிமைகள் பெருகிடவே மலர்திடுமே புலமை
புலமைகள் புலர்ந்திடவே இயன்றிடுமே இளமை
இளமையது தான்நிலைக்க காளியவளே காப்பு
காப்பதற்கு அவளிருக்க ஏதுநமக்கு மூப்பு

நோயின்மை

மூப்பின் எண்கணிதம் மூளும் பயங்களாய்
பயங்கள் தானிங்கு அச்சுறுத்தும் நோய்களாய்
நோய்கள் தனைதீர்க்கும் தாயவளின் மருத்துவம்
மருத்துவ பயன்சேர்க்கும் தூயவளின் மகத்துவம்

நம்பிக்கை

மகத்துவம் பெறுகின்ற மனங்களில் நம்பிக்கை
நம்பி கைதொழுதால் நம்இல்லம் வந்திடுவாள்
வந்து வரங்கள்பல அள்ளிஅள்ளி தந்திடுவாள்
தருவதிலே வள்ளல்வள் பெறுவதிலோ பேருவகை

பொன்

பேருவகை பெற்றவர்கள் வேண்டும் பொன்னென்றால்
பொன்மலை தான்பொழிவாள் திருமகளாய் திகழ்ந்திடுவாள்
திகழ்ந்தவளும் திரும்பிவந்து திருப்தியா எனக்கேட்பாள்
கேட்டதற்கு மேலேதரும் தங்கமனத் தகவுடையாள்

பொருள்

தகவுடையாள் பக்தமனம் பக்திமணம் தானறிவாள்
தானறிந்து தக்கபொருள் சமயத்திலே தானளிப்பாள்
தானளித்த பொருளாலே தேவைகளை தீர்த்திடுவாள்
தீர்வுகளால் சோர்வுகளை விலக்கிவிட்டு புன்னகைப்பாள்

நன்மக்கள்

புன்னகையால் குடும்பங்கள் புத்துணர்ச்சி பெற்றடவே
பெற்றோர்க்கு பேர்சொல்லும் நன்மக்கள் வாய்த்திடவே
வாய்த்தவர்களை வாயார உறவெல்லாம் வாழ்த்திடவே
வாழ்த்திடுவாள் வாழ்வாங்கு வாழ்கவென வையகத்தில்

ஆயுள்

வையகத்தில் அனைவருமே வேண்டுவது நலம்
நலமாக அனைவருக்கும் தேவையது பலம்
பலமாக பக்கபலமாக நல்கிடுவாள் வாழ்வில்
வாழ்வதற்கு வழியாக பல்கிடுவாள் ஆயுள்

நிலம்

ஆயுளுக்குள் அனைவரின் ஆசைசிறு நிலம்
நிலம்தனில் இளைப்பாற அழகானதொரு வீடு
வீட்டிற்குள் சிறிதாக பூஜைக்கெனவொரு அறை
அறைதனில் அம்மனின் திருஉருவ நிழற்படம்

முயற்சி

நிழற்படம் வணங்கி தொடங்கிடும் செயல்கள்
செயலற்று நிற்காமல் செழிப்போடு தொடரவே
தொடர்ந்து முயற்சிகளை செயலாற்ற செய்திடுவாள்
செய்து பலநிலைகள் காட்டிடுவாள் கூட்டிடுவாள்

வெற்றி

கூட்டலாய் பெருக்கலாய் குவியவேண்டும் வெற்றி
வெற்றிபெற வேண்டும்மனம் காளிபாதம் பற்றி
பற்றிவர போற்றிவர பிரகாரங்கள் சுற்றி
சுற்றிவந்து சூடிக்கொள்ளும் கும்குமம்தனை நெற்றி

சிற்றூராம் வடகுடியில் ஓசைமணிகள் ஒலிக்கட்டும் - நம்
சிந்தைகளின் நல்லபல ஆசையெல்லாம் பலிக்கட்டும்
குறைவின்றி பதினாறு செல்வங்களும் சிறக்கட்டும் - நம்மோடு
குலதெய்வம் குங்குமமும் எப்போதும் இருக்கட்டும்!

- ராம் ஆனந்த்

தெரியாதது

ஏன் மீசை முளைக்கிறது ஆணுக்கு தெரியாது
ஏன் பெண்மை பூக்கிறது பெண்ணுக்கு தெரியாது
ஏன் பற்கள் முளைக்கிறது மழலைக்கு தெரியாது
ஏன் மரணம் அழைக்கிறது முதுமைக்கு தெரியாது
ஏன் மனிதன் அழுகின்றான் கடவுளுக்கு தெரியாது
கடவுள் எங்கே இருக்கின்றான் மனிதனுக்கு தெரியாது
எல்லார்க்கும் எல்லாமும் எப்போதும் தெரியாது.
இருந்தாலும் வாழ்கின்றோம் ஏன் என்று தெரியாது...

தமிழ்நாட்டில் வேதாந்தமடங்கள் பல இருந்தன. அவை மக்களிடம் உடல், உயிர், கடவுள், உலகம் குறித்தான தத்துவத்துமான கருத்துக்களை ஆதிசங்கரரின் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கின.

அக்காலகட்டத்தில் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டு) இந்து சமயமான ஆறு பிரிவுகளாகத் திரிந்து கிடந்தது. அவைகளை ஒன்று கூட்டி சண்மதம் எனும் பெயரிட்டு ஒன்றிணைத்து மதம் பிளவுபடமால் காத்தார் ஆதிசங்கரர்.

சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் எனும் ஆறு சமயங்கள் பிரிந்து தனித்தனியாக இருந்திருந்தால், இந்துமதம் பெரும் இழப்பைச் சந்தித்திருக்கும். அதைத் தடுத்தாண்டவர் ஆதிசங்கரர்.

பிரம்மசூத்திரப் பேருரை மற்றும் ஆதிசங்கரரின் நூல்கள் பெரும் மாற்றத்தைச் சமூகத்தில் ஏற்படுத்தின.

கடவுள் யார்?
என்பதற்கான விடையைத் தேடித்தந்தார்.
முன் பிருந்த தத்துவங்கள் கடவுளை இனம் காட்டியதிலிருந்து முற்றிலும் வேறுபட்டு அறிவார்த்தமான கருத்துக்கைக் கூறினார் அவர். இவை, பெரும்மன எழுச்சியை மக்களிடம் கொண்டு வந்தன அக்காலத்ததில் தான் தமிழகத்தில் வேதாந்தமடங்கள் நிறுவப்பட்டன்

சைவமடங்கள், வீரசைவமடங்கள், வேதாந்த மடங்கள் என மூன்று மடங்கள் இருந்தன. முதலிரண்டு மடங்களும் செய்த ஆன்மீக மற்றும் தமிழ்ப்பணியைப்போல் இல்லாமல், வேதாந்த

மடங்கள் மாறுபட்டுக் கல்வி நிலையங்களாகவும், பிற மொழிகளிலுள்ள வேதாந்த நூல்களைத் தமிழ்ப்படுத்தியும் அரும்பணி ஆற்றி வந்தன என்கிறார் ஏழுத்தாளரும் நூலகருமான திரு. ரெங்கையாமுருகன்.

தமிழகத்தின் பல ஊர்களில் வேதாந்த மடங்கள் சிறப்பாகச் செயல்பட்டன. அம்மடங்களில் பல முக்கியமான தமிழ்ப்பணிகளும், கல்விப்பணிகளும் நடந்தன.

அறிவுப்புரட்சியைத் தத்துவார்த்தான கேள்வி பதில்களில் நிறைத்து புதிய தேடல்களை ஆன்மீகத்தில் தேட ஆரம்பித்தனர் இம்மடத்தைச் சேர்ந்த சாதுக்கள். அவ்வாறானமடங்களின் வரலாறுகள் தமிழகவரலாற்றில் தற்போது இல்லை என்பது வருத்தமான செய்தியாகும்.

பல்வேறு மடங்களின் கொள்கைகள் மாற்றி அமைக்கப்பட்டு வேறுதிசையை நோக்கிய ஆன்மீகப்பயணத்தை அவை இன்று தொடர்ந்து கொண்டிருக்கின்றன. வேதாந்த மடங்கள் மூலம் அதிசங்கரரின் அத்வைதக் கொள்கைகள் தமிழில், ஆயிரம் ஆயிரம் நூல்களாக எழுதப்பட்டின.

அவை குறித்தவரலாறுகளை இன்று சிலமடங்கள் மட்டுமே பாதுகாத்து வந்துள்ளன. வெளிப்படுத்தவும் செய்துள்ளன. பிறமடங்களில் செய்யப்பட்டவைகள் ஏன் வெளிவரவில்லை என்பதற்கு விடை உலகம் அறிந்ததே.

தமிழகத்தில் எழுதப்பட்ட வேதாந்த நூல்களுக்கு எதிராகச் சைவமடங்களில் இருந்து எதிர்ப்பு நூல்கள் பல வந்தன. அதற்குப்பதில் அளிக்கம் வகையிலும் வேதாந்த மடங்கள் நூல்களை வெளியிட்டன. ஆனால், அவை குறித்த செய்திகள் பெருமளவு எங்கும் பதிவு செய்யப்படவில்லை.

பெருவழக்காக மாற்றி, ஒட்டு மொத்தச் சமூகமும் பின்பற்றும் வகையில், அத்வைத் தத்துவங்களைப் போதனைகள் மற்றும் நூல்கள் மூலமாக மக்களிடம் வேதாந்த மடங்கள் கொண்டு சென்றன.

ஆன்மீகப்புரட்சி என்னும் நிலையில் மக்களிடம் பெரும் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. அது போன்றமாபெரும் புரட்சியைச் செய்தமடம் தான் கோவிலூர் மடம். சிவகங்கை மாவட்டம் காரைக்குடிக்கு அருகாமையில் உள்ள திருத்தலம் தான் கோவிலூர். இவ்வூரில் ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஞானத் தேசிகர், ஞானத்தைப் போதிக்கும் பல்கலைக்கழகம் போன்று கோவிலூர் மடாலயத்தைத் தோற்றுவித்தார்.

கோவிலூர் மடத்தில் சாதுக்கள் பல நூறுபேர் வேதாந்தப் பாடம் பயின்றனர். பல நூறு வேதாந்த நூல்களை மொழி பெயர்த்துத்தமிழில் சுயமாக வேதாந்த நூல்களின் சாரத்தை எழுதியும் வந்தனர்.

இம்மடம் சிருங்கேரிமடத்தை குருபீடமாகக் கொண்டு இயங்குவதாகும். கோவிலூர் மரபு என்று அழைத்துக் கொண்டு பல சாதுக்கள் பல ஊர்களில் சிறுசிறு மடாலயத்தைக்கட்டி வேத நூல்களைப் பயிற்றுவித்து, நூல்களை எழுதியும் வந்தனர்.

இம்மடத்தின் கீழ் வந்த மரபு சார்ந்த மடாலயங்களில் சிறந்த வகைகளாக, திருச்சிவேதாந்த தேசிகர் மடம், காளையார்கோவில் செல்லப்பசுவாமிகள் வேதாந்தமடம், தஞ்சை பால்சாமிமடம், மதுரை குட்டைய சுவாமிகள் மடம், குன்னங்கோட்டை நாட்டார் மடம் போன்றவற்றைக் கூறலாம்.

இம்மடங்களின் இன்றைய செயல்பாடுகள் தனித்தனியாக ஆய்விற்கு உரிய ஒன்றாகும். இவற்றைக் குறித்த செய்திகள்

இலக்கிய வரலாற்றில் பதிவாகவில்லை என்பதே உண்மையாகும். தமிழ்நாடு முழுவதும், வேதாந்த மடங்களாக நிறைய மடங்கள் இருந்தன.

அவற்றில் குறிப்பாகச் சிக்கல் உகந்தலிங்க ஞான தேசிகர் சுவாமிகள் மடம் சிதம்பரம் மௌன குருசுவாமிகள் மடம், திருவண்ணாமலை கந்தப்பத் தேசிகர் (ஈசான்யஞானத் தேசிகர்) மடம் பெரம்பலூர் வீரசுப்பையா மடம், ஆரணி அருணகிரிநாத சுவாமிகள் மடம், வண்ணாரப்பேட்டை நாராயசாமி நாயக்கர் மடம், மதுரை நித்யானந்தம்மாள் மடம் போன்றவை சிறப்பான தமிழ்ப் பணியையும், வேதாந்தக் கல்விப்பணிகளையும் செய்த வேதாந்த மடங்கள் ஆகும். இவை குறித்தும் ஆய்வு செய்ய வேண்டியது மிக முக்கியமான பணியாகும்.

வேதாந்த மடங்களின் பட்டியல் இன்னும் நீளமானதாகச் செல்லுகிறது. தொடர்ந்து தமிழ் பணியாற்றிய வேதாந்த மடங்களைப் பதிவு செய்ய வேண்டியது நமது கடமையாகும்.

கோவிலூர் மடாலயத்தில் ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகரிடம் பாடம் கற்றுத் தனியாகக் கண்டனூர் எனும் திருத்தலத்தில், வேதாந்த மடம் கட்டிப் பல சாதுக்களுக்கு வேதாந்தம் கற்பித்தும், பல அரிய தமிழ் நூல்களைப் படைத்தவர்கள் தான் கண்டனூர் நாகலிங்கய்யாவும் அவரது மகனார் முத்துராமலிங்க ஐயாவும் ஆவர்.

இவர்கள் இருவரும் வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தியும், தமிழில் புதிதாகப் பல வேதாந்த நூல்களை எழுதியும் பணி செய்தவர்கள் ஆவர். கண்டனூர் வேதாந்த மடம் வந்து பாடம் கேட்ட பல சாதுக்கள் தமிழகம் முழுவதும் சென்று வேதாந்த மடம் அமைந்திருக்கின்றனர்.

கண்டனூர் நாகலிங்கய்யா வாழ்வில் பல அரிய ஆச்சர்யமான நிகழ்ச்சிகளையெல்லாம் செய்து காட்டி அருள் தருகின்ற சான்றோராகத் திகழ்ந்தார்.

அத்வைத் வேதாந்தத்தின் லட்சியம்

அத்வைதத் வேதாந்தத்தின் லட்சயம் குறித்தசுவாமி விவேகானந்தர் கூறுவதை இங்கு அறிந்து கொள்வது தெளிவை நமக்குத் தரும் என்பதால் அறிந்து கொள்கின்றோம்.

'ஸத்' என்ற இந்தப் பரம்-பொருள் தான் எல்லாமாக, பிரபஞ்சம், மனிதன், ஆன்மா, பிறபொருள்கள் அனைத்து மாக மாறுகின்றார். மனம், மகத் (காஸ்மிக்மைன்ட் / தியானத்தில் அடையும் அறிவு நிலை) இரண்டுமே அந்த ஸத் என்ற ஒன்றின் வெளிப்பாடு. ஆக இந்தப் பிரபஞ்சம் இறைவனின் பரிணாமம், என்றும் மாறாத அந்தப் பொருள், மாறுவதாக நமக்குத் தெரிவதெல்லாம், தேசம் காலம், நிமித்தம் இன்றும் சொல்லப் போனால் நாம ருபங்களே.

பெரிய ஓங்கி உயர்ந்த மரத்தைப் படைத்தவன் சிறிய காயை அதிலே காய்க்க வைத்தான். நிற்க முடியாத கொடிகளில் அவ்வளது பெரிய பரங்கிப் பழத்தை வைத்தான். இறைவா இவ்வளது பெரியமரத்தை படைத்து அதிலே இவ்வளது சிறிய காயை வைத்தாய் என்றால். இறைவனோ, மகனே நீயோ, மரத்தையும் அதன் காயின் அளவையும் பார்க்கிறாய். நானோ, வெயிலின் கொடுமையில் சற்று இளைப்பாற அம்மரத்தின் அடியில் வந்து அமரும் மற்ற ஜீவன்களைப் பார்க்கிறேன். என்கிறார்.

பெரியமரத்தில் பூசணிபோன்ற காய் காய்த்தால், அதன் அடியில் ஒய்வெடுக்கும் உயிர்களின் நிலை என்ன? சிந்திக்கத்தான் வேண்டும். ஒவ்வொன்றுக்கும் தனிச்சிறப்பு, காரணம், அவசியம் உண்டு. அது அனைத்திலும் தெய்வீகம் இயங்குகிறது என்றும் கூறுவேன்.

பரம்பொருள், உண்மைத் தோற்றம் என்ற இரண்டல்ல, ஒன்றே. அது மாறாதது என்பதே வேதாந்திகள் கூறுவதும் ஆகும். மாறும் தோற்றம் என்பதுமாயை.

அறியாமையில் இருக்கம் போது, (இங்கு அறியாமை என்பது, நமது சாதாரணப் புத்தியாகிய மனமும் அல்ல அல்லது அதனுக்கு உதவும் இந்த உடலும் அல்ல) பிரபஞ்சத் தோற்றத்தை மட்டுமே ஒருவன் காண்கிறான், இறைவனைக் காண்பதில்லை.

இறைவனைக்காணும் (உணரும்) அந்தக்கணமே அவனைப் பொருத்தவரையில் பிரபஞ்சம் மறைந்து விடுகிறது. மாயை என்று சொல்லப்படும் அறியாமையே இத் தோற்றங்களுக்கெல்லாம் காரணம்.

பரம்பொருள், ஒன்றானது மாறாதது. அப்படிப்பட்ட ஒரே தன்மையான உள்ள ஒன்றை, பிரபஞ்சமாகத் தோன்றச் செய்வது இந்த மாயை மட்டுமே.

மாயை என்பது சுத்த சூன்யமோ,அல்லது இல்லாத ஒன்றோ அல்ல. சரிபிறகு, இருப்பது என்றோ அல்லது இல்லாதது என்றோ கூற முடியாது. இவ்வகையில் இருப்பது அல்ல ஏனெனில், பூரணமான, மாறுதலில்லாத இறைவனைப் பற்றி மட்டுமே இப்படிச் சொல்ல முடியும் இருப்பதாக.

சரி, இல்லாதது என்றால்? இல்லாத ஒன்றால் எப்படித் தோற்றத்தை உண்டு பண்ண முடியும்? ஆக மாயை என்பது, இருப்பதுவும், இல்லாததுமான, இந்த இரண்டும் அல்லாத ஒன்று.

அதை வேதாந்தத் தத்துவத்தில் அநீர்வசனியம் அல்லது விளக்க முடியாது (உணர வேண்டியதை இப்படிக் கூறலாம்) என்கிறார்கள். இந்த மாயையே பிரபஞ்வத்திற்கு உண்மையான காரணம்.

இறைவன் பிரபஞ்சத்திற்கு அடிப்படைப் பொருளைத் தருகிறார், மாயை அதற்கு நாம ரூபங்களைத் தருகிறது. அத்வைத வேதாந்தத்தில் தனி ஆன்மாவுக்கு இடமில்லை. தனி ஆன்மாவைப் படைத்தது (இருப்பதாக உண்டாக்கியது) இந்தமாயை என்பது அவர்களின் வாதம்.

உண்மையில் தனி ஆன்மாவெல்லாம் இருக்க முடியாது, இருப்பது உண்மையில் ஒன்றே என்றால், நான்வேறு, நீங்கள் வேறு என்றெல்லாம் எப்படி இருக்க முடியும்? நாம் அனைவரும் ஒன்றே. பன்மையைக் காண்பது தான் தீமைக்கான காரணம்.

நான்வேறு, பிரபஞ்சம் வேறு என்று உணர ஆரம்பித்த உடனேயே முதலில் பயம் தோன்றுகிறது. அதைத் தொடர்ந்து துன்பம் உண்டாகிறது. எங்கே தன்னை அல்லாமல் மற்றவனைப் பார்கிறானோ (வேறுபடுத்தி), அவன் வார்த்தையே அது என்றும் வேறுபடுத்திக்கேட்கிறானோ, அது சிறியது. எங்கே பிறரைக்காண்பதில்லையோ, கேட்பதில்லையோ. அது பெரியது. அங்கே பேரானந்தம் இருக்கிறது. சிறியதில் இந்த இன்பம் இல்லை. அத்வைதத் தத்துவத்தின் படி, பிரபஞ்சத்தில் காணும் இந்த வேறுபாடு, இந்தத் தோற்றம் சில காலம் மனிதனின் உண்மை இயல்பை மறைத்து நிற்கிறது. ஆனால், இந்த இயல்பு என்ன வோ மாறுவதே இல்லை.

மிகத்தாழ்ந்த புழுவிலும், மிக உயர்ந்த மனிதனிலும் ஒரே தெய்வீக இயல்பு இருக்கிறது. இந்தத் தெய்வீக இயல்பு மனிதனைவிடப் புழுவிடம் (விலங்குகளிட) அதிகம் இருக்கிறது.

காலம், சூழல் ஆகியவற்றின் நிலைக்கு ஏற்ப பரம்பொருளால் உண்டாக்கப்பட்டதே உலகில் உண்டான அத்தனை தத்துவங்களும், அதனைத் தழுவும் மதங்களும், இதில் உயர்வுதாழ்வு ஏது? என்பதே எனது பார்வை) இதிலிருந்து அத்வைத நெறியே உண்டாகிறது. இதைத் தன்னல மறுப்பு எனச் சொல்லலாம்.

இந்தச் சிறிய நான் என்பதே நமது எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் என்று அத்வைதி சொல்கிறான். இந்த நான் என்பதன் காரணமாகத்தான் வெறுப்பும், பொறாமையும், துன்பமும், போராட்டமும், பிறதீமைகளும் தோன்றுகின்றன.

இந்த நான் எப்போது ஒழிகிறதோ அப்போதாது துன்பமும் நம்மை விட்டு ஒழியும்.

நான் எப்போது அழிந்தது? எப்போது ஒரு பிராணிக்காகக் கூடத்தன் உயிரையே எவனொருவன் தரத்துணிகிறானோ, அப்போது அந்தக்கணமே அவன் அத்வைதிகளின் லட்சியமான பூரண நிலையை அடைகிறான்.

அறியாமைத்திரை விலகுகிறது அவனும் பிரபஞ்சமும் ஒன்றே என்ற நிலை வந்து விடுவதொடு, அந்தத் தோற்றம் மறைந்து விடுகிறது. தான் யார் என்ற உண்மையை அறிந்த பின்!

பிறகு என்ன? அழைப்பு வரும் வரை இந்த உடலிலேயே இருக்கவேண்டியது தான். இது தான் ஜீவன் முக்தி என்பதாகும். இப்படி ஜீவன் முக்தி அடைந்தவர் முன்பு, மீண்டும் இந்தமாயைத் தோன்றினால் அவர்கள் அதில் மயங்கமாட்டார்கள்.

அவர்கள் அதுகானல் நீரென்பதை அறிந்தவர்கள், கண்களும், புலன்களும் வேலை செய்யு ம்வரை, அவன் அந்தக் கானல் நீரைப்பார்ப்பான். பிரபஞ்சம்மறைந்து விட்ட நிலையில் அவனை, இந்த மாயையான துன்பம் ஒன்றும் செய்யாது.

என்றும் அவன் சத் - சித் ஆனந்தமாக, தனியிருப்பாக, தனியறிவாக, தனி ஆனந்தமாக மாறிவிட்டான். இந்த நிலையை அடைவது தான் அத்வைத வேதாந்தத்தின் லட்சியம் என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

மார்க்சிய அறிஞரான ஏ. கேஸ்வரன் அத்வைதத் தத்துவத்தை தமது வலைப்பூ பக்கத்தில் மித் தெளிவாக விளக்குவார். அவர் கூறும் பொழுது, அநித்தியம், நித்தியம், நித்திய அநித்திய விவேகம், மாயை, பிரம்மம் சத்தியம் உலகம் மித், தத்துவமசி, ஜீவபிரம்ம ஐக்கியம், சம்சாரம், பன்மையே வியவகார உலகம், ஒருமையே பரமார்த்த உலகம், சத்சித் ஆனந்தம், முக்தி ஆகியசொற்களின் பொருளை தெரிந்து கொண்டாலே அத்வைதத்தின் சாரத்தை அறியலாம். இந்த உலகத்தில் காணும் பொருட்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன. அவை நிலைத்த தன்மையற்றவை (அநித்தியமானவை). நிலையற்ற இந்த உலகப் பொருட்களால் கிடைக்கும் இன்பமும் நிலையற்றவை.

விருப்பும், வெறுப்பும் நிறைந்துள்ள இந்த உலகம் கனவு போன்றதே. கனவில் காணும் உலகம் பொய்யானதே அதே போல் நனவில் காணும் உலகமும் மாயையானதே. இந்த உலகின் நிலையற்ற பன்மை தன்மையினால் தான் அச்சமும் துன்பமும் (சம்சாரப்பந்தம்) நேர்கிறது.

நிலையற்றப்பொருட்களால் மக்களுக்கு அமைதி கிடைக்காது. அதனால் நிலையான பொருளை (நித்திய அநித்தியவிவேகம்) நாடிச்செல்ல வேண்டும். நிலையான பொருள் (நித்தியமானது) ஆத்மா. மனிதன் தன்னை உடலாக நினைத்துக் கொண்டிருக்கிறான்.

இந்த உலகம் உண்மையானது (சத்தியமானது) என்ற தவறான நினைப்பில் இருக்கிறான். இதுமாயையானது. இதற்கு இருப்புக்கிடையாது, இருப்பிடம் இல்லாமலும் இல்லை, இந்த இருவகைப்பட்டதன்று, இருவே மாயையின் நிலை. இந்த மாயையின் அடிப்படையில் தோன்றியதே உலகம். பிரம்மம் சத்தியம் உலகம் அசத்தியம் (பிரம்மம் சத்தியம் உலகம் மித்)

தன்னை உடலாகக் கருதுவதைவிடுத்து, ஆத்மா என்ற நிலையான தன்மைப் பெற்றவன் எனபதை மனிதன் உணர வேண்டும். அந்த ஆத்மா தனித்த ஆத்மா கிடையாது. அது பரமாத்மாவின் (பிரம்மத்தின்) விலகலாகத் தோன்றுகிறது. உண்மையில் பரமாத்மா மட்டுமே உண்மையானது. பிரம்மத்திற்கு வேறான ஒன்றுக்கு இருப்புக் கிடையாது.

இருப்பாகத் தோன்றுவது மாயையின் தோற்றமே. நீயே அது (தத்துவமசி) என்கிற வேதாந்த மகாவாக்கியத்தை உணர்ந்து நானே பிரம்மம் (ஜீவபிரம்ம ஐக்கியம்) என்பதை அறிவதே, துன்பமயமான (வியவகார உலயம்) இந்தப் பன்மை உலகத்தில் இருந்து விடுபடுவதே (முத்தி) விடுதலையாகும்.

வியவகார உலகில் தான் வேறுபாடுகள் பரமார்த்த உலகில் அனைத்தும் ஒன்றே, ஒருமையே. ஞானம் பெறுவதற்குக் கர்மம் (செயல்) துணைபுரிகிறது. அந்தச்செயல் பற்றில்லாமல் அதாவது பலன் கருதாமல் செய்தால் அந்தச் செயல் கர்ம வினையை ஏற்படு நாகலிங்கய்யாவின் நூல்களை அணுகுவதற்கு உதவியாக இருக்கும்.

நாகலிங்கய்யாவின் வாழ்வினையும், அவரது மகனார் முத்தராமலிங்கம் அவர்களின் வாழ்வினையும் அவர்களின் சீடர்கள்மற்றும் இவர்களோடு வாழ்ந்த வேதாந்திகளையும் இந்நூலின் செய்திகளை விட இன்னும் ஆராயப்பட வேண்டியுள்ளது.

மகாத்ம சரிதாமிருதம் எனும் நூலில் பல ஞானிகள் குறித்த முத்துராமலிங்கய்யா வின் தனிப்பாடல்கள் தற்போது கிடைக்கின்றன. பிறவேதாந்த இலக்கியங்களின் வாழ்த்துப்பாடல்களிலும் இவர்களின் பாடல்கள் மற்றும் ஞானச்சிந்தனைகள் தோண்டத் தோண்டக் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன.

அவற்றைத் தேடி முழுமை செய்ய வேண்டிய பொறுப்பு நமக்குள்ளது. இம்மகான்களின் அருட்கொடை அலாதியானது. மனநிம்மதியும், தேடும்சுகம் நல்லதாயின் அதனைத் நத்தருளும் அருத்தாது.

இந்தச்செயல் ஞானத்திற்கு வழிகாட்டாது, ஆனால் ஞானம் பெறுவதற்குத் தேவைப்படுகிற மனத் தூய்மையை (சித்தசுத்தி) ஏற்படுத்தும். மனத்தூய்மை பெற்றவன் ஞானயோகத்திற்குத் தயாராகிறான். பிறகு, துன்பமயமான பன்மைத் தன்மை உடைய வெளி உலகத்தில் இருந்து விடுபட்டு இயல்பிலேயே

என்றும் ஆனந்தமயமானவன் (சத்சித் ஆனந்தன்) என்பதை அறிந்து இன்பத்தில் திழைக்கிறான்.

பிரம்மத்தில் இருந்து பிரிந்தாகக் கருதுவதை விடுத்து பிரம்மாய் இருப்பதை (ஒருமை) உணர்வதே ஞானமாகும். இந்த ஞான மேகம் சாரத்தில் இருந்து (முக்தியை விடுதலைத்தருகிறது. என்பார்.

நாகலிங்கய்யா அவர்கள் தமிழ் மொழி மற்றும் வட மொழிப்புலமையில் கை தேர்ந்தவராக இருந்தமையால், அவர்களின் நூல்களில் பொருள் வைப்பும், சொற்பிரயோகங்களும், காட்சிப்படுத்தலும் புரிந்து கொள்வதற்குச் சிறிது கடினமானதாக இருக்கும். மேற்கண்ட எளிமையான விளக்கங்கள் கண்டனூரில் கொடை ஞானமாகயும் கண்டனூரில் இவர்கள் குடி கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் வாழ்வினை அறிந்து தெறிவதும், ஞானத்திருவாக்குகளை உணர்வதும் வாழ்வின் பெரும் பாக்கியமாகும். இந்த நூல் மனதின் அழுக்குகளை நீக்கி, பரமானந்தச்சுகமளித்து, நோய்களிலிருந்து முழுமையும் விடுபடச் செய்து, செல்வம், புகழ் என அனைத்தும் தரவல்லதாகும். படித்து ஞானம் பெறுவோம்.

- முனைவர் செ.சு.நா. சந்திரசேகரன்

அத்வைதி நாகலிங்கய்யாவின் வாழ்க்கை

செட்டிநாட்டுப் பகுதியில் வாழ்ந்த அறிஞர்கள் பலர். இவர்களில் பலர் இனங்காணப்பெற்று வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். சிலர் இனம் காணப்பெறவில்லை. அவர்களுள் கண்டனூர் நாகலிங்கய்யாவும் ஒருவர். அவர் தமிழ்ப்பணியும் இறைப்பணியும் ஆற்றிய பெருமகனார். நிறைமொழி மாந்தராகவும் வாழ்ந்தவர். அவருடைய வாழ்வையும், தமிழ்ப் பணியையும் தத்துவக்கருத்துகளையும் இப்பகுதி விளக்குகிறது.

காரைக்குடியிலிருந்து பத்துக் கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது கண்டனூர் இது காரைக்குடியிலிருந்து அறந்தாங்கி செல்லும் பாதையில் அமைந்துள்ளது. கண்டன் எனும சோழமன்னன் இங்கு வந்து தங்கிச் சிவவழிபாடு செய்தமையால் இவ்வூர் கண்டனூர் எனும் பெயர் பெற்றது.

1. தலபுராணவேந்தர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை எழுதிய 'வீரவனப் புராணம் எனும் நூலில் சோழன் முக்தியடைந்த படலத்தில்' கண்டனூரின் பெயர்க்காரணம் பின்வருமாறு கூறப்படுகிறது.

"அன்னவம் கானம் முற்ற
அழிந்துமா நகர் உண்டாக்கிப்
பன்னமும் குடிகள் ஏற்றிப்
பல்வளங் களும் பொருந்தித்
தன்னமும் குறைவுறாத
தன்பெயர் விளங்கும் ஆற்றால்
கல்நவில் தடம்புயத்தான்
கண்டனூர் எனம் பேர் இட்டான்" 2

அருணாச்சலக் கவிராயர், நாகலிங்கலிங்கய்யா மீது நாகலிங்க தேசிகர் பிள்ளைத்தமிழ் எனும் நூலொன்று எழுதியுள்ளார் அந்நூலிலம் கண்டனூரின் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன. மயிலாடுபல்வளத்தாற்பொலி கண்டனூர் என்றும் பொறையில் சிறந்தோர் உள்ள மகிழ்பூப்ப மாதம் மும்மாரி பொழியுங் கண்டனூர் என்றும் சிறப்பிக்கப் பட்டுள்ளது.

3. கண்டனூர் முன்பு கண்டநல்லூர் என்று அழைக்கப்பட்டு வந்திருக்கின்றது. இதைத் தமிழ்நூல் விவர அட்டவணை.

4. கொண்டும் நாகலிங்கய்யா எழுதியுள்ள நூல்களின் மேல், ஊரின் பெயர் கண்டநல்லூர் என்றும் எழுதப்பட்டிருப்பது கொண்டும் தெளியலாம்.

நாகலிங்கய்யாவின் பிறப்பு

கண்டனூரில் பெரும் செல்வந்தராகக் தனவைசியக் குலத்தில் பிறந்தவர் பெரியகருப்பன் செட்டியார். இவரது மனைவி சொர்ணவல்லி என்ற பொற்கொடியாள். இவர்கள் இருவரும் சைவத் தொண்டு செய்வதில் பெரும் நாட்டம் உடையவர்கள். 'சூரக்குடி' கோயிலைக் குலக்கோயிலாகக் கொண்ட மரபினர். கண்டனூர் அருள்மிகு சுந்தரேசுவரரைத் தினமும் வணங்கிச் சிறப்புற வாழ்ந்து வந்தவர்கள். இவர்களுக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர் நாகலிங்கம் ஆவார். அருணாச்சலம், இராமசாமி என்பவர்கள் நாகலிங்கத்திற்கு முன்பிறந்த இரண்டு மகன்கள் ஆவார்கள். இது பற்றிய செய்தி நாகலிங்க தேசிகர் பிள்ளைத் தமிழில் காணப்படுகின்றது. மூத்தவர் அருணாச்சலம், அடுத்ததாக இராமசாமி, கடைசியாக நாகலிங்கம் ஆவார்கள். இதனை,

"காசிமா நகர் தனிற்
றங்குகதி பெற்றவருணா
சலதேசி கற்குஇளைய தம்பியென" (5)

என்ற பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இப்பாடலில் இளைய தம்பியெனக் கூறுவது நாகலிங்கய்யாவையாகும்.

இளமை வாழ்க்கை

அருணாச்சலம், நாகலிங்கம் இருவரும் தனவைசியர்களுக்கு உரிய தொழிலான வாணிபத் தொழிலை இளமையில் செய்து பொருள் ஈட்டினர். அருணாச்சலம் தனது நண்பருடன் திருநெல்வேலியில் வாணிபம் செய்தார். இராமசாமி எங்கு வாணிபம் செய்து பொருளீட்டினர் என்பது தெரியவில்லை. நாகலிங்கம் திருநெல்வேலியில் அச்சியந்திரசாலை வைத்து நடத்தியதாகச் செவிவழிச் செய்தி மூலம் அறிகின்றோம்.

அருணாச்சலய்யாவின் வாழ்வு

நாகலிங்கய்யாவின் தமையர் என்ற முறையிலும், கோவிலூர் ஆண்டவரிடம் நெருங்கிப் பழகியவர் என்ற நிலையிலும், பல அற்புதச் செயல்களை நடத்தியவர் என்பதாலும் இங்க இவரைப் பற்றிக் காண்பது இன்றியமையாததாகும். அருணாச்சலய்யா தேவகோட்டை அருணாச்சலம் (துறவு சாமிகள்) என்பவருடன் நடபுக் கொண்டிருந்தார். இவர்கள் இருவரும் சேர்ந்து திருநெல்வேலியில் பலகாலம் வாணிபத்தொழில் செய்தனர். இருவரும் திட்டமிட்டுக் கோவிலூரை அடைந்து, ஸ்ரீலஸ்ரீமுத்து ராமலிங்க ஆண்டவரைச் சரணடைந்து, மாணவர் ஆயினர். அன்றுமுதல் இருவரும் வீடுவாசலை மறந்தனர். பெற்றோரைத் துறந்தனர். ஆசிரியர் அருளால் அவரிடம் பஞ்சதகி, வைகல்யம்

முதலிய வேதாந்த சாத்திரங்களைக் கற்றுத் தெளிந்தனர். திருப்பாதிப்புலியூர் துத்துச்சரவண சுவாமிகளிடம் மூவாயிரத்து இருநூறு (3,200) வாசிட்டம் கற்றனர். மிக்க விரக்தியினால் பரணிப்பிரபந்தம் என்னும் நூலும் பாடம் கேட்க விரும்பினர். அந்நூல் அவர்களுக்கு எங்கும் கிடைக்கவில்லை.

பரணிப்பிரபந்தம் எங்கே கிடைக்கும் என்ற விசாரணையில் அவர்கள் ஈடுபட்டனர். அப்பொழுது குன்றக்குடி ஆதினத்தின் முப்பத்தைந்தாவது பட்டத்து மடாதிபதியாக இருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகதேசிகரிடம் அந்நூலின் பிரதி ஒன்று இருப்பதை அறிந்து அவரிடம் சென்றனர். அவரை வணங்கி நூல் பிரதி வேண்டினர். அதற்கு அவர் பரணி படித்துத் துறவு கொள்ளப் போகின்றீர்களோ என்று வேடிக்கையாகக் கேட்டு, அந்நூலைக் கொடுத்து, ஆசி கூறி அனுப்பினார். இருவரும் பதில் பேசாது கோவிலூருக்குச் சென்றனர். ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க தேசிகரிடம் அந்நூலைக் கொடுத்துப் பாடம் கேட்டுத் தெளிந்தனர். விரைவில் துறவு பூண அவர்தம் உள்ளங்கள் துடித்தன. அதற்கேற்ற வாய்ப்பை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர்.

ஒருநாள் அவர்கள் தம் குருவிடம் பாடம் கேட்டு இரவு உணவு உண்டபின் அவரது திருவடிகளை வருடியவாறு இருந்த நேரத்தில் துறவுபூண அனுமதி கேட்டனர். அவரும் அதற்கு இசைந்து அனுமதி வழங்கினார். அவர்கள் அவ்வாணையைத் தலைமேற்கொண்டு வணங்கிக் கொற்றவாளீர் ஆலயத்தினை அடைந்து வழிபட்டனர். தம் துறவு முற்றுப்பெற்று நன்கு விளங்க இறைவனையும் இறைவியையும் வேண்டினர். பிறகு நெடுங்கடி என்னும் ஊரில் ஆதிகுரு தட்சிணாமூர்த்தி சந்நிதியில் துறவு மேற்கொண்டு சிதம்பரம் சென்றனர்.

சிதம்பர வாழ்க்கை

கண்டனூர் அருணாச்சல சுவாமிகளுக்கச் சின்னத் துறவு ஆண்டவர் என்ற பெயர் ஒன்றும் உண்டு. இதை

"அருணாச்சலமென்னு மியற்பெயர்
தன்னோடு துறவு
சாமியென்னும் பெயர் மேவு தயாநிதி
தம்பியெனுந் தகையோ". (7)

என்ற பாடல் மூலம் அறியலாம். கோட்டையூர் அருணாச்சல சுவாமிகளுக்குப் பெரிய துறவு ஆண்டவர் என்று பெயர். இவ்விருவரும் சிதம்பரம் ஈசானிய மடத்தில் நீண்ட காலம் தியானத்தில் இருந்தனர். ஆண்டுதோறும் கோவிலூரில் நடைபெறும். குருபூஜை, திருநெல்லைஅம்மை திருவிழா ஆகியவற்றிற்குச் சென்று திரும்புவர்.

துறவாண்டவர்களின் அற்புத நிகழ்ச்சிகள்

சிதம்பரத்தில், ஒருநாள் சுவாமிகளிருவரும் பிச்சை எடுக்கச் சென்றனர். கணிகையர் வீட்டு மாதர் ஒருத்தி, சுவாமிகளின் உடல் தோற்றத்தில் மயங்கி, அவர்களை வீட்டிற்கு உள்ளே வந்து பிச்சை எடுத்துச் செல்லுமாறு கூறினாள். வீட்டிற்குள் சென்றதும், கணிகையவள் தவறாக நடந்து கொண்டாள். இதைச் சிறிதும் எதிர்பார்ப்பாத சுவாமிகள் உடனே அமர்ந்து தியஸனத்தில் ஈடுபட்டனர். இவர்களின் சந்தியாச விரதத்தைக் கண்டு வியந்து, கணிகையவள் இவர்கள் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டாள்.

இறைவன் உணவு தந்தது

சுவேதாரண்ய ஆலயத்தில் ஒருநாள் அர்த்தசாம தரிசனம் செய்து, தீர்த்தத்தில் இரண்டு கை நீரருந்தி குடவரையில் சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டு நித்திரை செய்தார்கள். அன்று பிச்சை கிடைக்காது சோர்ந்து இருந்தனர். அப்போது அந்தணர் ஒருவர் சர்க்கரைப் பொங்கல் (அன்னம்) கொண்டு வந்து இருவருக்கும் கொடுத்தார். அதைப் பெற்றுத் தீர்த்தங்கரையில் வைத்து அதை உண்டு மீண்டும் நித்திரை செய்தனர், மறுநாள் காலை எழுந்து கடன்களை முடித்து, கோயிலுக்குள் சென்றனர். இரவு வந்த அதே அந்தனர் இவர்களைப் பார்த்து இரவு எங்கு தங்கியிருந்தீர்கள். என்று துறவுசாமிகள் கேட்டனர். அதற்கு அவர் நான் இரவு வரவில்லை. அன்னமும் தரவில்லை என்றார். அப்போதுான் உணர்ந்தனர் இருவரும். இரவு வந்தது அந்த சிவபெருமானே என்று.

இவ்விதமாகத் தில்லையில் இருவரும் நீண்டநாள் வசித்து வந்தனர். ஒருநாள் நடராசப் பெருமான் சின்னத் துறவாண்டவர் கனவில் காட்சியளித்து, அவரைக் காசிக்குச் சென்று, கங்கையில் நீராடி விசுவநாதரை வழிபட ஆணையிட்டார். அங்ஙனமே அவர் பெரிய துறவாண்டவரிடமும் கோவிலூர் முத்துராமலிங்க ஆண்டவரிடமும் அறிவித்துவிட்டுக் காசிக்குச் சென்றார்.

ஒருநாள் அவர் திருவாவடுதுறை மடத்து நமச்சிவாயத் தம்பிராணிடம் "குரோதி ஆண்டு ஆனிமாதம் 31 ஆம் தேதி சுக்ரவாரம், பத்து நாழிகைக்கு இத்தேகத்து உயிர்மறையும் இதனை எனது குருநாதர் கோவிலூராண்டவருக்குத் தெரிவிக்கவும்" என்று கூறினார். நமச்சிவாய தம்பிரானும் அதற்கு இசைந்து இரண்ட அடியார்களை அவருக்குத்

துணையாக அமர்த்தினார். சுவாமிகள் கூறியபடி அவரது உயிர் அவர் குறிப்பட்ட நேரத்தில் மறைந்தது. உடனே அவரது பூத உடலைக் கல்தொட்டியில் அடக்கம் செய்து, கங்கையில் இறக்கிவிட்டுச் செய்தியைக் கோவிலூர் ஆண்டவருக்குப் பணிவாகக் கடிதத்தின் வாயிலாகத் தெரிவித்தார்.

"காசிமாநகர் தனிற்
தங்குகதி பெற்ற அருணா
சல தேசிகர்"

என்ற பாடல் இவரின் இறுதிக்காலம் பற்றிய செய்தியினை உறுதிப்படுத்துகின்றது.

நாகலிங்கய்யாவின் கல்வி

"குலகுருவாய் வணிகர்தவக் கொழுந்து தலையெடுப்ப
கூடு முத்துராமலிங்க குருவினுப தேசங்
கொண்டு கண்டனூர் வளரும் குன்றாயெழுந்த"

என்ற பாடல், நாகலிங்கய்யாவின் குருநாதராக, கோவிலூர் ஆண்டவராகிய ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேவிகர் இருந்திருக்கின்றார். என்பதை உணர்த்துகின்றது. கோவிலூர் ஆண்டவரை ஞானகுருவாய் ஏற்றுக்கொண்டு பல கலைகளையும் வேதாந்த பாடங்களையும் கற்றார்.

"குற்றமே தாயினுமுறா துபலகலைகளுங்
கோவிலூர்க் குரு (வி)னருள் கை
கூட்டப் பயின்று நீ"

என்ற பாடல் கொண்டும் நாகலிங்கய்யா வேதாந்த பாடம் முழுவதையும் கற்றிருக்கின்றார் என்று தெரியவருகின்றது. இவருடைய கல்வியின் திறத்தைக் கூறும் பொழுது,

"குறையாக் கல்வி குறித்தாதி
சேடன்புகழும் நாகலிங்க சேயே"

எனப் புகழ்ந்துரைக்கின்றார் அருணாசலக் கவிராயர். சைவ, வேதாந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் இவரைச் சுற்றியே இருப்பார்கள. கண்டனூரில் வேதாந்த மடம் கட்டியவுடன் அங்கு தினமும் வேதாந்த பாடம் சாதுக்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதனை

"மெய்ஞானம் வினையுநிலமே வருக அருள் வேதாந்
தர்களை மிகச் சேர்த்துப்
புரவுபூணும் பெருந்தகையே பொன்னே"
"நீ செய்த பாராயணஞ்செய் அடியார்
பயிலும் கூட மெங்கும்"

என்ற இப்பாடல்கள் வழித் தெளியலாம்

நாகலிங்கய்யாவின் சீடர்கள்

நாகலிங்கய்யாவின் சீடராக அவரது மகனார் முத்தராமலிங்கய்யா மற்றும் பழனியப்பச் செட்டியார், வீரப்பச் செட்டியார், சிவகாமிநாதபிள்ளை போன்றோர் இருந்திருக் கின்றனர் என்பதை "வாசுதேவர் மனனம் என்ற நூலின் முன் காணப்படும் பாடல்கள் கூறுகின்றன. (15) அடியார்கள் பலர் இருக்கும் செய்தியினை,

"அடியார்களின் (அக)ங் மதயானைதனை ஞான அங்குசத்தாற்
படிமிசையே செய்தருளு நாகலிங்க தேசிகனாம் பரமயோகி"

"பார் நிறையடியருயத் தமிழ்க்கவியாற் பண்ணினன் கண்டனூர்ப் பதிவாழ்தார் நிறைதோளானா கலிங்கப்பேர் தாங்கினேன் நீங்கிலாதவனே"

என இப்பாடல்கள் உணர்த்துகின்றன.

நாகலிங்கய்யா திருமணம்

நாகலிங்கய்யா சிறிது காலம் இல்லற வாழ்வில் இருந்தார். இவருக்குத் தனவைசியர் முறைப்படித் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. நாகலிங்கய்யாவின் துணைவியார் பெயரை அறிய முடியவில்லை. இவர்களுக்கு முத்துராமலிங்கம், பெரிய கருப்பன் என்று இரண்டு மகன்கள் இருந்தார்கள். முத்தராமலிங்கம் தந்தையைப் போன்று சிறந்த புலவராகத் திகழ்ந்தார். நாகலிங்கய்யாவைக் குருவாகக் கொண்டு கல்வி பயின்றார். நிறைய நூல்கள் இயற்றித் தந்திருக்கின்றார். நாகலிங்கய்யா சிறிது கால இல்வாழ்க்கைக்குப் பின் துறவு வாழ்வுதனை மேற்கொண்டார்.

நாகலிங்கய்யாவின் இறைப்பணி

இவரின் இறைத்தொண்டும் குறிப்பிடத்தக்கதாகும். "நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்வதில் பெரும் விருப்பமுடையவர்கள். இவர்களைப் போலத் தாங்கள் தேடிய பொருளைக் கோயிலுக்கும் கோயிலைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும், கோயிற் கலைகளுக்கும் செலவிட்டோர் எவரும் இரார். தொழில் செய்யும் போது, தெய்வங்களுக்கு என்று பங்கு வைத்து அதனால் வரும் வருமானத்தை நெடுகலும் அறம் செய்யும் பாங்குடையவர்கள் நகரத்தார்கள்" (18) என்பதற்கிணங்க நாகலிங்கய்யா இறைப் பணிக்காகப் பெரும் பொருளைச் செலவு செய்துள்ளார்.

நாகலிங்கய்யா, தமது குலக்கோயிலான சூரக்குடி நகரச் சிவன் கோயிலை முதன்முதலில் திருப்பணி செய்துள்ளார். சூரக்குடி கோயில், முன்பு மிகவும் சிறிய கோயிலாக

இருந்திருக்கின்றது. அதை முழுவதுமாக தமது பொருட் செலவிலேயே பெரிதாகக் கட்டியிருக்கின்றார். இதைத்

"தொன்மையாம் கர்னாபுரி சூரைநகர்தனிற்
சூள் திருப்பணிகள் செய்தும்"

என்ற பாடல் மெய்பிக்கும் நாகலிங்கய்யாவின் மகனார் முத்தராமலிங்கய்யாவும் இக்கோயிலில் திருப்பணி செய்துள்ளார். இக்கோயில் 1898 ல் முதன்முதலாகக் குடமுழுக்குச் செய்யப்பட்டுள்ளது. இக்குடமுழுக்கு விழாமலரை முத்துராமலிங்கய்யா இயற்றித் தந்துள்ளார்.

நாகலிங்கய்யா இராமேசுவரம் சிவன்கோயிலில் ஒரு திருச்சுற்று மண்டபத்தைக் கட்டித் தந்திருக்கின்றார். என்று நாகலிங்கய்யா வழிவந்த பேரா. நாகப்பா நாச்சியப்பன் அவர்கள் கூறுகின்றார்.

இராமேசுவரத்தில் காணப்படும் நகரத்தார் நகரவிடுதிக்காக நாகலிங்கய்யா அவர்கள் முதன்முதலில் நிலம் வாங்கினார்கள். அந்நிலத்தில் நகரவிடுதியை மிகுந்த பொருட்செலவில் கட்ட ஆரம்பித்தார். அக்கட்டிடத்தை அவரது மகனாரே நிறைவுசெய்து வைத்தார். நகரவிடுதியின் நிலம் இன்றும் முத்தராமலிங்கய்யா பெயரிலேயே இருக்கின்றது என்பர் நா. இராமநாதன் செட்டியார்.

நாகலிங்கய்யா கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இச்செய்தியை,

"காரைக்கொடி மாடந்தொடு சீர்க்கல்லாங்
குடியும் வணிகர் குலக்
கண்ணாய் ஞானச் சுடரொளியை காணு
நீவாழிந் நகருஞ்

சூரைக் குடியுமெனப் புலவர் சொலுமுத்
தலத்துந் தொழும் நிதஞ்
சுத்தபரமாத் துவிதர்களுந் தொண்டு
புரிந்து சூழ்வர நீ”

என்ற பாடல் விளக்கமாகக் கூறுகின்றது. தினந்தோறும் காரைக்குடி, கல்லாங்குடி, சூரக்குடிச் சிவன் கோயில்களைத் தொழுது பின் பரமாத்துவிதர்களுக்குத் தொண்டுபுரிந்து, தம் கடமைகள் மூலம் தன்னைக் கண்டு கொண்டார்.

நாகலிங்கய்யா அகத்துறவு, புறத்துறவு ஆகிய இரு நெறிகளிலும் சிறிதும் பிறழாது வாழ்ந்து வந்தவராவார். இவரது ஞானநெறியினைப் கண்டவர்கள் சுவாமிகளின் அடியவர்களாகச் சேர்ந்தனர். கண்டனூர் சின்னத்துரை சுவாமிகள் இவரது சிறந்த அடியார்களில் ஒருவராவார். இவர் சிதம்பரம் ஈசானியமடத்தில் தங்கியிருந்து கோயிலின் வடக்குக் கோபுரத்தில் மனன தியாநாதிகளைச் செய்து வாழ்ந்து வந்தவர். சின்னத்துறவு ஆண்டவரிடம் நெருங்கிய அன்பு கொண்டிருந்தவர். சின்னதுறவு ஆண்டவர் முக்தி அடைந்ததும் கண்டனூர் வந்து நாகலிங்கய்யாவின் சீடராக மாறினார். இதனை நாகலிங்கய்யா மடத்திலுள்ள இவரது ஓவியம் கொண்டு அறிய முடிகின்றது.

முத்துராமலிங்கய்யா நாகலிங்கய்யாவின் சீடர்களில் ஒருவர் ஆவார். இதை மாக்த்ம சரிதாமிருதம் என்ற நூலில்

“சிந்மய தாங்குணச் செல்வரிவரேயெனச்
செகமெலாம் பரவ நின்றுஞ்
சிரவணம நநாதி சீடருக் கொழியாது
செப்பியுங் கடைய னேனைத்
திருவடிக் கடிமையாய்ச் செய் நாகலிங்க குரு
தேசிகனான வெந்தை”'

என்று அவரே கூறுகின்றார்.

கண்டனூர் வேதாந்த மடம்

கண்டனூரில் நாகலிங்கய்யா தம் காலத்தில் வேதாந்த மடம் ஒன்றைத் தோற்றுவித்தார். அதை மக்கள் அனைவருக்கும் வேதாந்த பாடம் கேட்கும் இடமாக மாற்றினார். சாதுக்களைக் கொண்டு வேதாந்தங்களை எடுத்துக்கூறும்படிச் செய்தார். இம்மடமானது ஏறக்குறைய 120 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். இது குறித்து முத்துராமலிங்கய்யா தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். இம்மடம் கட்டிய நாள் குறித்து அதில் கூறும் பொழுது,

"மன்னும் வெகுதானியா வருடமுறும் வைகாசிமாத
மிருபத்துநாலோ
டுன்னு தேதியினிலே நாகலிங்கய்யன் மெய்யுரமான
அடியார்களு
மின்னு நற்செல்வ வைங்கரணி ருக்கின்றதோர் வேதாந்த
மடமியற்றிப்
பன்னுகிர கப்கிரவேசமது செய்துதன பதியாயிருந் தனர்களே"

என்றும்,

"அண்டர்கள் பரவும் கண்டனூரதன அருள் வடிவா
கவேமடத்தில்
வண்டமிழ் நாகலிங்க தேசிகளை வணங்கி முப்போதும்
வாழ்ந்திடுவோம்"

என்றும் கூறியிருக்கின்றார். நாகலிங்கய்யா முக்தி அடைந்தவுடன் இம்மடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார். அடக்கத்தின்மேல் சமாதிலிங்கம் வைக்கப்பெற்றுக் கட்டப்பட்டுள்ளது. கருவறையின் மேல் விமானம் எழுப்பப்பட்டுள்ளது.

நாகலிங்கய்யா முக்கதியடைந்த பிறகு முத்துராமலிங்கய்யா மடத்தை நிர்வாகம் செய்து வந்தார். சாதுக்கள் பலர் இங்கு தங்கியிருந்து வேதாந்த பாடம் கற்றுள்ளனர். முத்துராமலிங்கய்யா பெரும் வணிகர்களிடம் இம்மடத்திற்காகப் பணம் பெற்று அதை, மடத்தின் பூசை மற்றும் நிர்வாகத்திற்காக வங்கியில் போட்டு வைத்துள்ளார்.

முத்துராமலிங்கய்யா தனது இறுதிக்காலம் பற்றிய சிந்தனை வந்தவுடன் தன் அடியார்களிடம், தன் உடலை நாகலிங்கய்யா வின் சமாதிக்க எதிராக, நந்திக்கு அடியில் ஒடுக்கம் செய்யுங்கள் என்று கூறினார். அதன்படி அவர் முக்தியடைந்ததும் நந்திக்கு அடியில் ஒடுக்கம் செய்தனர்.

கண்டனூரிலுள்ள மடத்தின் கருவறைச் சுவரில் ஒரு அடியாரின் சிலை ஒன்று காணப் படுகின்றது. அது கோவிலூர் ஆண்டவின் சிலையாகும். சுவரின் மேல் சின்னத்தரை சுவாமிகளின் உருவமும், சின்னத்துறவு சுவாமிகளின், உருவமும் ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளன.

சீவன்முக்திப்பிரகரணம் என்ற நூலுக்குப் பாயிரம் எழுதிய அடியார் ஒருவர் இம்மடம் பற்றிய செய்தியினைக் கூறியுள்ளார். இதனை

"மண்ணிற் பெரியோர் வசிப்பதற்கிடமாய்
வேதார்ந்த ஞானமடமும் வியப்புடன்
ஆதாரமதாய் அமைந்த அருளிறை"

என்ற பாடல் மூலம் அறியலாம்.

யோகி பட்டம்

நாகலிங்கய்யாவிற்கு அவரது சீடர்களாலும் மக்களாலும் "யோகி" என்ற பட்டம் வழங்கப் பெற்றிருக்கின்றது. இலக்கண இலக்கியத்திறமை கொண்ட அவருக்கு "அய்யா" என்ற பட்டமும் அவரின் அரும்செயல்களைக் கருத்தில் கொண்டு யோகி எனும் பட்டமும் வழங்கப்பட்டிருகின்றன. இதை

"கண்டனூர் மேவு ஞானபாவலனா நாகலிங்க யோகியுமே
பாடலாய்ப் பணிந்தான் மாதோ"
"படிமிசையே செய்தருளு நாகலிங்க தேசிகனாம் பரமயோகி"
என்ற பாடல் கொண்டு அறியலாம்.

வாக்குக் பலிக்கும் திறன்

நாகலிங்கய்யாவிடம் ஆசிபெற வரும் மக்கள் தங்களின் குறைகளையும், தேவைகளையும் கூறுவர். முக்காலமும் உணர்ந்த பரமயோகியான நாகலிங்கய்யா நேரே பார்த்தவாறு எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை அறிந்து தேவையானவற்றை கூறி ஆசி வழங்குவார். இவரிடம் இருக்கும் இந்த அற்புத ஆற்றலால் குறைகள் நீங்கப்பெற்று, தன் வாழ்க்கையைச் செம்மையாக அமைத்துக் கொண்டவர்கள் பலராவர். மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களை நல்வழிப்படுத்த வந்த மாபெரும் ஞானியாக வாழ்ந்திருக்கின்றார். இவரின் எளிமையையும், தத்துவார்த்தச் சொற்பொழிவுகளும், மக்களை வெகுவாகக் கவர்ந்து இவரிடம் சீடர்களாக ஆக்கியது.

அற்புத நிகழ்ச்சி

நாகலிங்கய்யா மடத்தில் பூசை வழிபாடுகள் செய்யும் அன்பர் பலமுறை கோயிலுக்குள் சமாதியின் மேல் நாகப் பாம்பு இருப்பதைக் கண்டிருக்கின்றார். பார்த்த கொஞ்ச நேரத்தில் பாம்பு காணாமல் போய்விடுகின்றது. நாகலிங்கய்யாவின் பாம்பு வடிவில் வந்து உலவிச் செல்லுகின்றார் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

நாகலிங்கய்யாவின் குருபூசை முன்பு வெகு சிறப்பாக நடந்துள்ளது. கோவிலூர் சுவாமிகள் முன்பு இந்து வந்து குருபூசையில் கலந்து கொண்டு செல்வார்கள். சித்ரா பௌர்ணமி தினத்தில் நாகலிங்கய்யாவிற்குக் குருபூசை போடப்படுகின்றது. காலையும், இரவும் சிறப்புப்பூசைகள் செய்யப்படுகின்றன.

முக்தியடைந்தது

வேதாந்த நூல்கள் பல படைத்த கண்டனூர் நாகலிங்கய்யா பிறந்த தினம் பற்றிய செய்திகள் கிடைத்தில. இவரின் முக்தியடைந்த காலம் குறித்துமு மகாத்ம சரிதாமிருதம் எனும் நூலும், ஸ்ரீவீரசேகர பிள்ளைத்தமிழும் கூறுகின்றன.

அருணாச்சல சுவாமிகள் (சின்னத்துறவு ஆண்டவர்) 1845 ஆம் ஆண்டு அதாவது கலிவருடம் 4945 ஆம் ஆண்டு குரோதித் தமிழ் வருடம் ஆனி மாதம் 31 ஆம் தேதி வெள்ளிக்கிழமை துவாதசி திதியில் ரோகினி நட்சத்திரத்தில் முக்தி அடைந்தார். நாகலிங்கய்யா அவர்கள் 1895 ஆம் ஆண்டு, அதாவது கலிவருடம் 4995 ஆம் ஆண்டு விசய வருடத்தில் சித்திரை மாதத்தில் பௌர்ணமி நட்சத்திரத்தில் இப்பூவுலகை விட்டு முக்தி அடைந்தார்.

நாகலிங்கய்யா எழுதிய நூல்கள்

கண்டனூர் நாகலிங்கய்யா தமிழில் வேதாந்த நூல்கள் நான்கு எழுதியுள்ளார். வடமொழியிலிருந்து இரண்டு நூல்களைத் தமிழ்ப்படுத்தியுள்ளார். இவை தவிர முத்துராமலிங்க சுவாமிகள் பாசுரம் என்ற நூலும் நால்வர் துதி என்ற நூலும் எழுதப் பெற்றுள்ளன.

"முத்துராமலிங்க சுவாமிகள் பாசுரம்" என்ற நூல் 1894 ல் அச்சிடப் பெற்றது. தனது ஞானாச்சாரியார் மீது பாடப்பட்ட இப்பாடல்கள் இவரது குரு பக்தியினைக் காட்டுகின்றன. இந்நூலில் 18 செய்யுங்கள் உள்ளன. திருநெல்வேலி "யூனியன் சென்றல்பிரஸ்" மூலம் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது. இந்நூல் வேதாந்த சிரவணோப தேசாநுட்டான சீலசமாதி வைபவங்களை அமைத்துச் செய்த பாசுரங்களால் ஆனது.

நால்வர் துதி - 1898 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது சைவ சமயாசாரியர் நால்வரையும் துதிப்பதோடு அவர்களின் வயது, அவர்கள் முக்தியடைந்த நாள் ஆகியன கூறப்படுகின்றன. எட்டே செய்யுள்களினால் ஆனது. திருவெண்காடு ஆறுமுக சுவாமிகள் இந்நூலைப் பதிப்பித்திருக்கின்றார்.

"ஆத்ம நாமம்" - எனும் நூல் 1876 ஆம் ஆண்டு வித்தி யானுபாலன யந்திரசாலையில் அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டது. இந்நூல் 59 செய்யுள்களை உடையது ஒவ்வொரு பாடலுக்கும் தக்க தலைப்புக்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

"ஏது சொரூபங்காரியம்" மேற்படி அச்சகத்திலேயே அச்சிடப்பட்டு 1876 ல் வெளியிடப்பட்டது. 50 செய்யுள்காளல் ஆனது இந்நூலாகும்.

"ஞான அந்தாதி" என்ற நூல் அய்யாவின் மிகச்சிறந்த நூல்களில் ஒன்றாகும். 1876 ல் பதிப்பிக்கப்பட்ட இந்த நூல் 103 செய்யுள்களை உடையதாக உள்ளது. வித்தியானுபாலன யந்திரசாலையில் அச்சிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாடலுக்கும் தக்க தலைப்புக்கள் தரப்பட்டிருக்கின்றன. இந்நூல் கோவிலூர் சாதுக்களில் ஒருவராகிய சொருபானந்த சுவாமிகள் விரும்பிப் படிக்கும் நூல்களில் ஒன்றாகும்.

"பஞ்ச கோசம்" - 50 செய்யுள்களைச் கொண்டதொரு நூலாகும். இதுவும் 1876 ல் தான் பதிப்பிக்கப் பட்டிருக்கின்றது.

பஞ்சதகப் பிரகரணம் - என்ற நூல் ஒரு மொழி பெயர்ப்பு நூலாகும். சங்கராச்சாரியார் மரபில் வந்த வித்யராண்ய சுவாமிகள் வடமொழியில் செய்த நூலின் மொழிபெயர்ப்பு இந்நூலாகும் 15 அத்தியாயங்காளகப் பிரிக்கப்பட்டு மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். 1869 ல் எழுதி அச்சாக்கம் செய்யப்பட்டது. புதுக்கோட்டை சொக்கலிங்கக் கவியராயர், தச்சநல்லூர் முத்தழகப்பிள்ளை என்பவரும் சேர்ந்து

இந்நூலைப் பதிப்பித்து இருக்கின்றார்கள். திருநெல்வேலி முத்தமிழாகர அச்சுக்கூடத்தில் அச்சாக்கப்பட்டது.

"வாசுதேவ மனனம்" - இதுவும் ஒரு மொழிபெயர்ப்பு நூலாகும். 1882 ல் பதிப்பிக்கப்பட்ட இந்நூல் 611 செய்யுள்களைக்கொண்டு காணப்படுகின்றது. 23 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு கூறப்பட்டுள்ளன. வடமொழி நூலின் மொழிபெயர்ப்பே இந்நூலாகும்.

நாகலிங்க தேசிகர் பிள்ளைத் தமிழ் என்ற நூலைப் பாடிய அருணாச்சலக் கவிராயம், மூன்று நூல்களை நாகலிங்கய்யா இயற்றியுள்ளதாகக் கூறியுள்ளார். அப்பாடல்களானவை,

"தண்டமிழ்க் கவிகளாற் பஞ்
சதப்ர கரணமொரு வாசுதேவ மனனஞ்
சங்கைசிறி தேனுமில்லா
துற்றதோர் சீவன்முத் திப்பிரகரணமென்ன
வொருமூன்று நூலுமேற்கோ
ளுதாரணங் காரண நியாயம் புலப்பட
வொழுங்குறப் பாடி"
"பேரும் பெரிதாஞ் சீவன்முத்திப் பிரக
ரணமா திய மெய்யே
பிறங்கு நூல்செய் பேரறிவாற் பிறவிக்"
"பஞ்சதசப் பிரகரணமும் ரைத்தெழு கவியிறையே"

என்று நாகலிங்கய்யா இயற்றிய நூல்களில் மூன்றைக் குறிப்பிட்டுக் கூறிச் செல்லுகின்றார். மேலும் நூலின் தன்மையைப் பற்றிக் கூறும்பொழுது.

"ஐயமா தியவகல வீரைந்து குற்றமு மகற்றியீ ரைவனப்பு
மான்றபதி னாறிரண் டுத்தியோ டேழ்மதமு மமைதரும் சுவைதருஞ் சீர்ச்
செய்யதமி ழால்வாசு தேவமன னஞ்செய்தோன் சிறுதே ருருட்டியருளே"

என்று கூறுகின்றார்.

அத்வைதப் படைப்புகள்

கண்டனூர் நாகலிங்கய்யா, அத்வைதத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு நூல்கள் எழுதினார். வேதாந்த மடத்தைக் கண்டனூர் நிறுவி வேதாந்ததை மக்களுக்குப் போதித்தவர். சிற்றலக்கிய நூல்களை இயற்றி வேதாந்த நூல்களுக்குப் புகழ் சேர்த்தவர். அவருடைய நூல்களின் வரலாறு, வகைமை, அமைப்பு போன்றவை இங்கு ஆராயப் பெறுகின்றன.

ஞானவந்தாதி

ஞான அந்தாதி நூல் முழுமையாக ஞானம் என்பது குறித்துக் கூறுகின்றது. பொருள்கள் அவற்றின் இயக்கங்கள் பற்றியது அறிவு. பொருள்களுக்கும் அவற்றின் இயக்கங்களுக்கும் அப்பாற்பட்ட பிரமத்தைப் பற்றியது ஞானம் என முண்டக உபநிடதம் கூறுகின்றது. ஞானம் உயர்ந்த பிரமத்தைக் காட்டுகின்றது. எனவே ஞானத்தை அறிந்து கொள்வது இன்றியமையாதது என்ற தத்துவத்தில் இந்நூல் படைக்கப்பட்டுள்ளது.

நூல் வரலாறு

கோவிலூர் ஆண்டவர் என்றழைக்கப்படும் ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகர் கோவிலூர் மடத்தின் முதல் மடாதிபதி ஆவார். இவரிடம் நாகலிங்கய்யா சீடராகச் சேர்ந்து வேதாந்தப் பாடங்களைக் கற்றார். தன் குருவின் மீது அளவிலா பக்தி கொண்டவர். கோவிலூர் ஆண்டவர் "சுவாநுபவத் திருவாக்கு என்ற நூலில் அனுபவ ஞானம் பெறுவதற்காகச் சுவாநுபவத் திருவாக்குகள் என்ற தலைப்பில் எண்பத்தியொரு திருவாக்குகளை மலர்ந்தருளியுள்ளார். இவை அனைத்தும்

வேதவாக்கியங்களின் சாரமாக இருப்பதினால் இதையே ஒரு நூலாகப் பாட வேண்டுமென ஞான அந்தாதி நூலைப் படைத்தார். குரு எழுதிய ஒவ்வொரு திருவாக்குகளையும் ஒவ்வொரு பாடலின் தலைப்பாகக் கொண்டு நூல் எழுதப் பெற்றுள்ளது.

அந்தாதி இலக்கிய வகைமை

சிற்றிலக்கிய வகை தொண்ணூற்றாறில் மிகவும் தொன்மையானது அந்தாதி இலக்கியமாகும். தொல்காப்பியர் செய்யுளியலில், விருந்தே தானும் புகுவது கிளந்த யாப்பின் மேற்றே 1. என்று அந்தாதிப் பிரபந்த இலக்கணத்தைக் கோடிட்டுகாட்டியுள்ளார். யாப்பெருங்கலக்காரிகை, அந்த முதலாத் தொடுப்பது அந்தாதி 2. என வரையறுக்த்துள்ளது.

முதல் செய்யுளின் இறுதி அடி அல்லது சொல் அல்லது சீர், அடுத்த செய்யுளின் முதலாக அமையும். இது அந்தாதியின் இலக்கணமாகும். மனிதமனம் எது நல்லதோ அதனை எப்போதும் தன்னுள் அடக்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புவது அதன் இயல்பு. மக்களின் இயல்பாகிய அந்த விருப்பத்தை நிறைவேற்ற உருவாக்கப் பட்டதுதான் அந்தாதி இலக்கியம் 3. என்பர் மு. இராமசாமி.

தொடர்ச்சியாக வருவது எதுவோ, அது உள்ளத்தில் எளிமையாகத் தங்கிக் கொள்ளும். அந்தாதி இலக்கியம் ஒன்றை ஒன்று சொல்லாலோ, பொருளாலோ தொடர்ந்து வருகின்ற செய்யுட்களைக் கொண்டதலால் சிறப்புடைய இலக்கியமாகக் கருதப்படுகின்றது. ஞான அந்தாதி நூல் இவ்விலக்கிய வகைமையில் எழுதப்பட்டுள்ளது. அந்தாதியில் ஞானம் குறித்துப் பாடியமையால், நூற்பெயரும் ஞான அந்தாதியென வைக்கப்பட்டுள்ளது.

நூலமைப்பு

ஞான அந்தாதியில் முதற்கண், தாம் எடுத்துக் கொண்டிருக்கின்ற செயல் இனிது முடியவும், அது சிறப்புற அமையவும், வேண்டி கண்டநல்லூர் செல்வவிநாயகரைத் துதிக்கின்றார். அடுத்துத் தன் குருவான ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகருக்கு வணக்கம் கூறி அதன்பின் அவையடக்கப் பாடலொன்றைப் பாடியுள்ளார். இவை மூன்றும் பாயிரமாகக் கூறப் பெற்றுள்ளன. அவையடக்கம் என்பது தம் நூலில் ஏதேனும் தவறுகள் இருந்தால், அறிவில் பெரியோர்கள் அதைப் பொருத்தருள வேண்டும் எனக் கேட்பது ஆகும். அவையடக்கம் என்பதற்கு ஒருவர் தாஞ்செய்த நூலிலே குற்றம் ஏற்றாதபடி கற்றோரை வழிபட்டடக்குதல், சபையோர் முன் அடங்கி நிற்றல் எனத் தமிழ்ச் சொல்லகராதியும், சபையோர்க்கு வழிபடு கிளவி கூறுகை என்று தமிழகராதியும், பொருள் உரைக்கின்றன. நாகலிங்கய்யா தம் நூல்களில் அவையடக்கப் பாடலைப் பாடியது கொண்டு, அவரின் தன்னடக்கம் வெளிப்படுகின்றது.

நான்காம் பாடல் முதல் எண்பத்தியென்றாம் பாடல் வரை ஞானம் குறித்த அத்வைதத் தத்துவங்கள் கூறப்படுகின்றன. ஒவ்வொரு பாடலின் முன்னும் தலைப்புக்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. எண்பத்தி இரண்டாம் பாடல் வாக்கியத்தின் அளவு கூறுகின்றது. பின்னுள்ள பதினெந்து பாடல்கள் குருவைத் (ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகர்) துதிக்கும் பாடல்களாக உள்ளன. தொன்னூற்றி எட்டாம் பாடல் நூலின் பலனை உரைக்கின்றது. பக்தி இலக்கியப் பாடல்களின் வளர்ச்சியில் நூலின் பலனுரைத்தல் எனும் மரபு வளர்ந்து வந்தது. இதைப் பின்பற்றி இந்நூலிலும் இம்மரபு கடைபிடிக்கப் பட்டுள்ளது. இந்நூலின் பலனைக் கூறும்பொழுது,

சிவவடிவாயெழுந்த முத்துராமலிங்க தேசிகனாலருள் செய்தவ
வாக்கியத்தைப்
பவமகலக் கவிசெய்து கோர்வையான பரஞானவந்தாதி
தன்னை யன்பாய்
நவமதனிற் படிப்போர்கள் கேட்போர்தாமு நலமாக வதினர்த்தம்
பார்ப்போர் தாமு
மவமானபவநீங்கிச் சித்தசாந்த மானந்தம் பெற்றுமே
லருபமாவார்

என்று கூறுகின்றார். நூலின் கடைசி இரண்டு பாடல்களம் வாழியுரைத்தல் எனும் தலைப்பில் அமைந்துள்ளன. முத்துராமலிங்க ஞானதேசிகரின் திருவடிகளையும், அவரால் உபதேசிக்கப்பட்ட ஞான அந்தாதி எனும் இந்த நூலையும் படிப்பவர்கள் கேட்பவர்கள். இதன் பொருளைப் பார்ப்பவர்கள் கோவிலூர் அடியார் யாவரும் சிறப்பாக எப்பொழுதும் வாழி, வாழி என வாழ்த்துகின்றார்.

மரபுச் செய்திகள்

நாகலிங்கய்யா, மரபு வழிச் செய்திகளான புராண இதிகாச வரலாறுகளை உவமையாக நூலின் பல இடங்களில் எடுத்தாண்டிருக்கின்றார். இதன் மூலம் இவருக்குப் புராண, இதிகாசக் கதைகளில் ஈடுபாடு உண்டு என்பது தெரிகின்றது. தன் குருநாதரைப் போற்றும் பாடல் ஒன்றில் புராணக் கதைமாந்தர்களை உவமையாகக் கூறுகின்றார். இதனை,

"மணியான பொறுமையினிற்றருமர் போலும்
மலர்வான கொடையதனிற்றதீசி போலுந்
துணிவான வாக்கரிச்சந் திரனே போலும்
சுகமான லீலைதனிற் கிருஷ்ணன் போலுந்

திணியான ஞானமதிற் சனகன் போலுந்
சிவபணியிற் றிருநாவுக்கரசே போலு
மணியான போதனையில் வசிட்டர் போலு
மடுத்த முத்துராமர் திருவருளே போற்றி"

"சிவரூபமான சுப்பிரமணியன்றளுந்"
"அருள் வீரபத்திரனங் கிரியுங் கீழாம்"
"மகத்தான வசிட்டர் மிகவறைதலாலே"

என்ற பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

தாழ்த்திக் கொள்ளுதல்

சமய இலக்கியங்களில், இறைவனைக் குறித்துப் பாடும் பொழுது தன்னை மிகத் தாழ்ந்தவனாக எண்ணிக் கொண்டு பாடுவது உண்டு. சிவரூபமாக இருக்கின்ற தன் குருவினைப் போற்றிப் பாடுப்பொழுது நாகலிங்கய்யா தன்னை நாயைவிடத் தாழ்ந்தவன் என்று கூறுகின்றார். இதை,

"தெருளிலா நாயினுமே கடையனை சிறியனையுமாட் கொண்ட
சிவமே போற்றி"
"செம்பது மத்தாளுடையவையா நாயேன் சிவமாகவருள்
புரிவதுனக்கே பாரம்"

இப்பாடல்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

யாப்பு

நாகலிங்கய்யா பலவகையான ஆசிரிய விருத்தங்களைப் பாடியுள்ளார். அறுசீர் ஆசிரிய விருத்தம், எண்வீர் ஆசிரிய விருத்தம், பன்னிரு சீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் மற்றும் சந்த விருத்தம் என்பவற்றைப் பாடியுள்ளார். ஞான அந்நாதியில் உள்ள பாடல்களில்,

அறுசீர் விருத்தம்	-	3 பாடல்கள்
எண்சீர் விருத்தம்	-	97 பாடல்கள்
மொத்தம்	-	100 பாடல்கள்

பாயிரமாகவுள்ள மூன்று பாடல்கள் அறுசீர் ஆசிரிய விருத்தத்திலும், மற்ற பாடல்கள் அனைத்தும் எண்சீர் ஆசிரிய விருத்தத்திலும் பாடப்பட்டுள்ளன.

ஏது சொரூபங்காரியம்

தனக்குள் இருக்கும் பிரம்மத்தை, அறிவதற்கு ஞானம் பெற வேண்டும். ஞானத்தை அடையும் வாயின் முதற்படி, குருவைச் சென்றடைதல். பின் குரு அருளும் வாங்குகளை கேட்டுத் தெளிந்து மனனம் செய்தல் ஆகும். சொரூபநிலையில் இருக்கும் பிரம்மத்தை அடையக் காரணமாக உள்ளவற்றை விளக்கி நிற்கின்றது ஏது சொரூபங்காரியம்.

இந்நூல் ஐம்பது பாடல்களைக் கொண்டது எனத் தமிழ்நூல் விவர அட்டவணை கூறுகின்றது. மிகச் சேதமடைந்த நிலையில், முப்பத்தைந்து பாடல்கள் மட்டும் கிடைக்கின்றன.

நூலமைப்பு

முதல்பாடல் செல்வவிநாயகரைத் துதிக்கும் பாடலாக அமைந்துள்ளது. அடுத்தது குருவினுக்கு வணக்கம்

கூறுமுகமாகப் பாடப்பட்டுள்ளது. அதன்பின் உள்ள பாடல்கள் முழுவதும் பாடுபொருளை விளக்குகின்றன.

யாப்பு

இந்நூல் முழுவதும் அறுசீர் விருத்ததில் பாடப் பட்டுள்ளது.

ஆத்ம நாமம்

ஆன்மா - விளக்கம்

பிரபஞ்சம் முழுவதும் எல்லை இல்லாததாக எங்கும் நிறைந்ததாய் நிற்பது எதுவோ அதுவே ஆன்மாவாக இருக்கின்றது. அத்வைதத் தத்துவத்தில் ஆன்மா குறித்த சிந்தனை சிறப்புடையதாகும். வேதங்களும், உபநிடதங்களும் ஆன்மா குறித்த தத்துவங்களைக் கூறுகின்றன.

ஆன்மாவின் வடிவமாகப் பிரம்மம் அமைந்திருக்கின்றது. ஆன்மா குறித்து கடோபநிடதம் எனும் உபநிடத நூல் கூறும்பொழுது ஆன்மாவுக்குப் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. இது அழிக்க முடியாதது என்றும் உள்ளது. உலகப் பொருள்கள் உயிர்கள் அனைத்திலும் உள்ளொளியாக நிற்பது இந்த ஆன்மாவே ஆகும். இது அணுவுக்கும் அணுவானது. அண்டத்திற்கும் அண்டமானது என்று கூறுகின்றது.

ஆன்மாவின் (ஜீவனின்) உருவமாகச் சிவன் இருக்கின்றார். என்பதைத் திருமூலர்.

"சீவனெனச் சிவனென்ன வேறில்லை
சீவனார் சிவனாரை அறிகிலர்
சீவனார் சிவனாரை அறிந்த பின்
சீவனார் சிவனாயிட் டிருப்பரே"

என்று விளக்குகின்றார். நாகலிங்கய்யா சிறப்பு மிக்கத் தத்துவமான ஆன்மதத்துவத்தை முழுமையாகத் தமிழில் விளக்க வேண்டுமென இந்நூலைப் படைத்திருக்கின்றார். ஆன்மாவின் (ஆத்மாவின் பெயர்களை) நாமங்களைக் கூறி விளக்குவதால் ஆத்மநாமம் எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

நூல் உருவான சூழல்

அருணாச்சல சுவாமிகள் (சின்னத் துறவாண்டவர்) ஆத்ம நாமம் என்ற பெயரில் நூல் ஒன்று எழுதி உள்ளார். அதைச் செய்யுள் நடையில் எளிதில் புரியும் படியாக ஆத்மநாமம் எனும் பெயரில் நாகலிங்கய்யா இந்நூலைப் படைத்தார்.

"ஞான வடிவாம் சிவரூபமான அருணாச்சால சுவாமிகள்
செய்யான்ம நாமவுரையைத்
தெளிவுபெற நாயினேன் றமிழ்க்கவியதாகவே செய்வதிற்
குற்றமுளதேற்"

என்ற பாடல் இதைச் சுட்டிக் காட்டுகின்றது.

நூலமைப்பு

இந்நூல் ஐம்பத்து ஒன்பது செய்யுள்களைக் கொண்டுள்ளது. செல்வவிநாயகரைத் துதி செய்யும் பாடலாக முதல் செய்யுள் அமைந்துள்ளது. அதன்பின் சுந்தரேசர், மீனா-பிகை, கற்பக விநாயகர், சுப்பிரமணியர், நடராசர், தெட்சிணாமூர்த்தி, பைரவர் ஆகியோர்களின் துதியும் அதன்பின் குருவணக்கமாக ஒரு பாடலும், அவையடக்கப் பாடல் ஒன்றும் பாயிரமாகப் பாடப்பட்டுள்ளது. பதினொன்றாம் பாடலிலிருந்து பாடுபொருள் குறித்து விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

யாப்பு

அறுசீர் விருத்தம்	-	31 பாடல்கள்
எண்சீர் விருத்தம்	-	15 பாடல்கள்
பன்னிருசீர் கழிநெடிலடி		
ஆசிரிய விருத்தம்	-	2 பாடல்கள்
சந்த விருத்தம்	-	11. பாடல்கள்
மொத்தம்	-	59 பாடல்கள்

பஞ்சகோசம்

ஆன்மாவை மூடியிருக்கின்ற ஐந்துகோசங்களை (உறைகளை) நீக்கி, உள்ளிருக்கின்ற ஆன்மாவாகிய பிரமத்தை அடைய வேண்டும், பிரமமாகிய பிரபஞ்சதில் மோட்சம் என்பது தன்னையே தான் அறிந்து கொள்வது ஆகும். இதை விளக்கும் பொருட்டு பஞ்சகோசமாகிய அன்னமயகோசம், பிராணமய கோசம், விஞ்ஞானமய கோசம், மனோமயகோசம், ஆனந்தகோசம் என்பதை இந்நூலில் விளக்குகிறோம்.

நூலமைப்பு

கர்னாபுரியில் எழுந்த விக்கினேசுரனை வணங்கும் செய்யுளாக முதல் பாடல் அமைந்துள்ளது. அதன்பின் குருவணக்கம் பாடப்பட்டடுள்ளது. மூன்றாம் பாடத்திலிருந்து பஞ்சகோசம் குறித்த விளக்கம் கூறப்பட்டுள்ளன. இந்நூல் ஐம்பது செய்யுள்களைக் கொண்டு காணப்படுகின்றன.

யாப்பு

அறுசீர் விருத்தம், எண்சீர் விருத்தம், மிகுதியாகப் பாடப்பட்டுள்ளன. சந்த விருத்தம் இரண்டு பாடல்களில் பாடப்பட்டுள்ளன.

அறுசீர் விருத்தம்	-	33 பாடல்கள்
எண்சீர் விருத்தம்	-	15 பாடல்கள்
சந்த விருத்தம்	-	2 பாடல்கள்
மொத்தம்	-	50 பாடல்கள்

நூலின் புற அமைப்பு

ஆத்மநாமம், ஏதுசொரூபங்காரியம், ஞானவந்தாதி, பஞ்சகோசம் ஆகிய நான்கும் ஒரே நூலாக அச்சிடப்பட்டுள்ளன. நூலின் அளவு 15x11 செமீ ஆகும். இவ்வமைப்பு நூலை எப்பொழுதும் கையில் எடுத்துக் கொண்டு செல்வதற்கு வசதியாக அமைகின்றது. அத்வைதத்தை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் இம்மாதிரியான நிறைய நூல்கள் வெளிவர வேண்டும். கோவிலூர் ஆண்டவர் சுவாமிகளாலும், நாகலிங்கய்யாவினாலும் எழுதி வெளியிடப்பட்ட நூல்கள் கையடக்க நூல்களாகவே அமைந்திருக்கின்றன.



அத்வைத விளக்கம்

நாகலிங்கய்யா, சீவன் முக்திப்பிரகரணம், வாசுதேவ மனனம், ஞான அந்தாதி, பஞ்சகோசம், ஏது சொரூபங்காரியம், ஆத்மநாமம் என்ற ஆறுநூல்களில் அத்வைதத் தத்துவங்களைப் பாடுபொருளாகப் பாடியுள்ளார். இவற்றில் சீவன் முக்திப்பிரகரணம், வாசுதேவமனனம் என்ற இரண்டும் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றவையாகும். தமிழ் நூல்களில் காணலாகும் அத்வைதப் பாடுபொருள்களை இப்பகுதி ஆராய்கிறது.

வேதாந்தம்

"வேதாந்தம்" எனும் சொல்லிற்குச் சமயச் சொல்லகராதி எனும் நூல் உபநிடதம் வியாசராற் செய்யப்பட்டதும் உபநிடதங்களின் பொருளைக் கொண்டதுமான வேதாந்த சூத்திரத்திற் கூறும் உத்தரமீமாஞ்சை மதம் 1 என்று கூறுகின்றது.

"வைதிகம் வேதமுடிவு, அது உபநிஷத்து எனப்படும் உத்தரமீமாஞ்சை அது அத்வைத மெனப்படும்" 2. என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதி பொருள் கூறும். இதன் மூலம் வேதாந்தம் எனுமளவில் அது அத்வைதமாக இருக்கின்றது. என்றுக் கருத்துத் தெளிவாகின்றது.

"வேதத்தின்" இறுதிப் பகுதியாக உள்ள உபநிடதங்களை நூல்களாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்ற மெய் பொருளியற் கொள்கையை அனைத்தும் பொதுவாக வேதாந்தம் என்று அழைக்கப்படுகின்றன.

அத்வைதம்

"அத்வைதம்" என்ற சொல்லிற்கு இரண்டன்மை ஏகாத்ம வாதம் 3. என்கிறது சமயச்சொல்லகராதி இரண்டல்லாதது ஒன்றானது பேதப் பொருளிரண்டு தம்முள் அபேதமாதற்குரிய சம்பந்த விசேடம். அ∴தாவது பொருளிரண்டாயிருந்தும் ஆங்கே வேற்றுமையறக் கலந்து ஒன்றாய் நிற்கும் தன்மை 4. என்று மதுரைப் பேரகராதி விளக்கம் தரும்.

அத்வைதம் என்பது இரண்டற்றது (Monison) எனப்படும். உயிரும் உலகமும் பரம்பொருளினின்றும் வேறுபட்டவை அல்ல உள்ளது ஒரே பொருள் அது அகண்ட சத்து, சித்து, ஆனந்தம் எனப்படும். அது தன்னையே உயிராகவும் உலகமாகவும் காட்டும் வல்லன்மையுடையது. தனது மாயாசக்தியால் இவ்வாறு செய்யும் உயிர்களிடத்துள்ள அஞ்ஞானத்தால் உலகமென்றும் உயிர என்றும் அவைகளுக்கு வேற்றுமை தோன்றுகின்றது. 5. பிரம்ம ஞானம் எய்திய பொழுது இவையிரண்டும் சிப்பியில் வெள்ளி தோன்றுவது போன்ற பொய்த்தோற்றமே என்பது விளங்கிப் பரம்பொருள் தனது மாயாசக்தியால் இவ்வாறு தோன்றுகின்ற தென்பதை உயர்கள் உணர்ந்து தாம் கடவுளை அன்றி வேறொரு பொருளன்று எனத் தெளிவதே முக்தி. ஆறு கடலில் கலந்து கடலாவது போன்று உயிர் பிரம்மத்தில் கலந்து பிரமமாவத்தே முக்தி நிலையாம்.

இதன் மூலம் கடவுள் என்ற ஒரே பொருள் இருக்கின்றது என்றும், ஏனைய இரண்டும் (உயிர் உலகு) இதன் நிழல் போன்ற பொத்தோற்றம் என்றும் (அத்வைத) மதம் கூறுகின்றது.

அத்வைத முன்னோடிகள், தம் சமயக் கருத்தினை வடமொழி கொண்டே வெளிப்படுத்த வேண்டும் என்ற

வேட்கையோடு இருந்தனர் என்பதைப் பலநூல்கள் மூலம் அறியலாம். "அத்வைதத்தை வடமொழி உபநிடதச் சொற்கள் கொண்டு கற்றுணர வேண்டுமே அன்றி, நாட்டு மொழி கொண்டு உரைக்கக் கூடாது" 6. எனச் சித்தாந்த லேச சங்கிரகம் நூல் கூறுகின்றது. இவ்வாறாக, வடமொழியில் அத்வைத நூல்கள் இருந்தமையான் வடமொழி அறியாத நாட்டு மக்களிடமும் அத்வைத சமயம் பரவவில்லை எனலாம். தமிழகத்தில் தமிழ் மக்களிடையே அத்வைதக் கொள்கையும் சமயமும் பரவிடத் தமிழ் நூல்கள் தேவை என்பது ஒரு சிலரால் உணரப்பட்டது 7. இதன்படி அத்வைதக் கருத்துக்களைத் தமிழில் எழுதியவர்கள் தத்துவராயரும், சொரூபானந்தரும் ஆவார்கள்.

கோவிலூர் மடத்தில் அத்வைதக் கருத்துக்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் நோக்கில் புதிய நூல்களை எழுதும் பணியைத் தொடங்கி ஆண்டவர் சுவாமிகள் பல அத்வைத நூல்கள் எழுதிச் சிறப்பித்தார். இதை அடியொற்றி நாகலிங்கய்யாவும் தமிழ் நான்கு அத்வைத நூல்களை இயற்றியுள்ளார்.

ஞான அந்தாதியில் காணலாகும் அத்வைதத் தத்துவங்கள்

"கோவிலூர் ஆண்டவர்" என்றழைக்கப்படும் ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்க ஞானதேசிகரவர் வடமொழியிலும் தமிழ்மொழியிலும் புலமைமிக்கவர். இவர் பல நூல்கள் எழுதி உள்ளார். "சுவாநுபவத் திருவாக்கு" என்ற நூலில் எண்பத்தியொரு திருவாக்குகளைக் குறிப்பிட்டுள்ளார். அவற்றைத் தலைப்பாகக் கொண்டு நாகலிங்கய்யா இந்நூல் எழுதினார்.

ஞானம்

தன்னை எதார்த்தமாக அறிகிறதே ஞானம். நானே "பிரமம்" என்றறியும் நிலையும் ஞானமாகும் அத்விதியனாகிய ஆத்மாவை அத்விதியனாகவும் அபரிச் சின்னனாகிய ஆத்மாவை அபரிச் சின்னனாகவும், அசங்கனாகவும் அகர்த்தா அபோக் தாவாகிய ஆத்மாவை அகத்தா அபோக்தாவாகவும், தன்னையுள்ளபடித் தோற்றுவிக்கிறதே "ஞானம்" ஆகும். 8. என்பர் அப்பாசாமி பிள்ளையார்.

"ஈசுவரனை வெளியே தேடுதல் அஞ்ஞானம் தமக்குள்ளேயே இறைவன் இருப்பதை உணர்தலே ஞானம் இங்கு, அதாவது தன்னுள் ஈசுவரனை உணர்ந்தோனே அங்கு அவருடைய பாதகமலங்களிற் சேர்ந்து வாழ்வான் என்பது குருதேவர் வாக்கியமாகும் 9. ஞானத்தைக் கூறும்பொழுது சிறந்த எடுத்துக்காட்டு மூலம் விளங்குகிறார். காலில் செருப்புப் போட்டுக் கொள்வாயானால் நீமுள்ளின் மேலும் சுலபமாய்ப் போகலாம். ஞானமாகிய செருப்பைப் போட்டுக் கொண்டால் உலகமென்னும் முள்நிறைந்த வனமெங்கும் பயமின்றித் திரியலாம் என்பார்.

இறைவன் பஞ்சபூதமயமாக, சருவ இடங்களிலும் வியாபித்து இருக்கின்றான். என்பது அத்வைதக் கொள்கையாகும். நாகலிங்கய்யா தமது நூலில் இக்கொள்கையினை விளங்குகின்றார். இதனை,

"தானாகிச் செகத்தெல்லாந் தனக்கு வேறாய்ச் சகத்தில்
லாதாலுமத்துவிதந்தா னென்றார்"

என்ற பாடல் மூலம் அறியலாம்.

பிரமம்

உலகப் பொருள்களை எல்லாம் உள்நின்று இயக்கும் சக்தி ஒன்று உள்ளது என்பதை உணர்வதே மெய்யுணர்வு என்கின்றனர் ஞானிகள். இயற்கைக் காட்சிகளைக் கண்டு, அவற்றினுடைய எல்லையற்ற அதிசயத்தில் ஒன்றிப்போய் தன்னை மறந்து இயற்கையைத் துதித்தான் மனிதன். அந்த ஒப்பற்ற உணர்வே மெய்யுணர்வாகும். இதை உணர்ந்து.

"உணர்வினிலே நின்ற ஒன்னை உணர்ந்தேனே"

என்கின்றார் நம்மாழ்வார்

"அண்ட சாராசரங்களுக்கும் ஆதாரமான பிரமம்
அகவுணர்வாக உள்ளது."

எனச் சொல்லுகின்றது ஐத்ரேய உபநிடதம் இறைவன் உலகப் பொருள்கள் அனைத்திலும் இருப்பதை உணர்வால் உணர்ந்தனர் அத்வைதிகள் மகாகவி பாரதி மிக அழகாகத் தம் பாடலில்,

"ஆகாசம் தீகால் நீர்மண்
அத்தனை பூதமும் ஒத்து நிறைந்தாய்"

என்று கூறுகின்றார்.

எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கக் கூடிய பரம்பொருளை அத்வைத நூல்கள் 'பிரமம்' என்று குறிக்கின்றன. பிரமமாகிய அது சீவனாகவும் சீவனின் உள்ளே சீவாத்மாகவும் இருக்கின்றது என்று நாகலிங்கய்யா கூறுகின்றார். இதனை,

"தானான சத்திய சிற்சொரூபந்தன்னைத்
தனுவாதி பாசங்கண் மறைக்கும் போது
நானாரென்றேண்ணுமிடத்தங்தப் பாச
நவையாவைதிலுள்ள சுகதுக்கங்கள்."

என்ற பாடல் மூலம் அறியலாம். பரம்பொருளை அனுபவிக்க வேண்டிய சீவன் யார்? எங்குமாகி, எல்லாமும் ஆகி உள்ளது பிரமம் எனும் போது, அது சீவனாகவும் சீவனின் உள்ளே சீவாத்துமாகவும் இருக்கிறது. சீவாத்மா, பரமாத்மா என்று பல ஆத்மாக்கள் இல்லை. இரண்டும் ஒன்றுதான்.

பிரமம் பற்றி ஆதிசங்கரர் தரும் விளக்கம் ஆழமானதாகும். ஞானமே பிரம்மம் என்கின்றார். "சீவன் என்றும் ஈசன் என்றும் சிறியது என்றும் பெரியது என்றும் இரண்டும் இல்லை. போக்குவரத்து இல்லாத ஒரு பரம்பொருளே உள்ளது. அது புதியதும் இல்லை பழையதும் இல்லை. எங்கும் என்றும் தடைப்படாத குறைவில்லாத சத்தியமே அது. பேரறிவே அதன் உருவம். அதுவே தான் பேரின்பம். பிரம்மமே ஞானம், ஞானமே ஆன்மா, ஆன்மானுபவமே ஞானந்த சித்தியாகும்" அங்கே யார் யாரைப் பார்ப்பது? யார் யாரை வழிபடுவது? யார் யாரிடம் பேசுவது? யார் பேசுவதை யார் கேட்பது? எங்கே ஒருவர் மற்றவரைக் காண்கிறாரோ, எங்கே ஒருவர் மற்றொருவரைக் காண்கிறோரோ, எங்கே ஒருவர் மற்றவரைக் காாண்கிறாரோ, எங்கே ஒருவர், ஒருவர் மற்றவரிடம் பேசுகிறாரோ, எங்கே ஒருவர் பேசுவதை மற்றவர் கேட்கிறாரோ, அது சிறியது. எங்கே யாரும் யாரையும் காண்பதில்லையோ, யாரும் யாரிடமும் பேசுவதில்லையோ, அதுவே மிக உயர்ந்தது, சிறந்தது. அது பிரமம். பிரம்மாக இருக்கும் நீ என்றும் அதுவாகவே இருக்கிறாய் என்கின்றார் விவேகானந்தர். பிரபஞ்சமாகிய பொய்மைப் பாவனையாலும் தன்மயப் பாவனையாலும் காட்சி நீங்கும் என்கிறார் நாகலிங்கய்யா இதை,

என்றுமே தன்சொருப நிருணயிக்கினி யானன்றிக்
காண்பதொன்று மில்லாதாகி
நன்றானபு மானன்றித் தறியேபோலி நலமான
ரசிதமன்றிக் கிளிஞ்சல் போலும்
பொன்றுவதாங் காண்பான் கண் பவையின்றிப்
பொருளான நித்தபரிபூன்றமென்றே
நின்றதனான் மித்தையினிற் காண்பான் காட்சி
நிகழாதுபாரேவே நிகழ்த்தினாரே
"நிகழ்கின்ற காண்பானுங் காட்சிதானு நிதானமாகந்
துரியமதேயன்றி வேறாய்ப்"


என்ற பாடல்கள் விளக்குகின்றன. காண்கின்றவனின் காட்சியானது, கண் முதலிய புறப்புலன்களைத் தாக்கித் தன் வயப்படுத்தும் பொழுது, மனம் அஞ்ஞானம் பெறுகின்றது. காணும் காட்சி வேறாய்த் தெரிகிறது. எனவே, மனதைப் புறப்பொருளாகவே ஆக்கிக் காணும் காட்சியைப் புத்தியானது தன் மெய்ஞானத்தால் விளக்கவேண்டும். அப்போது பிரபஞ்சம் பிரம்மமாகக் காட்சி தரும் என்பது நாகலிங்கய்யா தரும் அத்வைத விளக்கமாகும்.

வகை - தொகை காணல்

பிரபஞ்சத்தில் ஓர் ஆன்மாதான் உள்ளது. இருப்பது ஒன்றே, அந்த ஒரே இருப்பு. காலம், இடம், காரணிகாரியம் என்பவற்றின் வழியே செயல்படும் போது, பல்வேறு பெயர்களால் வழங்கப்படுகிறது. புத்தி, நுண்பொருள், தூலப்பொருள் என்றெல்லாம் மனம் சம்பந்தப்பட்ட மற்றும் பௌதீக உருவங்களாகத் வழங்கப்படுகிறது. பிரபஞ்சத்திலுள்ள எல்லாமே ஒன்றுதான். அதுதான் பல்வேறு உருவங்களாகத் தோன்றுகிறது. அந்த ஒன்றின் ஒரு சிறுபகுதி காலம், இடம், காரணகாரியம் என்ற இந்த வலைக்குள் புகுந்தவுடன் பல



அலமேலு ஆத்தா



கருப்பச்செட்டி அண்ணன்



விழா நாயகரின் அப்பச்சி - ஆத்தா

ராம. நாகப்ப செட்டியார் – மீனாட்சி ஆச்சி, கண்டனூர்



விழா நாயகியின் அப்பச்சி - ஆத்தா

கா. வெங்கடாசலம் செட்டியார் – உண்ணாமலை ஆச்சி, அரியக்குடி



விழா நாயகியின் அய்யா - ஆயா

மெ.வி.வி. வினைதீர்த்தான் செட்டியார் – மீனாட்சி ஆச்சி



செல்லாயி அம்மன்



உருவங்களைப் பெறுகிறது. இந்த வலையை எடுத்துவிட்டால் மிஞ்சவது ஒன்றுதான். எனவே அத்வைதத் தத்துவப்படி பிரமம் என்று சொல்லப்படும் ஆன்மாவில் இந்தப் பிரபஞ்சம் ஒன்றே ஒன்று தான் எனக் கூறுவார் சுவாமி விவேகானந்தர்.

பிரபஞ்சத்தின் வகையில் மூழ்கி அதைக் காணவேண்டுமென்று நினைத்தால் அது மயக்கத்தையே தரும். எனவே, தொகையைக் கண்டு அதனுள் ஒளிந்திருக்கும் பிரம்மத்தைப் பார்த்து அமைதியாய் இருக்க வேண்டும். இதை நாகலிங்கய்யா,

ஆசான பிரபஞ்ச வகையின் மூழ்கி யாயிரங் காதனியம்
விசாரித்தாலும்
ஆகாசப்புந்தி மயக்குவதேயல்லான் மகத்தான சொருபசுகம்
வருவதில்லை
யாசானையடைந்து பரவிசாரத்தாலே யாரோ சகிளதியறிவாய்ப்
பார்த்தன்
மாசிலதாமுத்தியதால் வகையைக் கண்டு மயங்காதே
தொகையைக் கண்டு மகிழ் நன்கென்றார்.

என்ற பாடல் மூலம் விளக்குகின்றார்.

பிரபஞ்சம் மாயை

"மா-யா என்றால் எது இல்லையோ அது என்பது பொருளாகும். மாயை பிரம்மத்தை மறைக்கிறது. அதனிடத்தில் பிரிதொன்றான உலகத்தையே உள்ளதாகக் காட்டுகின்றது. உலகம் மித்தியை (பொய்யை) என்பதைப் போலவே மாயையும் இறுதிநிலையில் இல்லாததே ஆகும். ஆனால் அது எப்போதுமே இல்லாதது அல்ல" (20) என்று மாயை குறித்து ஆதிசங்கர் விளக்குகின்றார்.

"மாயை என்பது பொய்த்தோற்றம் அல்ல. மாயை உண்மையானது. அதே வேளையில் உண்மையற்றதும் கூட. மாயையின் பின்னால் மெய்ப்பொருள் இருப்பதால் அது

உண்மை. மெய்ப்பொருள் அதற்கு மெய்த்தோற்றத்தை அளிக்கிறது. மாயையில் எது உண்மையாக இருக்கிறதோ அதுதான் மாயையை ஊடுருவி நிற்கும் மெய்ப்பொருள். இந்த மெய்ப்பொருளை நாம் ஒருபோதும் பார்க்க முடியாது.ஆகையால் எதை நாம் பார்க்கிறோமோ அது உண்மையற்றது. அதற்கு உண்மையான தனி இருப்பு என்பது இல்லை. தனது இருப்புக்கு அது மெய்ப் பொருளையே சார்ந்திருக்கிறது.

மெய்ப்பொருளை அறிந்தவன் மாயையில் பொய்த் தோற்றத்தைக் காண்பதில்லை மெய்ப்பொருளையே காண்கின்றான். மெய்பபொருளை அறியாதவன் மாயையில் பொய்த் தோற்றத்தையே காண்கின்றான். அதையே உண்மை யென்று கருதுகிறான் என மாயை குறித்து சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார்.

மாயை குறித்து, தத்துவராயர் கணித முறையில் உவமை கூறி விளக்குகின்றார். அது உளிதாக மாயை குறித்து விளக்கும் தன்மையினை உடைய உவமையாகும். மாயை என்பது ஞானிக்குப் பூஜ்யம் தான். அனால் ஞானம் வாராதநிலையில் உள்ள சீவன் தன்னை ஒரு தனி எண்ணாக வைத்துக் கொண்டு பக்கத்தில் இந்தப் பூச்சியத்தைச் சேர்த்துக் கொள்ளுகின்றான். ஓர் இலக்கத்துக்குப் பக்கத்தில் வருகிற பூஜ்யம் அதைப் பத்து, இருபது, நூறு, ஆயிரம் என்று ஆக்குவது போல் இந்த அஞ்ஞானிக்கு மாயையே பலவாக விரிந்த உலகமாகத் தோன்றுகின்றது.

இவ்வுலகு உண்மை போலத் தோன்றும் பிரமத்தில், உலகு ஊன்றியுள்ளதை அறியும்வரை உலகம் உள்ளதாகத் தோன்றும். அறிவொளி பெருகுகிற பொழுது இவ்வுலகு

பிரமத்தின் வெளிப்பாடு அல்லது தோற்றம் என்பதனை உணரலாம். இவ்வுலகு உள்பொருளினின்று வேறாவது இல் பொருளினின்று வேறாவது என்பதாகும். பொருள்கள், பிரமத்திற்கும் அழிவுக்கும் இடைப்பட்ட ஒரு நிலையினைப் பெற்றிருக்கின்றன. இந்த உலகமானது பொய்யானது. அல்லது பொய்த்தோற்ற இயல்பினை உடையது. எனவே பிரபஞ்சம் மாயைத் தோற்றத்தினைக் கொண்டுள்ளது. இதைச் சங்கரர் கயிறு, அரவாகத் தோன்றுகின்ற உவமையினைக் காட்டி விளக்குவார், இதனை நாகலிங்கய்யா,

பாக்கியமாம் பூமியிலோஷதிகளெல்லாம்
பார்மயமும் பொய்யெனவுமாகுமாபோற்
சாக்கியதாஞ்சிதாகாசந் தனக்கு மேலாய்ச் சார்வது
வேறிலாமையினாற் புமானிழற் போல்
ஆக்கியவிச்சகத் தெல்லாமித்தையென்று
அழகுள்ளதன் மயங்களாகுமென்றும்
பாக்கியமாமிவ் வசனமடியருய்யப்
பகர்ந்தருளினான் கழனிப் பதியிலாசான்

என்பார், இப்பாடலில் பார்மயமும் பொய்யெனவும், இச்சகத்து எல்லாம் மித்தை அத்வைதக் கோட்பாடுகளை விளக்குகின்றார். மேலும்,

"ஆதிசகம் பொய்யேயான தாலே
சொரூபநிலை தனினி னைவுநில்லாதாலே சொல்சகங்கண்
மித்தையெனச் சொன்னான் ஐயன்".

என்ற பாடல் மூலமும் இதை அறியாலாம்.

பிரபஞ்சம் பற்றிக் கூறும்பொழுது, இல்லாத பிரபஞ்சம் (25) பிரபஞ்சம் திரிகாலத்துஞ் சுத்தமதாயில்லாதபடியினாலும் (26)

பின்னமிலாப் பிரமத்திற் தோன்றாநின்ற பிரபஞ்சம் பிரம்மதே (27) பிரபஞ்சந் தொடர்பாகத்தான் எழுந்து வளர்ந்து அழிகின்ற இயல்பு பார்க்கின் (28) என அதன் தன்மையினை உணர்த்துகின்றார்.

ஆன்மா

உடலின் உணர்வுகள் அனைத்திற்கும் மூலகாரணமாக அமைந்திருப்பது ஆன்மா ஆகும். ஆன்மா என்னும் சொல்லுக்குப் பொருள் வியாபகமென்பதும் சித்தசித்து (29) என்று சிவஞான போதத்தில் மெய்கண்ட தேவர் கூறுகின்றார். இந்த ஆன்மா அறிவுப் பொருளாகவும் இல்லை. அறிவற்ற பொருளாகவும் இல்லை. அதாவது சித்தும் அன்று, அசித்தும் அன்று, ஆதலால் சித்தசித்து எனப்படுகின்றது. (30)

விழிப்பு, கனவு, தூக்கம் ஆகிய மூன்று நிலைகளிலும் விளங்குவது ஆன்மாவே ஆகும். ஆன்மாவிற்கு உருவமும் அடையாளமும் கிடையாது. எத்தகைய அறிவையும் பெற வைப்பது ஆன்மாவே என்பதால் அது ஞானமயமானதாகும். இவ்வாறு ஞானமூட்டுவதாகவும், உயிர் ஊட்டுவதாகவும் சீவாதாரமதாகவும் உள்ள ஆத்மா பிரம்மமேயாகும் என்பது அத்வைதக் கருத்தாகும். (31)

பிரபஞ்சம் முழுவதும் பிரம்மத்தின் வடிவாக அமைந்திருக்கின்றது. எனவே ஆன்மாவும் பிரம்மமும் ஒன்றாகும். சீவன் என்றும், ஈசன் என்றும், சிறியது என்றும் பெரியது என்றும் இரண்டுமில்லை. பிரமப் பொருளின் தன்னுண்மை நிலையும் ஆத்மாவின் தன்னுண்மை நிலையும் ஒன்றே. அதன் காரணமாக, ஆதிசங்கரர் சீவன் பிரமத்தை விட வேறன்று என்று அத்வைதக் கொள்கை விளக்கத் தொடரிலே அமைத்துக் காட்டியுள்ளார்.

அவித்தையின் (மாயையின்) காரணத்தார் சீவன் தன்னுண்மை நிலையை மறந்து, தான் வேறு பிரமம் வேறு எனக்கருதுகின்றது. தான் அல்லாததைத் தானெனக் கருதிய மனம், இந்திரியம் முதலியவற்றின்இயல்புகளைத் தன்னுடைய இயல்புகள் எனக்கருதியும் மயங்கும். பிரமும், சீவனும் ஒன்றே என்ற கொள்கை வலிவு பெற்றால், சீவன் பிரமத்தைச் சென்றடையும் நிலையாகும். இது ஆன்மா பற்றிய அத்வைதக் கொள்கையாகும்.

முதலாய்த் தோன்றும் சிற்றறிவை விடிற் சிவமே ஆவதாலே
மாய்த்திடும் சிற்றறிவாஞ் சீவறிவு தானே மற்றெதுக்கு
மூலமதாம் பாங்காயென்றார்.

என்று கூறுகின்றார் சீவன் பற்றிய அறிவே மற்றவற்றிற்கெலாம் மூலமானதமாகும். ஒருவனுக்குச் சிற்றறிவு நீங்கி விட்டால் சீவனே பிரம்மமாக இருக்கின்றான். என்ற சிவ அறிவு வந்துவிடும். என்பதை மேற்காணும் பாடல்வழி உணர்த்துகின்றார்.

எந்தப் பற்றும் இல்லாமல் இந்த உலகில் வாழக்கூடியவனே ஜீவன்முக்தன். அவன் தண்ணீரில் உள்ள தாமரை இலை போன்றவன். நீரிலேயே இருந்தாலும் அது நீரினால் நனைவதில்லை. மனிதருள் மிக உயர்ந்த நிலையில் இருப்பவன் இவன். மனிதருள் ஏன், உயிர்கள் அனைத்துள்ளும் உயர்ந்தவன் இவன். ஏனெனில் பரம் பொருளும் தானும் ஒன்று என்பதை இவன் அனுபூதியில் உணர்ந்து விட்டான், தானும் இறைவனம் ஒன்று என்ற உண்மையை உயர்ந்து அந்த அனுபவத்தில் நிற்கிறான். இறைவனுக்கு உனக்கும் சிறிதேனும் வேற்றுமை உண்டு என்ற எண்ணம்கூட உன்னை அச்சத்தில்

ஆழ்த்திவிடும். நீயே அவன் உனக்கும் அவனுக்கும் வேறுபாடு இல்லை, துளி கூட வேறுபாடு இல்லை. நீயே அவன், முற்றிலும் அவன் என்ற அனுபவம் ஏற்படுகின்ற அந்தக்கணமே எல்லாப்பயமும் விலகி விடுகிறது. என்று ஜீவன்முக்தனைப் பற்றி விளக்கிறார் சுவாமி விவேகானந்தர்.

பிரம்மமும், சீவனும் ஒன்றென அறிந்த நிலையில், பிரம்மத்தை அடையும் வகையில் ஆசார்யர் சங்கரர் நான்கு பயிற்சிப்படி நிலைகளை அமைத்துக் கொடுத்துள்ளார். அவை

1. நித்திய அநித்தியப் பொருளறிவு
2. இவ்வுலகம், பரவுலகம் என்ற இரண்டிலும் உள்ள சுகத்தை விரும்பாதிருத்தல்
3. சமம், முதலிய ஆறு குணங்கள்
4. முமுட்சுத்வம்.

என்பனவாகும். உலக சுகத்தில் பற்றற்ற நிலையினைச் சீவன் அடைய வேண்டும். அப்போததான் சீவன் பிரம்மத்துடன் ஒன்ற முடியும். இக்கருத்தை ஞான அந்தாதி நூல் முழுவதும் நாகலிங்கய்யா கூறியுள்ளார். இது ஆசார்யர் ஆதிசங்கரர் கூறிய இரண்டாம் நிலைப்பயிற்சிப் படியாகும்.

சிற்றின்பத்தை நீக்குதல்

சிற்றின்பங்களை நீக்க வேண்டும் என்பதை நாகலிங்கய்யா பல உவமைகளுடன் கூறுகின்றார். இதனை,

என்றுமே சோகமதாஞ் சமுசாரத்தி னெண்ணரிய
துன்பமெலா மோகத்தாலே
நன்றிதெனப் பன்றியுமே யமேத்தியத்தில் ரமிப்பது போல்
ரமிக்கின்ற மூடர்க்கென்றுந்

துன்றரிது ஞானமெனவிவேகியானோன் றொடர்பான
சமுசாரந் தொலைத்தற்காகக்
கன்றுவதாஞ் சோகமடைதலினாற்றுன்பங் கனமானமோ
கத்தாற் சுகம் பாரேன்றார் (33)

கூடாத சரிரத்திற் புந்திவைத்துக் குணமான வருந்தலுடன்
பொருந்தல் வேண்டி
மூடாள் போற்றீனியிலுமி யோனிதன்னின் முயங்குவதுவே
சரியுமுறுவதாலே
நாடாமலிவ்விரண்டுந் (34)
பான்மையுடனென்றந்தை தாய் பெண்ணென்று
பாவனையாலப் படியே யாவதாலே

என்ற பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது. பெண்தரும் இன்பமே வாழ்க்கையென்று எண்ணாது, பந்த, பாசத்தால் அவர்பால் வாழ்வை அர்ப்பணிக்காது வாழ்வதே வாழ்க்கையாகும் என்ற கருத்தினை உணர்த்துகின்றார்.

அன்பு அகங்காரம் போன்றவற்றை நீக்கல்

தன்னையே தான் அறிய வேண்டும் என்ற நிலையில், உலகத்தில் பந்தபாசங்களை விட வேண்டும், அன்பையும், அகங்காரத்தையும் அத்வைதிகள் இராகம் என்ற சொல்லால் அழைப்பர். இராகத்து வேடத்தை கலைத்தால் வானத்தைப் போல் பொதுமையாகி விடலாம் என்கின்றார். நாகலிங்கய்யா. இக்கருத்துக்களை

வருகின்ற ராகத்து வேடநீக்கின வானம் போற் பேதமிலாத
பேதமாக
மருவுவதாலிங்கி தெனுமங்கி தென்னு மாகின்றயயிக்கியமே
மருவலாகு

யுரிமையுடனின் கங்குமி ராகத்துவேட மொழிவதுவெ
யயிக்யமென வுரைத்தானையன்
மோனமதாமனுபத்தில கங்காராதி முற்றுமிறந்த திட்டானம்
விளங்கலாலே
மானமுறாத் தன்னிடத்தி லகங்காரத்தான் மயக்கமதே
காரணமாய் வருவதென்றார்

என்ற பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

ஏதும் அறியாதவனாக இருத்தல்

சரீரம் முதலாக மாயை ஈறாக இருக்கக்கூடிய முப்பத்தைந்து தத்துவங்களையும் தானே கண்டு, காண்கின்ற காட்சிகளை ஒன்றுமே காணாததாகக் காண்கின்ற நிலையே ஞானம் ஆகும். என்கின்றார், இதனை

யாங்கெதுங் காண்கின்றதனை யொன்றுங் காணாதாய்க்
காணல் பிரத்தியக்க ஞானமென்றார்

என்ற பாடல் சுட்டும். ஈதனைத்துஞ் சொரூபமே யானெத்தை யச்சிப்பேன் எதையிகழ்வேன் என்றிருக்கிறதே பற்றின்மையாம் எனல் என்று தலைப்பிட்ட பாடல் மூலம் விளக்கும் பொழுது,

சகங்கள் பரசொரூபமென்றே யிச்சைதுவேஷம்விடல்
பற்றின்மை ஞான
நாட்டமதாலீதனைத்துஞ் சொரூபமென்றை நசையொழிதல்
பற்றின்மை கூடுமென்றார்.

என்கின்றார். இதன்மூலம் ஏதும் அறிந்தும் அறியாதிருத்தல் போல் இருப்பது நல்லது என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.

பிரபஞ்சத்தில் பெரியவன், சிறியவன் என்றல் சிற்றறிவாகும்

மாயை முதலாகச் சாரீம் ஈறாக இருக்கக்கூடிய பிரபஞ்சம் காலத்துக்கு உட்பட்டபடியால், அதனால் வரும்

உட்பட்டபடியால், உயர்வு, தாழ்வு வருத்தங்களுக்கு அளவில்லை. பிரபஞ்சத்தில் விவேகத்தாற் குணத்ன.தப் பொருளாய்ப் பாராமல் குற்றமே காணவேண்டும் என்றும். ஒன்றிலே தோன்றி அனைத்து உருவமான உணர்வுக்குப் பகையுறவில்லை என்றும், பெரியவன், சிறியவன், பெரிது, சிறிது என்றும் சொல்வது வீணானதாகும். இதை விளக்க.

நீங்குகின்ற சரீர்முதன் மாயையீறாய் நிகழ்தத்வ
முப்பதைந்துந்தானே கண்டு
பாங்காக நீங்குதலாலதனையெல்லாம் பரமாக வறிகின்ற
தன்னையொன்று
இசைக்கின்றகாலங்கட் கத்தமான வின்புருவாம் பரமாத்மா
வொன்றுமாத்ர
மசைவின்றிக் குறைவுநிறைவின்றிநிற்கு மசைகின்ற
மாயைமுதற் சரீரம் ஈறாய்
நசையுடைய நிறைவுகுறை வடைதலாலே நலமான சரீராதி
காலத்துட்பட்
டசைதலினால் வருத்தங்களுயர்வு தாழ்வா
மதற்களவையில்லை யென்றே அருனினானால்

என்ற பாடல்கள் அமைந்திருக்கின்றன.

சுக, துக்கம் நீக்க வேண்டும்

சுக, துக்கம் தோன்றுமாயின விருப்பு, வெறுப்பு தோன்றும் அதனால் ஏற்றதாழ்வு ஏற்படும். ஆதலால் சுவர்க்கம் செல்வதற்கத் தேவையான கன்மவினை நீங்காமலே அனோகசீலர் இறந்து போய் வீடுவர். இதனால், பெரியோர்கள் சுகதுக்கத்தைக் கருதாமல் சமநிலையில் நிற்க வேண்டும் என வேண்டுவர் என்கின்றார்.

வேண்தலாஞ் சுகதுக்கந் தோன்றுமாயின் விருப்பு
வெறுப்பதனாலே தாரதன்மியங்
காண்டலதனானராக சுவர்க்கமுற்றுங் கன்மவினை
நீங்காமலனேக சீலர்
மாண்டதனாற் பெரியோர்கள் சுகதுக்கத்தை மருவாமற்
சமநிலையின் மகிழ்தலாலே
தாண்டவொணாச் சுகதுக்கமுள்ள மட்டுந் தாரதன்மிய
நீங்காது தவிர்வாயென்றார்.
பாய்கின்ற மகமதுதான் விடயந்தன்னிற் பற்றம் போதின்பம்
பின் பலவாந்துன்ப
மொய்விலதால் வெறுப்புவருமிபோற் றன்னிலொரு
சணிகமுறுமாகிலொருகாலும் பின்
னேயமதாந் நற்சுகத்து வெறுப்பிலாது நெடுநாளும் பெரியோர்
களிருப்பாதாலே
நேயசுகம் பின்வெறுப்பாந்தற்சுகந்தா னேரிலொருகாற்
பிரியநீங்கா வென்றார்.

இப்பாடலில், பிரபஞ்சத்தில் வரும் சுகம் பின்னால் வெறுப்பாகம்.சொரூபத்தில் வரும் சுகம் எத்தனை நாளிருந்தாலும் பிரியம் வாங்காது என்று கூறுகின்றார். வருங்காலச் செய்கையை இன்ப, துன்பமறிந்து செய்ய வேண்டும் என்று கூறகின்றார்.

நீங்காதோர் கார்யத்தை முயற்சி செய்வோனிகழதனாற்
சுகதுக்கமறிந்து கொண்டு
பாங்காகச் செயவேண்டுமானதாலும்
மூன்றாவதாஞ் சுகதுக்கமாதியாவுமுறுகின்ற
சங்கற்பமயமதாலே

என்ற பாடல்கள் விளங்குகின்றன. பிறர் குற்றத்தைத் தனதாய் எண்ணிக் கொண்டு தன் குற்றத்தை விசாரிக்க வேண்டுமெனவும் சொல்கின்றார், இதனை,

கண்டபலவுயிர்களெல்லாந்தன்னை விட்டுக் காணாதாலவர் குற்றந்தனதாய்க் கண்டு
தொண்டானதன் குற்றம்பார்த்து நீக்கிற் சுகமதனை யடைந்திடுவனாதலாலே
மண்டலமார்பலர் குற்றந்தானாய்க் கண்டுமருவியதன் குற்றமதை யொழிவா யென்றாய்

என்ற இப்பாடல் வழித் தெளியலாம்.

ஞானநிலையே மோட்சம்

ஆசார்ய சங்கரர் வகுத்தமைத்த அத்துவித வேதாந்தக் கொள்கையானது ஞானத்தைப் பற்றிக் கூறும்பொழுது எடுத்த இப்பறிவியலேயே முக்தியைப் பெறமுடியம் என்பதை வலியுறுத்துகின்றது. மோட்சம் என்பது சீவனால் சென்றடையக்கூடிய ஒன்றன்று. சீவன் தற்சொரூப நிலையில் நிற்றல் என்பதே ஞானம் ஆகம். தற்சொரூபத்தை அறிய முடியாமல் சீவனை மறைத்து நிற்கும் அஞ்ஞானத்தை அழிவு பெறச் செய்யும் நிலையே ஞானமாகும் என்று கூறகின்றது.

பிறவியை ஒழிப்பதற்கும், பிரம்ம நிலையைப் பெறுவதற்கும் ஞானமே வாகாட்டிவதாகும். ஞானம் பொய்மை ஞானாமாக அமைவதற்குப் புறச்சூழல்கள் காரணமாகிவிடுகின்றன. பொய்மை ஞானம் பற்றிய ஆய்வியல் முறையை கியாதிவாதம் என்ற பெயரால் தத்துவத்துதறையானது இன்று விளக்க முற்படுகின்றது. கயிற்றைப்பாம்பெனவும், சிப்பியை வெள்ளி எனவும் அறியும் மாயை குறித்து அத்வைதம் மிகுதியாகக் கூறுகின்றது. கயிறைக் கயிறாகவும், சிப்பியைச் சிப்பியாகவும்

அறிவது ஞானம் என்ற நிலையாகும். ஞானத்தை விளக்க இவ்வுவமையை அத்வைதம் பாடிய பலர் கையாண்டுள்ளனர். தத்துவராயர், நாகலிங்யகய்யா போன்றோர் நூல்களில் இவ்வுவமை மிகுதியாகக் காணப்படுகின்றது.

சொல்லரியதுரிய மதிற்சகலதுன்புந் தொலைந்து பரமானந்தந்
தோன்றலாலு
மெல்லாமுஞ்சின்மயமென றெண்ணுகின்ற விந்நிலையே
சங்கரர்க்குமிருப்பதாலும்
புல்லரியதுரியநிலை தனிலுமெல்லாம் பொருவிலாச் சின்மய
மென்றெண்ணப் பட்ட
நல்ல நிலையினும் புத்தியழுத்தம் வேண்டும்.
நலமிதுவே யெனவையனுரைத்தானன்றே.

என்ற பாடல் மூலம், துரிய நிலையினும் எல்லாம் சின்மயமமென்ற நிலையினும் புத்தி அழுத்தம் வேண்டுமென்று சுறுகின்றார். தன்னை எவ்விதமாக அறியவேண்டும் என்கின்ற பொழுது,

உரையுள்ள நனாக்கனாச்சுழுத்தி தன்னிலொவ்வாத
விந்தியங்கண்மனாதி மேலும்
புரையுள்ள சூனியமாங் கூத்துவந்து போகவுமே தானிருந்தங்
அறிவதாலே

தான் நித்யமாகும் என்று கூறுகின்றார். தானாகி உலகமெலாம் தனக்கு வேறானதாக இல்லாமல் தானாகவே இருப்பதால் அத்வைத ஞானமாக ஆகிவிடுகின்றது என்றுரைக்கின்றார். இதனை,

நாட்ரிய வஸ்து ஒன்றே யிருப்பதாலே, தானாகிச் சகத்தெல்லாம்
தனக்கு வேளாய்ச் சகத்திலாதா லுமத்துவிதந்தான்
பல்விதமாய்க் காண்கின்ற பொருள்களெல்லாம் பற்றறவே

துடைபட்டுப் போவதாலுமெல்லா முமித்தையதா
மென்று மென்றே இயம்புவதில் சந்தேகமில்லை.

என்ற பாடல்கள் மூலம் அறியலாம்.

ஞானத்தை ஆன்ம ஞானம், விருத்தி ஞானம் என்று வகைப்படுத்துவர். மனமும், புத்தியும் அகக்கருவிகள் ஆகும். இவற்றற்கு மேலானதாக இருக்கக்கூடியது ஆன்மா. ஆன்மா தன்னளவில் மாறாத ஞானமயமாக என்றும் விளங்கிக் கொண்டிருப்பது ஆன்மஞானம் எனப்பெறும். அந்தக்கரண விருத்தியானது (உடல் உறுப்பு) ஆத்மாவின் ஞானத்தால் விளக்கமடையும் போது, ஏற்படும் அறிவு விருத்தி ஞானமாகும். காட்சி அறிவு என்றும் கூறுப்பெறும், பழுதையைப் பழுதையாக, பிரபஞ்சத்தைப் பிரமமாகக் காணும் அறிவே விருத்தி ஞானம் ஆகும், இவற்றை,

சொன்னவொரு பழுதையினின் வந்தசற்பஞ் சுத்தமதாம்
பழுதையெனச் சொல்வதே போற்
பின்னமிலாப் பிரமத்திற்தோன்றாநின்ற பிரபஞ்சம்
பிரமமதேயாகுமென்றிங்

என்ற பாடல் வழி அறியலாம்.

நாகலிங்கய்யா, ஞான அந்தாதி என்ற நூலில், தன் குரு அருளிய திருவாக்குகளை உரை செய்யும் முகமாக, அத்வைதத் தத்துவங்களை உள்ளடக்கிச் செய்துள்ளார்.

கண்டுஅடியேன் வணங்கவந்த முத்துராமக் கனி திருவாக்கு
அருளியிரும் வாக்கியத்து
ஞுண்டான வெண்பதொன்றாம் வாக்கியத்தை
யுரைசெய்தேனுண்மை யறிவு திக்க வென்றே

என்று தாம் நூல் செய்த நிலை குறித்து விளக்குகின்றார்.

பஞ்சகோசத்தில் காணலாகும் அத்வைதத் தத்துவங்கள்
பஞ்சகோசம்

பஞ்ச என்றால் ஐந்து, ஐந்து கோசங்களைப் பற்றியது என்பதனால், பஞ்சகோசம் என இந்நூலுக்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது. கோசம் போலவே ஆத்மாவை அறியவொட்டாமல் மறைக்கின்றபடியால் கோசம் என்று பேர் வந்தது.

பஞ்சகோசம் என்பதற்கு அன்னமயகோசம் பிராணமய கோசம், மனோமயக் கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் என ஆன்மாவை மூடிக்கொண்டுள்ள ஐவகைக் கோசங்கள் (55) என்று சமயச் சொல்லகராதி பொருள் தருகின்றது.

கோசம் விளக்கம்

கோசம் என்பதற்கு உறை, கருவூலம், கருப்பை, கவசம் என்ற பொருள்களை மதுரைத்தமிழ்ப் பேரகராதி கூறுகின்றது. கோசம் என்று சொல்லக்கூடிய உறையானது ஆத்மாவைச் சுற்றி மறைத்துக் கொள்ளுகின்றது. ஆத்மாவைப் பிரம்மத்தை நோக்கிச் சொல்லவிடாமல் தடுப்பதனால், இதை விலக்க வேண்டும் என்பர் அத்வைதிகள்.

கோசத்தின் முக்கித்துவம்

ஆத்மா, பஞ்சகோசத்துக்கு அன்னியம் என்று சுருதி (வேதம்) சொல்கிறபடி. பஞ்சகோசத்தை அறிந்து கொள்ள வேண்டும் இதை அறியாமல் பஞ்கோசத்திற்கு அன்னியமாகிய பிரம்மத்தை அறியக்கூடாதகையினால் பஞ்சகோத்தத்துவம் மிகவும் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. எனவே, அத்வைத

தத்துவங்கிளல் பஞ்சகோசம் பற்றியவை சிறப்பிடம் பெறுகின்றன. ஆத்மாவை அறியவிடாமல் தடுக்கின்ற கோசத்திற்குப் பல உவமைகள் அத்வைதீகளால் கூறப்படுகின்றன. அவற்றில் சில குறிப்பிடத் தக்கவையாகும். அக்கினியினுடைய சத்தையை (உருவத்தை) உபசீவித்துக் கொண்டே தோற்றப்பட்ட புகை அவ்வக்கினியை மூடிக்கொள்வது போலும், பழுதையின் சத்தையை (உருவத்தை) உபசீவித்துக் கொண்டே தோற்றப்பட்ட பாம்பு அந்தப் பழுதையை மூடிக்கொள்வது போலும், ஆத்ம சத்தையை (உருவத்தை) உபசீவித்துக் கொண்டே தோற்றப்பட்ட பஞ்சகோசங்களுக்கும் ஆத்மாவை மூலம்படியான திறமையுண்டு என்பர்.

பஞ்சகோசத்தின் வகைகள் அன்மைய கோசம்

ஸ்தூல தேகத்தில் பொருந்திய சீவனும் ஈசனும் முறையே விசுவனென்றும் விராட்புருடனென்றும் சொல்லப்படுவர். ஸ்தூலதேகமே அன்னமய கோசமாகும். சட் பாவவிகாரமாகத் தோற்றப்பட்ட தூல தேக (56) மென கட்டளைப் பிரபந்தம் எனும் நூல் கூறுகின்றது. இதனை,

தூலமே மருவுஞ் சீவன் சொல்லிய விசுவனாகுதந்
தூலமே மருவுமீசன் சொலும்விராட் புருடனாகுந்
தூலமே யன்ன கோசந்

என்று கைவல்லிய நவநீதம் நூல் உரைக்கின்றது. அன்னமய மாவது தோலும், இரத்தமும், தசையும், நரம்பும், எலும்பும், மூளையும் ஆகிய உடலாகும்.

பிராணமய கோசம்

பிரானுங் கன்மேந்திரியமும் கூடி நிற்பது பிராணமய கோசமாகும் கன்மேந்திரியும் என்பது வாக்கு (வாய்) (கால்) பாணி (கை) பாயுரு (அபானம்) உபத்தம் (குறி) என்ற ஐந்தாகும்.

(58) இதனை நிஷ்டாநுபூதி நூல் விளக்கமாக, ப்ராணாதியாகிய சமஷ்டி வாய் ஒன்றுடனே வாக்காதி கர்மேந்திரியம் ஐந்தும் கூடியிருத்தல் (59) என்று கூறுகின்றது.

மனோமய கோசம்

புத்தி நீங்கலாக மனம் ஆதியாகிய அந்தக்கரணம் ஒன்றுடனே, வாக்கு முதலாகிய கர்மேந்திரியம் ஐந்தும் கூடியிருத்தல் மனோமய கோசமாகும். (60) கரணம் நான்காவது மனம் (ஒன்றை நினைப்பது) புத்தி (அதனை விவரிப்பது) அகங்காரம் (அதனைக் கொண்டு மேன்மேலும் எழும்புவது சித்தம் (அதனைச் செய்து முடிப்பது என்பவை ஆகும்.

விஞ்ஞானமய கோசம்

புத்தியும், ஞானேந்திரியமும் கூடி நிற்பது விஞ்ஞானமய கோசமாகும்.

ஆனந்தமய கோசம்

மனோமயமும் விஞ்ஞானமயமும் அஞ்ஞானத்தில் அழுந்திய காரணதேகமாய் இருத்தல் ஆனந்தமயகோசமாகும்.

பஞ்சகோசத்தை அறிதல்

அஞ்ஞானம் பெற்றிருக்கக்கூடிய ஆத்மாவாவது பஞ்ச கோசத்தின் முழுக்கட்டுப்பாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும். பஞ்சகோசத்தின் தன்மையினை அறிந்து ஆத்மா அதை விட்டுவிட்டு மெய்ஞானத்தைப் பெற வேண்டும். இதை அத்வைதாந்த சுவாமிகள். நானென்கின்ற ஆத்மா எதுவரை பஞ்சகோசம் என்ற அத்தியாயத்தை விடவில்லையோ அதுவரை ஜென்மப் பிராப்தி (மோட்சம்) இல்லை. முக்தியும் இல்லை. சித்தம் ஆனதினால் எதுவரை அவஸ்தாத்திர

யங்களை நானென்றும் சத்தியமென்றும், பாவித்து இருக்கின்றானோ அதுவரை மேலே சொன்ன பஞ்சகோசங்களும் காணப்படும். (61) என்கின்றார்.

பஞ்சகோசம் என்கின்ற குகையில், பிரம்மத்தைப் புத்துக்குக் காட்சியாக எவன் அறிகின்றானோ, அவனே சகலவிதமான துக்கங்களிலிலிருந்து விடுபட்டவனாகவும், பெற வேண்டியவற்றைப் பெற்றவனாகவும் சீவன் முக்தனாகவும் இருக்கின்றான். நம்மை அறியாமல் நாம் செய்து கொண்டிருக்கக்கூடிய செயல்களைப் பஞ்சகோசமே இயக்குகின்றன. இதையறிந்து அந்தந்தக் கரணங்களை அந்தந்தத் தொழில்களைச் செய்யவிட வேண்டும். இதனை ஆத்மாவும் பஞ்ச கோசமும் சேர்ந்து தொழில் நடக்கிறதாயிருந்தாலும், விவரிக்கும் பொழுது பஞ்சகோசமே சகலவியாபாரமுஞ் செய்கிறதும் அவைகளுக்குக் கொஞ்சம் குறைவு வந்தால் அந்தந்தத் தொழில் நடவாமல் போவதம் அனுபவமாய் காணப்படுகின்ற படியாலும், எப்பொழுதும் பஞ்சகோசமே சகல வியாபாரத்தையும் செய்கிறதே தவிர சாட்சியாகிய நாம் எப்பொழுதும் ஒன்றும் செய்யவில்லை (62) என்ற அத்வைதாந்த சுவாமிகளின் உரைகண்டு தெளியலாம்.

அன்னமய கோசம்

அன்னம் என்பது தூலதேகமாகும். இது உறை போல் ஆன்மாவினை மூடியிருந்தலால் கோசத்தில் ஒன்றாம். இதனை அன்னத்தினால் பிறப்பாய் ஸ்தம்பம் போல் தூலமாய் ஷட்கோசத்துவமாய் தோற்றப்படுகிற தூலசரீரமே அன்னமய கோசம் என்று வாசுதேவர் மனனம் விளக்குகின்றது.

அன்னமய கோசத்திற்கும், ஆத்மாவிற்கும் கூட்டுறவு (தொடர்பு) உண்டு. அதாவது சீசன், சாமானிய சாதிவிகாரம்,

அங்கம், வர்ணம், விஷேசசாதி, ஆசிரமம், நாமம், சமஸ்காரம், வேசம், கிரியை முதலான அன்னமயகோச தர்மங்கள் ஆத்மாவினிடத்தில் தோற்றுவிக்கப்படுகின்றன. இதனால் தூலசரீரம், என்றைக்கும் இருப்பதுபோல். இன்பமாய் இருக்கின்றதென்று அன்னமயகோசத்தினிடத்து மாயைத் தோற்றம் பெறுகின்றன. எனவே, இவற்றை அறிந்து கொண்டு இத்தகைய தர்மங்கள் ஆத்மாவிடத்திலிருந்து விலகி ஓடச் செய்ய வேண்டும். நான்சீவன் மனுஷனென்பது சீவத்துவாரா சாமானிய அத்தியாசம். நான் பிறந்தேன், இருக்கின்றேன், வளர்ந்தேன், பருத்தேன், இளைத்தேன், நசித்துப் போகின்றேன் என்பது விகாரத்துவார விஷேச அத்தியாசம் (63) என்பார் அப்பாசாமி பிள்ளையவர்கள், அன்னமயகோசத்தை விளக்கும் முகமாக நாகலிங்கய்யா, விகாரத்துவாரா விஷேக அத்தியாசத்தை கீழ்க்காணும் பாடல்களில் அழகாக விளக்கியுள்ளார்.

நானுமே பருத்திளைத்தே னானுயர் வென்கையாலு
மானதோ நன்னகோச மான்வாவாமென்று சொல்லி
னூனமாமரண மூர்ச்சை யுற்றிடும்பொழுது தன்னை
மானமாய்ச் சூழ்ந்திருந்த வஸ்துவை யறியாததாலும். (64)

தேகத்தாற் பலமாய்த்தேக மிலாவிடிற் பலங்களற்றும்
பாகமாந் தேகம் விட்டோர் பரமான்மா விலாததாலும் (65)

பருத்திளைத்த என் கையினாலுமேலாய் உன்னில் (66)

நான் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்பது வர்ணத்துவாரா அத்தியாசம். நான் புருஷன் நான் ஸ்திரி, நான் அலியென்பது அங்கத்துவாரா அத்தியாசம் ஆகும். நான் தெலுங்கன், தமிழன், கணக்கன் என்பது விசேசாதித் துவாரா அத்தியாசம் ஆகும். நான் பிரம்மசாரி, சந்நியாசி என்பது ஆசிமரத்துவாரா அத்தியாசம். நான் கிருஷ்ணன், ராமன்,

கறுப்பன், சிகப்பன் என்பது நாமத்துவாரா அத்தியாசம். நான் தீட்சன், சோமயாகி, நான் பவுண்டரீகயாகி என்பது சமஸ்காரத்துவாரா அத்தியாசம். நான் உபாத்தியாயன், கல்யாண மாப்பிள்ளை, தச்சன், குசவன், கூலிக்காரன் என்பது கிரியாத்துவாரா அத்தியாசம் ஆகும். அன்னமய கோசத்தில் நானென்பது மலம் போலவென்று விசேகத்தால் தள்ளத்தக்கதாகும்.

நாகலிங்கய்யா, அன்னமயகோசத்தை விளக்கம் வகையில் பல பாடல்கள் பாடியுள்ளார், மைந்தனுக்குச் சுறுமுகமாக பாடல்கள் அமைந்துள்ளன. இதனை,

நாமறிபொருளாய் நம்மை
யிசையவையறியாதாலு மிவ்வன்மையமாங்கோச
மிசையான தானன்றெென்று மிகவுமே யறிவாய் மைந்தா.

என்று மைந்தனை விளித்துக் கூறுவதன் மூலம் அறியலாம்.

பிராணமய கோசம்

கர்மேந்திரிய பஞ்சமும், பிராணாதி பஞ்சமுங்கூடினது. பிராணமயகோசம் (68) ஆகும் என்று வாசுதேவர் மனனம் நூல் கூறுகின்றது.

பிராணமயகோசத்தை விளக்க வரும் அத்வைதிகள் அதை ஒரு நல்ல எடுத்துக்காட்டு மூலம் விளங்குவர். அது இங்கு குறிப்பிடத் தருந்தவையாகும். கர்மேந்திரியத்துடன் கூடிய பிராணமயகோசத்தை நானென்பது தத்துப் பிள்ளையை எடுத்துத் துக்கப் படுகிறவள் போலும். இதர அத்தியாசம் என்றறிந்து சர்வவிதத்திலும் நிகிருஷ்டர்களான நீசர்களைப் போலப் பிராணமயகோசத்தைத் தள்ளத்தக்கது (69) என்பர்.

ஆத்ம சுபாவமாகவும், பிராணமய சுபாவமாகவும் தோற்றுகிறபடியினால் ஆத்மாவிற்கும் பிராணமய

கோசத்திற்கும் அன்னியோன்ய அத்தியாசத்தினால் கூட்டுறவு (தொடர்பு) வந்தது. ஆகும் எனவே, பிராணமய கோசத்திற்கும் ஆதமாவுக்கும் கூட்டு உண்டென்பர். அது எவ்விதமென்றால் அத்தியாச பூர்வகமாய் நான் பசியையுடைத்தானவன், தாக முண்டானவன், கிரியையுடையவன், வீரியமுண்டானவன், பெலமுண்டானவன், சக்தி யுண்டானவன், வாய் உண்டானவன், நான் தாதா, நான் ஊமை, கையில்லாதவன், சப்பாணி கூனன், காலுண்டானவன், என்கின்ற இது முதலானவை பிராணமயகோச தர்மங்கள் ஆகும் என்பார் அப்பாசாமிப் பிள்ளையவர்கள். இதனை நாகலிங்கய்யா,

இதனயலாகவான்மா வில்லாத்தாலுநானே
மதவலிவலியிலாதான் மலிபசிதாகமுள்ளா
னிதமானவசனன்றன னேகினனென்பதாலுஞ்
சதமானபிராணகோசந் தானான்மாவாகுமென்னில்

என்ற இப்பாடலில் பசிதாகம் உள்ளான் என்று பிராணமயத் தர்மம் குறித்துக் கூறிகிறனார். மேலும்,

அசைவுறுவாயு விருந்தாலும் பலனமையாதவை போல
ஆகியமனவான் மாநினைத்தாட்ட வசையும் பிராணனையும்
யூகித்தாட்டிய வல்வான்மாவே றுறுதலினாலுமிழி
வாகியதேக மெனதென்றறிபவன் வரமாயதற்கயல்போ
லேகுறுமெனதாம் பிராணன்பெலமா யிருக்குதுவில்லை
பெலம்.

என்றும் பசியுந் தாகமதுளதிங் கென்வாக்காதிகளு (74)

நசையுறு பிராணமய கோசந்தா னாமலவாமென்றே
வசையற வறிந்தெக் காலும் விலக்கிடு. (75)

என்று பாடல்கள் மூலம் பிராணமயகோசத்தின் தன்மையினை விளக்கி அதைத் தவித்திடும் முறையினைக் கூறுகின்றார்.

மனோமய கோசம்

மனோமய கோசத்தை நான் என்று சொல்லுவது ஓடுகிற சலப்பிரதிப்பிம்பம் போலவாம். மனோமய கோசத்திற்கும் ஆத்மாவுக்கும் மற்ற கோசங்களைப் போலக் கூட்டு உண்டு அக்கூட்டு பற்றி வாசுதேவமனனம் என்ற நூல் கூறும் பொருள் சிறப்புடையதாகும். நான் சங்கற்பவான், விகற்பவான், நான் சோகி, மோகி, ரோகி, நான் போகி, குரோதி, துவேஷி, நான் பிரஷ்டன், சற்சனன், கிராதகன், செவிடன், குருடன் என்கின்ற இது முதலான மனோமயகோசசுபாப தர்மங்கள் மனோமய கோச்தினிடத்திலும் தோற்றுகின்ற படியினால் மனோமய கோசத்திற்கும் ஆத்மாவிற்கும்.... கூட்டுறவு வந்தது. (76) இதையறிந்து நம்மை நாமே பொருளதாய் அறிந்திடல் வேண்டும் என்கின்றார். இதனை,

என்றன் மனதுமே சங்கற்பிக்கிதிங் கிச்சையாதிசெய் தென்றலாலுமே
மன்றன்மனமயகோசம் பஞ்சதன் மாத்ரைசத்துவ குணத்தில் வந்ததா
லொன்றசத்துடன் சடந்துக்காதியா யுற்றுநடமறி பொருளாய் நமை
நன்றறிந்திடா தாலுமமைய கோசநாமலவென்று தேறுவாய் (77)

என்ற பாடல்கள் வழி வெளிப்படுத்துகிறார்.

விஞ்ஞானமய கோசம்

பஞ்சகோசங்களுக்குள்ளே விஞ்ஞானமயகோசத்தில் மட்டும் தான் ஆத்மாவானது பிரகாசமாய் விளங்கும், (78) இது எதுபோலென்றால், சூரியன் சுவரிலும் சேற்றிலும் ஓடுகின்ற கலங்கின நீரிலும், ஆவரணத்துக்குள் இருக்கிற நீரிலும் நன்றாய் விளங்காமல் இருக்கும். தெளிவாயும் அசைவற்றும் பாசியற்றும்

இருக்கின்ற நீரில் மட்டும் பிரகாசமாய்ப் பிரதிப் பிம்பம் தெரிவது போலாகும். விஞ்ஞானமய கோசத்திற்கும், ஆத்மாவுக்கும் கூட்டு உண்டு. நான் கர்த்தர், நிச்சயவான், புத்திவான், யுக்திபுத்தி சாதுரியமுண்டானவன், யோக சாதகன், நான் விரதன், பண்டிதன், லோகாந்தரத்திற்குப் போகிறவன் என்கிற இது முதலான விஞ்ஞானமயகோச சுபாவதர்மங்கள்.. விஞ்ஞானமய கோசதர்மமாகவும் தோற்றுகின்றபடியினால் கூட்டுறவு வந்தது. (79) என்று வாசுதேவமனனம் விளக்குகின்றது.

நாகலிங்கய்யா, விஞ்ஞானமயகோசத்தை விளக்கும் பொழுது, நான் புத்தி வந்தனான் கர்த்தாவென்னு மந்தமுள விஞ்ஞானமயமாங் கோசமான்மாமென்பாயேலதுவுங் கேளாய் (80) என்கின்றார் . மேலும்,

மறிவாம் விஞ்ஞானமய கோசமும் பஞ்சதன் மாத்திரைச்
சத்துவத்தி
லுற்பனமதாயசத் தாதியாய்நம்மாலு முற்றறிவதாயு நம்மை
யொருநாளுமறியாத விஞ்ஞானமயகோச மோதினாமென்று
மைந்தர் (81)

என்று கூறுகின்றார். நம்மை, நம்மால் முற்றும் அறிவதாய் உள்ள நிலையினை அடைந்தால், கோசம் நீங்கி விடும் என்ற பொருளை இப்பாடலில் விளக்குகின்றார்.

ஆனந்தமய கோசம்

பிரதானமாக இருக்கக்கூடிய அஞ்ஞானமே ஆனந்தமய கோசமாக இருக்கின்றது. ஆனந்தமய கோசத்திற்கும் ஆத்மாவிற்கும் கூட்டு உண்டு. அதாவது நான் போக்தன், சந்துருஷ்டன், நான்சுகி, சாந்தன், ராசதன், தாமதன், சடன், அனுந்தன், துக்கன், அசந்துருஷ்டன், மூடன், அஞ்ஞானி,

துஷ்டன், முண்டன், மோகிதன், விவேகி, பிராந்தனென்கிற இது முதலான அஞ்ஞான தர்மங்கள் என அஞ்ஞானம் நன்றாய்த் தோற்றப்படுகிறதென்ற ஆனந்தமயகோச சுபாவமாகவும் தோற்றப் படுகின்றபடியினால் ஆனந்தமயகோசத்துக்கம் ஆத்மாவுக்கும் அன்னியோன்ய அத்தியாசத்தினால் கூட்டுறவு வந்தது ஆகும். நாகலிங்கய்யா ஆனந்தமய கோசம் குறித்துக் கூறும்பொழுது. அஞ்ஞானத்தின் தன்மையினை விளக்கி, சுபாவதர்ம வார்த்தைகளைப் பயன்படுத்திப் பாடல்கள் புனைந்துள்ளார். இதனை,

நானூறு சுகியஞ்ஞானி நானுமே பிரியனென்று
மானவானந்த கோச மான்மாவாமென்று சொல்லி (83)
சுழுவிலா வென்னஞ்ஞான மென்சுகமென்கையாலு
மழியுமானந்த கோச மவித்தையில் வருவதாலும் (84)

என்ற பாடல்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். இப்பாடலில் நானொரு சுகியன், அஞ்ஞானி, நானுமே பிரியன் அஞ்ஞானம் என்ற சுவாவதர்ம வார்த்தைகள் நாகலிங்கய்யாவால் கையாளப் பட்டிருக்கின்றன.

நம்மை அறியாதபடியாகச் சூழ்ந்திருக்கக்கூடிய பஞ்ச கோசங்களை அறிந்து எவன் அதை நீக்க முயல்கின்றானோ, அவனே ஞானம் பெறுகின்றான். ஆனால் யாரும் முயல்வதில்லை இதை நாகலிங்கய்யா கூறும்பொழுது,

நாமறிவதாயு நிசநம்மையியாதாயு நிகழுமானந்த கோசம்
நசை பஞ்சகோசநீக்கி னானெவன் சொல்வீரையா (86)

என்று கேட்கின்றார். ஆன்மாவின் சிறப்பைக்கூறி அவ்வான்மா அஞ்ஞானம் பெற்றிருத்தலைச் சொல்லுகின்றார். இதனை

ஆன்மா சுகமாய்த் தன்னை யுறும் பஞ்சகோசங்கட்கு
மீனமில் சுகங்கொடுக்கு மின்பத்தாலானந்தந்தான் (87)

என்ற பாடல் சுட்டுகின்றது. பஞ்சகோசங்களை நீக்க வேண்டும் என்று நாகலிங்கய்யா கூறுவதை,

ஆதலால் கோசமைந்து மசத்தாதியென்று நீக்கிச்
சாதமிலானக்மா நாளுஞ் சத்தாதி லெட்சணத்தா
லேதமிலதுவே நானென்றெண்ணி நீயறிவாய் (88)

என்ற இப்பாடல் வழி அறியலாம். ஆனந்தமாய் கோசத்தை நானென்பது கண்ணை மறைக்கின்ற இருட்டுபோலும் சத்தியாத்தி யாசமென்று அறிந்து சொருபத்தில் (பிரம்மத்தில்) விழிப்பாகிற தீபத்தால் தள்ளத்தக்கது (89) என்று அத்வைதாந்த சுவாமிகள் கூறுவர்.

ஆத்ம நாமத்தில் காணலாகம் அத்வைதத் தத்துவங்கள்

அத்வைத தத்துவத்தில் ஆத்மா குறித்த சிந்தனை குறிப்பிடத் தகுந்தது ஆகும். ஆன்மாவே ஆத்மா என்று அழைக்கப்படுகின்றது. இந்நூலில் ஆத்மாவையும் பஞ்ச கோசங்களையும் இணைந்து பாடல்கள் மிகதியாக எழுதப்பட்டுள்ளன.

ஆத்மாவும் பஞ்சகோசமும்

ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பலகவசங்களால் மூடப்பட்டாற் போல ஆத்மா மூடப்பட்டிருப்பதாகக் கூறும் ஒரு குறிப்பு தைத்திரிய உபநிடதத்திலே உள்ளது. (90) இந்த உபநிடதக் கருத்தைப் போல, ஆத்மாவைச் சுற்றிக் கோசங்கள் ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் காணப்படுகின்றன. ஆத்மாவும், கோசங்களும் நம்மை வழி நடத்துகின்றன. இதையே, ஆத்மாவும் பஞ்சகோசமும் சேர்ந்து தொழில் நடக்கிறதாயிருந்தாலும், இப்போது விசாரிக்கும் போது பஞ்சகோசமே சகலவியாபாரமுஞ் செய்கிறதும், அனுபவமாய்க்

காணப்படுகிற படியாலும் எப்பொழுதும் பஞ்சகோசமே சகலவியாபாரத்தையும் செய்கிறதே தவிர சாட்சியாகிய நாம் எப்பொழுதும் ஒன்றும் செய்யவில்லை என்று அத்வைதாந்த சுவாமிகள் கூறுவர்.

எனவே, ஆத்மாவுடன் சேர்ந்தே உறைந்திருக்கின்ற பஞ்சகோசத்தை ஆத்மா விட்டுவிட வேண்டும். ஆத்மாவும் பஞ்சகோசமும் சேர்ந்திருக்கும் நிலை குறித்து அழகான எடுத்துக்காட்டு மூலம் அத்வைதிகள் விளக்குவர். யோக்கியன் வீட்டில் அயோக்கியர்கள் திருட்டுச் சொத்துக்களைத் திருடி வைத்திருந்ததைப் பற்றி உலகத்தார் யோக்கியனையுஞ் சேர்த்துத் திருடன் என்று சொல்லி வருங்காலத்தில் யோக்கியன் அவர்களை ஒருவரொருவராய்ப் பிரித்து வெளியில் தள்ளின பின்னும் அவர்கள் வேறேயாயிருந்து பழைய திருட்டுத் தொழிலை் செய்துவருவதால், இவனுடைய யோக்கியதைப் பற்றி ஜனங்ள் மூன்று காலத்திலும் இவன் யோக்கியனென்று நிச்சயமாய்ச் சொல்லுதற்கு ஆதாரமே தவிர விரோத மில்லாதது என்பர்.

நாகலிங்கயய்யா, பஞ்சகோசம் என்ற நூலில் மேற்படிச் செய்திகளை விரிவாகக் கூறியிருந்தாலும் இந்நூலிலும் பஞ்ச கோசங்களைப் பற்றிக் கூறுகின்றார். இவையோடு ஆன்மா பற்றி செய்திகள் மிகுதியாகக் கூறப்பட்டிருக்கின்றன. மற்ற பாடல்களில் அத்வைதக் கருத்துக்கள் விளக்கப் பட்டிருக்கின்றன.

ஆன்மா அழியாகத் தன்மை உடையது, மோட்சத்தைப் பெறக்கூடியது அன்னமயகோசம் முதலாகிய, பஞ்சகோசங்களும் தொடராத தன்மையினையுடையது. அதற்கு நித்தியம் என்று பெயர் அப்பாடலானது.

மன்னும் பிரகாபாவமுதன் மருவு நான்குங் கடமதனுக்
குன்னிலென்றுமிருந்து மவையுயர் மண்ணதனுக் கிலாததுபோ
லன்ன கோசமைந்தினுக்கு மபாவநான்கு மிருத்தலினாற்
சொன்னவ பாவங்களிலொன்றுந் தொடராவான் நித்தியமே (92)

என்று கூறுகின்றது. ஒருவன் நான் கொல்லுகிறேன் என்று எண்ணுவதும், நான் கொல்லக் படுகின்றேன் என்று எண்ணுவதும் இரண்டும் அறியாமை. உயிரானது கொல்லுவதுமில்லை. கொல்லப் படுவதுமில்லை. நைந்து போன ஆடைகளைத் தள்ளிவிட்டுப் புதுஉடைகளை அணிவது போல் உடலைக் களைந்து விடுகிறது. உயிர். களைந்துவிட்டுப் புது உடலைப் பூணுகிறது (93) என்பது ஆன்மாவைப் பற்றிக் கண்ணன் கீதையில் அர்ச்சுனனுக்கு உபதேசித்த தத்துவம் ஆகும். ஆன்மா குறித்து நாகலிங்கய்யா கூறும்பொழுது,

பொருமெலாந் தேசத்தேயும் பிபுகலுமெக் காலத்தேயு
நிறைவஸ்துவெலாமு மான்மா நிறைவதாற் பூரணமாமே. (94)

என்று இப்பாடலில் ஆன்மாவின் பூரணத்தன்மை குறித்துக் கூறிகின்றார்.

தினம், திங்கள், வருடம், யுகம், கற்பம் தோறும் பஞ்சகோசம் வருவதன் முன்னும் பின்னும் சமமாய் உண்மையாய் காண்கின்ற நிலையில் ஆன்மாவிற்கு அழிவில்லை. ஆன்மா பிரபஞ்சத்திற்கு ஆதாராமாகத் தோன்றும் போது இறைவன் எனப்படுகிறது. இதே ஆன்மா. சிறு பிரபஞ்சமான இந்த உடலிற்கு ஆதாராமாகத் தோன்றும் போது ஜீவன் ஆகிறது. எனவே மனித ஆன்மா என்பது இந்த ஜீவனே.

புருஷன் ஒன்றே, அது வேதாந்தம் கூறம் பிரம்மம். ஆராயும் போது ஈசுவரன், ஜீவன் இரண்டுமே பிரம்மத்துள் ஒன்றாகி விடுகின்றன. இடையீடற்ற நீயேதான் பிரபஞ்சம், எங்கும் நீயே ஊடுருவி நிற்கிறாய். எல்லா கைகளாலும் நீ உழைக்கிறாய்,

எல்லா வாய்களாலும் நீ உண்கிறாய், எல்லா மூக்குகாளலும் நீ சுவாசிக்கிறாய், எல்லா மனங்களாலும் நீ சிந்திக்கிறாய் பிரபஞ்சம் முழுவதும் நியே! பிரபஞ்சமே உன் உடல் படைக்கப்பட்டவை, படைக்கப்படாதவை எல்லா பிரபஞ்சமும் நீயே, பிரபஞ்சத்தின் ஆன்மா, உடல் இரண்டும் நீயே, நீயே இறைவன் என ஆன்மாவின் தத்துவார்த்த விளக்கத்தை அழகாக விளக்குவார் சுவாமி விவேகானந்தர் அத்தகைய அழிவில்லாத ஆன்மாவே சத்தியமாகும். இதை இப்பாடல் விளக்கும்.

தினந் திங்கள் வருடந்தோறும் செறியுகங் கற்பந்தோறும்
வனமான கோசமைந்தும் வருவதன் முன்னும்பின்னும்
கணமுள சமமாய் மெய்யாய்க் காண்கின்றவொரு படித்தா
யகைமாயிருக்குமான்மா வழிவில் சத்தியமாமன்றோ (95)

அவிகாரம் என்ற தலைப்பின் கீழ் பஞ்சகோசம் ஒவ்வொன்றையும் பற்றிய விளக்கத்தை நாகலிங்கய்யபா தந்துள்ளார். அவை விகாரம் எனும் நிலையிலும் ஆன்மா அவிகாரம் எனம் நிலையிலும் காணப்படுதலை இப்பாடலின் கருத்தாகக் கூறுகின்றார். அப்பாடலானது.

பிறப்பிறப்பாதியும் விகாரமுளதனகோசம் பேசிடும் பசிகடாகம்
பெலமுடன் கொடுக்கல் வாங்காதியாம் விகாரமது பிராணமய
கோசமாகுந்
துறப்பரிய காமாதி விகாரமுளமனோமயஞ் சுகதுக்கமாதியான
தொடர்விகாரங்களும் விஞ்ஞான கோசமஞ் தொடர்ஞான
வஞ்ஞானமுஞ்
சிறப்பான பிரியமுடன் மோதமாம் பிரமோநந் திகழ்வதானந்த
மயமாஞ்
செறிபஞ்ச கோசங்களல்லாததாயுமிவை சேர் விகாரவிகாரமு
மறப்பிரலாதறிகின்ற சாட்சியாமான்மாவு மற்றுமொரு
பொருள்களின்றி
மன்னலாலவிகார மெனவுமேயுபநிடத மலர்வாக வறைவதாமே.

என்பதாகும். அன்னத்தால் அதாவது உணவினால் ஆயது என்ற காரணத்தால் அதற்கு அன்னமயகோசம் என்று பெயர் இதற்குள்ளே இதைவிட நுட்பமாக உள்ளது பிராணமய கோசம். இதுவே சீவசக்தி. இதற்குள்ளேயுள்ளது மனோமய கோசம் இதற்குமுள்ளே உள்ளது விஞ்ஞானத்தால் அதாவது அறிவால் ஆயது என்ற காரணத்தால் விஞ்ஞானமய கோசம் எனப்படும். இதற்கமுள்ளே உள்ளது ஆனந்தமயகோசம் எனப்படும். இத்தனை கோசமும் மூடப்பட்டு உள்ளேயிருப்பது ஆத்மாவாகும்.

ஏது சொரூபங்காரியத்தில் காணலாகும் அத்வைத தத்துவங்கள்

ஏது என்றால் காரணம், மூலம், குற்றம் எனவும் சொரூபம் என்றால் குணங்குறியின்றியொன்றாய் யாவுங் கடந்தபதி எனவும் மதுரைத் தமிழ்ப் பெயரகராதி பொருள் கூறுகின்றது. இதன்மூலம், பதியின் மூலத்தை அறிதல் என்று இந்நூலுக்குப் பொருள் கொள்ளலாம்.

பாடுபொருள்

தூய்மையாக உள்ள நிலையில் ஆத்ம விசாரனை செய்து, பரம்பொருளுடன் இரண்டறக் கலப்பதுதான் மோட்சம். அதை உபநிடதங்கள் கூறும் ஞானவழியில் தான் பெறமுடியும் என்கிறார் ஆதிசங்கரர்.

ஒருவன் பிரம்மத்தை அறியும் அறிவையும் தன்னுடைய மனத்தையும் ஒன்றபடுத்தி ஒரு தன்மையுடையனவாகத் தியானிக்க அவன் செய்யும் வழிபாட்டு முறையால்தான்

முடியும். இம்மார்க்கம் நான்குவகை சாதனைக்காக (மார்க்கம்) கொண்டதாகும். நான்று சாதனைகளுக்குப் பிறகு, வேதாந்த விசாரணையில் ஈடுபட வேண்டும். கேட்பது (சிரவணம்) மனதில் பதிய வைப்பது (மனனம்) நிதித்தியாசனம் என்பவை இந்த மார்க்கத்தின் பகுதிகள் இவற்றில் நிதித்தியாசனம் என்பது சிந்தித்து தெளிந்ததை இடையறாமல் தியானிப்தாகம். இவ்வாறுள்ள வழிபாட்டுமுறையினால் மோட்சம் உறுதியாகும்.

அனுபவத்துடன் கூடி இருக்கின்ற சிவணத்திலேயே ஞானம் வரும். அது திடமாக இருக்கின்ற நிலையில் மனனம் செய்ய வேண்டும். வேதபாடங்களைக் குருமுகமாகச் சிரவணம் பண்ணி அதை அனுபவத்திற்குக் கொண்டுவரம் பிரயாண மனனத்தைப் பண்ணாதவனுக்கு அஞ்ஞானிகளைப் போல் பந்தம் விடாது. எனவே, சிரவணமும் அதை மனனம் செய்வதும் ஞானத்தை அடைவதற்குண்டான வழிகளாகும் இதனை,

நிறலிற்பலனே தென்றா னிகழ்பிரமானந்தந் தான்
செற்றமின் ஞானவேது சிரவணமனனத் தியானம்
பற்றிய சொருபஞ்சுபானு பவத்தினாற்றேகமாதி
யற்றமாம் பிரபஞ்சங்கள் நித்திய மென்றுந் தானே.
அவமதறவே செய்யு மழகாஞ் சவண மனனம்
பவமாஞ் சொருபமகண்ட பரிபூரண சத்சித்தா

என்ற பாடல்கள் மூலம் தெளியலாம். ஸ்ரீ அத்வைதாந்த சுவாமிகள் ஞஸனத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது சிரவண, மனன, நிதித்தியாசன, சமாதி நாலுஞ்சேர்ந்து ஞான மெனப்படும் என்பர். சிரவணம் என்பது வேதாந்த வாக்கியப் பொருளை ஒரு குருவின் மூலமாக அறிந்து கொள்வதாகும். குரு என்ற சொல்லுக்கோ இருளைப் போக்குபவர் என்பதுதான்

பொருள். அவரிடம் கேட்பதை ஒரு காதால் கேட்டு மறு காதால் விட்டுவிடக்கூடாது. கேட்பவற்றை இடைவிடாது சிந்தித்து ஆராய்தல் வேண்டும். அதாவது புத்திப் பூர்வமாகக் கேட்டவற்றில் சிறந்தவற்றை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். உறுதிப் படுத்தியதில் உள்ளத்தையும் அறிவையும் ஒன்றுபடுத்தும் நிலையை அறிந்து கொள்ளும் அனுபவமே ஆத்ம ஞானமாகும் என்று ஆதிசங்கரா அழகாக ஆத்மஞானம் குறித்துக் கூறுகின்றார்.

வேதத்தின் பொருளைக் கேட்டு, மனனம் செய்து ஆத்மஞானம் பெற நான்கு சாதனங்களுண்டு என்பதை நாகலிங்கய்யா தம் பாடலில், நாளுஞ் சவணவேது நான்கு சாதனைமுண்டாய் என்கின்றார். மேலும் அதை விளக்கும் நிலையில் பல பாடல்கள் எழுதியுள்ளார் அவை அனைத்திலும் சிரவணம், மனனம், குறித்தும் அதன் அநுபவத்தால் பெறும் ஆத்மஞானம் குறித்தம் கூறியுள்ளார். அஞ்ஞானம் திரும்பாது நம்மைவிட்டு ஓடும்படியாக இருக்கும் வரைக்கும் சாத்திரக் கேள்விதனை (சவணம்) கேட்டு வரவேண்டும் என்கின்றார் இதனை,

அவதி மாறஞ் ஞானத்திரும்பா வரைக்குஞ் சவணஞ் செய்தல்
செய்யிற்பலமே தென்றற் றிடவப ரோட்சஞான
முய்யுமனைத் தேது வொப்பாவவதி வரைக்கு
மையில் சவணம் பண்ணி மருவிய வஸ்து விவேகம்
பொய்யில் சொருபஞ்ஆகம புத்தியே காக்கிரத்தே
என்ற பாடல்கள் விளக்குகின்றன.

சாது சங்கம் சிறந்தது

சாதுசங்கம் மனிதனுக்கு ஞானநிலையினைத் தோற்றுவிக்கும் சிறந்தஇடமாக இருக்கமுடியும் என்பது அத்வைதிகள் கூறும் பொதுக் கருத்தாகும் இதை நாகலிங்கபய்யா தம் பாடலில்,

ஆகியவவதிகேளா யறவுமே சுழுத்தி போலத்
தேகமும் விடயமியாவுந் திரமாக மறந்திருந்த
லேகமா மோட்சாபேட்சைக் கேதுதான் சாதுசங்கந்
தாகமாஞ் சொரூபந்தானுந் தலைரோமந் தனினெருப்பே

என்கின்றார். குருபரம்பரை மூலமாகவே வேதாந்த பாடல்கள் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும் என்பது மரபாக இருந்தது. இது இந்து சமயத்தவரால் நீண்ட காலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த முறையாகும். குருவே மூன்று காலத்திற்கும் தாயென மதிக்கப்பட்டார். குருவின் அருளாலே தான் ஞானமென்னும் மோட்சம் தனக்குள் கிட்டும். இதை நாகலிங்கய்யா,

முற்றுமே ஆசை நீங்கி மோட்சவாசையதே தோன்றல்
குற்றமில் காரியஞ்சற் குருவையே தேடிக் கிட்டல்

என்று கூறுகின்றார். இவ்விதமாக, ஏது சொரூபங்காரிய நூலின் பாடுபொருள்கள் அமைந்திருக்கின்றன.

இலக்கியத் திறன்

அத்வைத தத்துவங்களைத் தமிழுக்கு அறிமுகப் படுத்தித் தத்துவத்தை மக்களிடம் பரவலாக்க வேண்டும். என்பது நாகலிங்கய்யாவின் இலக்கியக் கொள்கையாகும். இலக்கியக் கொள்கையை இரண்டு நிலைகளில் காணலாம். ஒன்று இலக்கியத்தின் பாடுபொருள் இரண்டு வெளிப்படுத்தும் வெளிப்பாட்டுக்கொள்கை. வெளிப்பாட்டு நிலையில் என்னென்ன உக்திகளைக் கொண்டு படைக்கப் படுகின்றது என்பது இலக்கியத்திறனாகும். இக்கொள்கைகளும், திறனாய்வும் நாகலிங்கய்யாவின் படைப்புக்களில் காண்பது இப்பகுதியின் நோக்கமாகும்.

இலக்கியக் கொள்கையானது, ஆக்கப்பூர்வமான இலக்கிய வளர்ச்சியில் பேரிடம் பெறுகின்றது. ஆசிரியனின் அக உணர்ச்சிகளையும் அவன் மனதில் இடம்பெறும் பாட்டுக் கொள்கை என்பர். நாகலிங்கய்பா இவ்விதமான அகவெளிப்பாட்டுக் கொள்கை அடிப்படையில் தம் நூல்களைப் படைத்துள்ளார்.

எப்படிப் படைப்பு ஆகியது என்று கோட்பாடு வகுத்துத் தருவது இலக்கியக் கொள்கை என்கிறார். ச.வே. சுப்பிரமணியன். இலக்கியக் கொள்கையைப் பற்றி எழுதிய ரெனிவல்லாக் மற்றும் ஆஸ்டின்வாரன் பின்வருமாறு இலக்கியக் கொள்கையை விளக்கியுள்ளனர். ஓர் இலக்கியப் படைப்பு ஒரு நூலாசிரியன், ஒரு குறிப்பிட்ட கால இலக்கியம் அல்லது தேசிய இலக்கியத்துக்குரிய தனித்துவப்பண்பை முயன்று வருகின்றன. இவ்வாறு இலக்கியத்துக்குரிய தனிப்பண்பை ஓர் இலக்கியக் கொள்கையின் அடிப்படையிலேயே விளக்க முடியும். இன்றைய

இலக்கியப்புலமைக்கு இலக்கியக்கொள்கை மிகத்தேவை. பலமுறைகளின் இணைவே இலக்கியக் கொள்கை என்று இலக்கியக் கொள்கையின் முக்கியத்துமுவம் கூறப்படுகின்றது.

ஆசார்யர் சங்கரர், வேதநூல்களில் காணலாகும். த்ததுவங்களைத் தொகுத்து, அத்வைதம் என்று சொல்லக் கூடிய புதிய வடிவமாகத் தந்தார். அதைத் தத்துவராயர் போன்றோர் தமிழில் பாடினர். இவர் இத்தத்துவங்களின் மேல் கொண்டிருந்தபற்று நூல்களாக ஆகின. படைப்பாளன் குறித்து ரெனிவெலாக் கூறும்பொழுது, கவிஞன் ஒரு குறிப்பிட்ட தத்துவத்தின்பால் கொண்டிருந்த பற்றை கவிதையில் வரும் வெளிப்படையான கூற்றுக்களோ மறை குறிப்புக்களோ காட்டுகின்றன. அல்லது ஏதாவது ஒரு காலத்தில் புகழ்பெற்றிருந்த தத்துவத்தோடு அவனுக்கு நேரடியான தொடர்பு இருந்தது என்கின்றார். நாகலிங்கய்யா அத்வைதத்தின் மேல் கொண்டிருந்த பற்று அவரது நூல்களில் வெளிப்படையாகவே காணப்படுகின்றது. இது அவருக்கு நேரடியான தொடர்பிருந்தால் ஏற்பட்ட அனுபவமாகும்.

முந்துநூற்புலமை

தன் குரு முத்தராமலிங்கதேசிகர் எழுதிய சுவாநுபவத் திருவாக்கு என்னும் நூலில் காணும் பகுதியை விரித்து இரண்டு நூல்களாக்கியுள்ளார். அத்வைத முன்னோடிகள் கூறும் உவமைகள் பலவற்றை அப்படியே இவரும் கையாண்டுள்ளார். ஞானஅந்தாதி நூலில் எண்பத்தியொரு 81 பாடல்களின் முடிவிலும் என்றார், சொன்னார், சொன்னான், ஐயன், விளம்பினரே, அருளினரே, அறைந்தான், வகுத்தான், உரைத்தான், அருளிச் செய்தாரே என உரைக்கின்றார். இவை

இவரது முந்துநூல் புலமையைக் காட்டுகின்றன. என்றார் என்று கூறுவதே அதிகளவில் காணப்படுகிறது. சான்றாக

ஆகின்ற ஷபசாந்தமதனிற் காண்பானற்பமதாங்
காட்சிகளுமில்லை யென்றார்

இப்பாடல் என்றார் என்று முன்னோர் கூறுயதைக் கூறுமுகமாக அமைக்கப்பட்டுள்ளது.

உக்திமுறை

ஞான அந்தாதி நூலில் காணப்படும் எண்பத்தியொரு பாடல்களையும் குருவின் கருத்தைக் கூறும் நிலையில் பாடியுள்ளார். மீதியுள்ள பாடல்கள் குருவைப் போற்றும் பாடல்களாகவுள்ளன.

பஞ்சகோசம் எனும் நூலில் கூறப்படும் கருதுக்கள் இரண்டு நிலைகளில் காணப்படுகின்றன. அவை 1 . நேரடியாகத்தன் கருத்தைச் சொல்லுதல் 2. மைந்தனுக்குக் கூறுவதாகச் சொல்லுதல்.

இந்நூலில் மைந்தனுக்குச் சொல்லுவதாக அமைந்த பாடல்கள் மிகுதியாகவுள்ளன. மைந்தனை விளித்து முன்னிலையாக வைத்துக் கூறுவது போல் செய்யுள்கள் அமைக்கப் பட்டுள்ளன. இதனை,

"யொரு நாளுமறியாத விஞ்ஞானமயகோச மோதினா மன்று
மைந்தா"

னூனமின் மகனே கேளாயான்றிய சுழுத்தியற்ற
வசமற நாமம்றென்று வரையறுத்தறிவாய் மைந்தா

என்ற பாடல்கள் மூலம் அறியலாம்.

ஆத்மநாமம் நூலிலும் இரண்டு உக்திமுறைகளுள்ளன. அவை 1. பிறர் கருத்தைச் சொல்லுதல் 2. நேரடியாகத் தன்

கருத்தைச் சொல்லுதல் என்பதாகும். தலைப்பாகப் போடப் பட்டிருக்கும் நாமத்தை ஒவ்வொரு செய்யுளிலும் விளக்கி, இறுதியில் அந்நாமத்தின் பெயரையும் சுட்டுவர். இது படிப்போர்க்கு இன்பம் பயப்பதாக இருக்கின்றது.

ஏதுசொருபங்காரியம் நூலில் காணப்படும் உக்தி ஆசிரியர் நேரடியாகவே தன் கருத்துக்களை விளக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. தத்துவங்களையும் மோட்சம் பெறச் செல்லும் மார்க்கம் குறித்தும் அழகுபட நேரிடையாகக் கூறுகின்றார்.

மரபுவழிப்பட்ட சொற்கள்

இலக்கியங்கள் மரபு வழியாக வந்த சொற்களைக் கொண்டே எழுதப்படுகின்றன. மரபு நெறியிலிருந்து சிறிதளவும் திரிதல் கூடாது. மரபு நிலை திரியின் பிரிது பிரிதாகும் என்பார். தொல்காப்பியர். மரபு நிலை திரிந்தால் உலகத்துச் சொற்கள் தன் உண்மைப் பொருள் இழந்து மாறி நிற்கும்.

நாகலிங்கய்யா, அத்வைத முன்னோடிகள் கையாண்ட மரபுவழிப்பட்ட சொற்களை தமது நூலிலும் பயன்படுத்துகின்றார். வடமொழியில் எழுதப்பட்ட அத்வைதக் கருத்துக்களில் சிலவார்த்தைகள் தமிழில் அப்படியே மொழிபெயர்க்கப்பட்டன. அதை அந்த மரபுப்படியே பயன்படுத்துகின்றார். இதனை,

“நனவு கனவு சுழுத்தி தனினாளும்”
“ஞான ஆன்மா வறிந்து”
“பஞ்ச கோசம் (நூலின் தலைப்பு)”
“முன்பின்னு அதிட்டானமாகத்”
“பழுதைப் பாம்பது முன்பின்”
என்றுமே பிரபஞ்சந்
“வரைக்கும் சவணஞ் செய்தல்”

என்ற வரிகள் மூலம் அறிய முடிகின்றது.

வடமொழிச்சொற்களைக் கையாளுதல்

வடமொழிச் சொற்களைத் தேவையான இடங்களில் மட்டுமே நாகலிங்கய்யா பயன்படுத்தி உள்ளார். கோவிலூர் மடத்தில் பாடம் சொல்லிக் கொடுத்த முறையும், முந்து நூல்களில் ஆழ்நத புலமையும் இவ்வடமொழிச் சொற்களைக் கையாள்வதற்கு வழிவகுத்துள்ளன. வடமொழிச் சொற்களை முறையாகத் தமிழில் எழுதி உள்ளார். கிரந்த எழுத்துக்களை ஏற்று எழுதும் கொள்கை உடையவராக இருந்திருக்கின்றார். இதனை,

மந்தமிலாவனந்த வஸ்துத்தானே
நின்ற வஸ்துவதாய் விபுவாகி

என்ற பாடல்கள் தெரிவிக்கின்றன. நாமம் சனனம், ரூபம், மோட்சம், பிரபஞ்சம், சகம், விட்சேபம், கிருபை மித்தை போன்ற வடமொழிச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார்.

தன்கால வழக்குச் சொற்களைக் கையாளுதல்

செய்யுள்களின் அழகுக்கம், தளை போன்றவை சிதையும் இடங்களிலும் தன்கால வழக்குச் சொற்களை எடுத்தாண்டிருக்கின்றார். நாகலிங்கய்யா

லொரு சணிகமுறுமாகில் ஒருக்காலும் பின்

எனும் பாடலில் ஒருக்காலும் என்ற சொல் ஒருமுறையேனும், எனும் சொல்லிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சித்திரத்தைத் சித்ரம் (ஞான அந்தாதி - 66) முட்டாள் என்பதை முடாள் (ஞான அந்தாதி) -34) என்றும் மாத்திரம் என்பதை மாத்ரம் (ஞான அந்தாதி - 37) என்றும் கூறுவர்.

நாகலிங்கய்யா தம் நூல்களை இலக்கியக் கொள்கையினைப் பயன்படுத்தி அழகுற எழுதியுள்ளார்.

இவ்விலக்கியக் கொள்ளை. அவரின் வெளிப்பாட்டு நிலையினை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. தமது இலக்கியத்தைச் சிறந்த இலக்கியமாகவும் நிலைத்த இலக்கியமாகவும் ஆக்கிப் படிப்பவர்களின் நெஞ்சத்தில் இடம் பெறுகின்றார்.

இலக்கியத் திறன்

வாழ்க்கையில் இலக்காக அமைவது இலக்கியம். வாழ்வின் இலக்கு எது என உணர்த்துவது வாழ்வின் இயல்பினை இயம்புவது இயல்பான வாழ்க்கையையும் சிறப்புடையதாக இலங்கச் செய்வது. ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்வினையும் இலக்கு ஆக்குவது இலக்கியம் (18) என்பார் ச.வே. சுப்பிரமணியம். இலக்கியம் வாசகனை எந்தவிதத்திலாவது பண்படுத்தப்பட வேண்டும். இது இலக்கியத்தின் பயனாகும்.

ஆசிரியர் தம் உள்ளத்தில் எழுந்த அனுபவங்களை காலத்தில் பெறப்பட்ட உணர்வுகளோடு இலக்கியம் படைக்க வேண்டும். அதை வாசிக்கும் வாசகனும் அவ்வுணர்வுகளைப் பெற வேண்டும் இதை வாழ்க்கையின் அனுபவமாய்ப் பெற்ற உணர்ச்சி திரும்ப பாட்டாக வடிக்க வல்லாரே கற்பனையில் பெற்று பின்னார் பாட்டில் கொணர்ந்மு தருதலும் வல்லவராவார். உணர்ச்சியைப் பெற்றுப் பின்னர் பாட்டில் கொணர்ந்து தருகலிலும் வல்லவராவர் (19) என்பார். முவ. அதுபோல் நாகலிங்கய்யா, தன் வாழ்ககையில் பெற்ற அனுபவங்களை உணர்ச்சி பொங்கப் பாடல்களாகப் புனைந்துள்ளார். இயைபாகவும், படைப்பு நிலையிலும் கற்பனையைக் கலந்து பாடல்கள் இயற்றியுள்ளார்.

படைப்புக் கற்பனை

வெவ்வேறு இடத்தில் கண்ட, வேறுபட்ட இரண்டு காட்சிகளை ஒன்றாக இணைத்து அமைப்பது படைப்புக் கற்பனையாகும். இக்கற்பனையை நாகலிங்கய்யா பல

பாடல்களில் புனைந்துபாடியுள்ளார். மனிதர்கள் சம்சாரம் (மனைவி) என்ற சோகத்தின் வடிவில் எப்போதும் மயக்கம் கொண்டுள்ளனர். பெண் மோகம் இல்லாது இவர்களால் வாழ முடியாது. இதைக்கண்ட நாகலிங்கய்யா, தாம் என்றோ. எங்கோ கண்ட ஒரு காட்சியைக் கற்பனையாக இணைத்துப் பாடுகின்றார். பன்றியானது சுகமென்று நினைத்துசாக்கடையில் கிடந்து உழலும். அதுபோல மனிதர்கள் சம்சாரச் சாக்கடையில் உழல்கின்றனர். என்கின்றார். இங்கு ஆசிரியரின் படைப்புப் கற்பனை வெளிப்டுகின்றது. அப்பாடலில் மூடரை.

"என்றுமே சோகமதாஞ் சமுசாரத்தி னெண்ணரிய துன்பமெலா
மோகத்தாலே
நன்றிதெனப் பன்றியுமே யமேத்தியத்தில் நமிப்பது போல்
ரமிக்கின்ற மூடர்." (21)

என்கின்றார். நாட்டுப்புறங்களில் மருத்துவர் மகன் சீக்காளி "வாத்தியார் மகன் மக்கு" என்ற பழமொழி இன்றும் வழக்கத்தில் இருக்கின்றது. இப்பழமொழிக் கருத்து ஒரு மூடநம்பிக்கையே., இதை ஒரு பாடலில்,

"சற்றுமில்லாவிடில் உபாத்தியாரிருக்கினுந் தனையர்கள்
படித்தலிலை" (22)

என்பார். இவ்வுவமை எதைப் போலென்றால் தேரைச் செலுத்துகின்ற சாரதியைத் தேரின் எஜமானன் ஏவும் சுதந்திரம் இல்லாததைப் போன்றது ஆகும். இரண்டு இடங்களில் கண்ட இரண்டு காட்சிகள் இந்த ஒரே பாடலில் தம் கருத்தைக் கூறவதற்கு இடமாக வந்தது. இது படைப்புக் கற்பனையாகும்.

நாகலிங்கய்யா, கடல் அலை வருவதையும் அதில் குளிக்கும் முறையையும் அனுபவமாய் பெற்றிருக்கின்றார். இந்த நிகழ்ச்சியானது ஞான அந்நதாதி நூலில் படைப்புக் கற்பனையாகக் கூறப்பட்டுள்ளது.

‘ஆரான சலதியின்முன் னலைநீங்கிப்பின் னலைவருமுன்
சலதியதேயமர்தல் போல ’(23)

என்ற பாடல் மூலம் அறியலாம். அலை வந்து சென்ற பின்பு, மற்றொரு அலையானது கரையை நோக்கி வரும் அப்போது தண்ணீருக்குள் அமர்ந்து (குனிந்து) கொண்டால் அலை நம்மை ஒன்றும் செய்யாது. எதிர்த்து நிற்கும் நிலையில் அலையின் வேகம் நம்மை இழுத்துச் சென்றுவிடும். இந்தக் காட்சியை அத்வைதத் தத்துவத்தை ஒப்பிட்டு இங்குக் கற்பனையாகப் படைத்துக் காட்டி உள்ளார்.

உலகில், சீவன் பல உருவங்களைப் பெற்றிருக்கின்றன. அவை எல்லாம் ஒரே ஒப்பில்லாத பரம்பொருளாகும்., இந்த அத்வைதக் கருத்தை விளக்கும் பொருட்டு ஆசிரியர் தம் வாழ்வில் கண்ட காட்சிகளைக் கற்பனையாகப் படைக்கின்றார். அக்காட்சி கூறவிரும்பிய கருத்தை எளியதாகப் புரியவைத்திருக்கிறது. இதனை,

நாட்டமான கடகலச நாநாவாயு மண்ணொன்றாம்
வேட்டு கடகமகுடாதி வெவ்வேறாயும் பொன்னொன்றா
மீட்டிவாலாவாள் பலவா யிருந்து மயமொன்றாமவை போற்
றேட்டுபி - பரசீவ சொகங்களாயினும் மேகம் (24)

என்ற பாடல் மூலம் அறியலாம். மண். ஒன்று. ஆனால் கலசம் பல. பொன் ஒன்று. ஆனால் மகுடம் பல. இரும்பு ஒன்று ஆனால் கருவிகள் பல. இதைப் போல் பிரம்மம் ஒன்று உருவங்கள் பல என்கின்றார். இங்கு படைப்புக்கற்பனை பயன்படுத்தப் பட்டுள்ளது.

“பரமான ரதமிருக்கும் பரியதற்கனியம் போலும்
பெரிதான வுடலை யாட்டும் பிராணனாமான்மா வேறாய் ” (25)

என்ற பாடலில், என்றோ ஒரு நாள் கண்ட இரதத்தின் அமைப்பானது, உடலின் அமைப்புக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. இரதத்தில் குதிரையானது அன்னிப்பட்டே காணப்படும். அதே தன்மையினைப் போன்றதே உடலும். உடலிலிருந்து ஆன்மா என்றும் அன்னிப்பட்டே காணப்படும். இந்த இரண்டு பண்புகளையும் இணைத்து புதிய வடிவத்தைக் காட்டியிருப்பது கற்பனையின் சிறப்பாகும். இதே போல்,

"சாரதிக்கு எசமானன் வேறதாய்ச் சார்ந்திருத்தல் போல்"

"அழகான வதைகொடுப்போன் அன்னியமாதல் போல்"

என்ற பாடல்களும் படைப்புக்கற்பனையைக் கொண்டிருக்கின்றன. தன்னுடைய அனுபவத்தில் கண்ட பண்புகளைக் கவிஞன் ஒருவன், எத்தகைய கட்டுப்பாடும் இல்லாமல் தானே தேர்ந்தெடுத்து அவற்றை ஒன்றாக இணைத்துப் புதியதொரு முழு நிறைவான வடிவத்தைப் படைத்துக் காட்டுந்திறனே படைப்புக் கற்பனையாகும். என்பர் க.த. திருநாவுக்கரசு, நாகலிங்கய்யாவும் தன் அனுபவத்தைக் கட்டுப்பாடு இல்லாமல் அத்வைதத் தத்துவத்தோடு இணைத்துப்பாடிச் சிறப்பித்துள்ளார்.

இயைபுக் கற்பனை

இருவேறு காட்சிகளை உணர்ச்சி ஒற்றுமையால் இணைந்து அமைக்கப்படும் கற்பனை இயைபுக் கற்பனை எனப்படும் (29) நீருக்குள் மூழ்கியவன் அதற்குள் மூழ்கிப் போய்விடுவான். நீர் எவ்விதமான பற்றும் இல்லாமல் இச்செயலைச் செய்யும். அதே போல் வானத்தில் மேகங்கள் வரும், செல்லும் ஆனால் வானம் பற்றற்று இருக்கும். இவ்விரண்டு காட்சிகளும் இயற்கையானது. பற்றற்ற நிலை யாகிய உணர்ச்சியை விளக்கவல்லது. ஆசிரியர்

இவ்விரண்டு காட்சிகளையும் இணைத்துக் கருத்தைக் கூறுமுகமாக உணர்ச்சி ததும்பக் கூறுகின்றார். இதனை,

சலமது முழ்கியவன்பேரிற் சலம்பற்றுதல் போற் பற்றின்றி
நிலவிய சகமதினுள் வெளியு நிறைவாகியதனின் மூழ்கியதாஞ்
சொலவாந்நூல சரீரமுதற் சுத்தம் வரைப் பிரபஞ்சத்தி
னலமாம்வான் போற்பற்றற்று நாளுமிருந்தனி ரஞ்சனமே

என்கின்றார். இப்பிரபஞ்சமானது, தூலசரீரம் முதலாகச் சுத்தம் வரையில் அடக்கமுடையதாக இருக்கின்றது. பிரபஞ்சத்தின் வடிவங்களே அனைத்தும். பிரபஞ்சம் சீவன்களைப் பிரித்துப் பார்ப்பதில்லை. அதேபோல் சலமும் அதனுள் மூழ்கியவன் மேல் பற்றுக் கொள்வதில்லை. வானமும் இத்தன்மையினைக் கொண்டதாகும். இப்பாடலில் பற்றற்ற உணர்வானது இரண்டு காட்சிகள் மூலம் வளர்க்கப் படுகின்றது.

இல்லன படைத்தல்

இல்லன படைத்தல் என்பது, ஆசிரியர் ஒரு கருத்தைக் கூறவிழையும் போது உலகில் இல்லாததைப் படைத்துக் காட்டி அதன் மூலம் தன் கருத்தைக் கூறுவதாகும். இதனை மு. வரதராசனார் எக்காலத்திலும், எவ்விடத்திலும் இல்லாததைப் படைத்துக் கொள்ளும் கற்பனைத் திறனும் உண்டு. அது முற்றிலும் இல்லாத ஒன்றைப் படைக்கக் கற்பனையாகத் தோன்றலாம். ஆனால் உண்மை அது அன்று. அதுவும் ஓரளவு உள்ளதன் அடிப்படையில் இல்லது படைத்தல் கற்பனையாகும். உளள்தை நேரே அடிப்படையாகக் கொள்ளாமல் அதைத்திரித்து அமைத்துக் கொண்ட கற்பனையாகும். (31) என்பர்.

நாகலிங்கய்யா, பல பாடங்களில் இல்லன படைத்தல் கற்பனையைப் பாடியுள்ளார். வேத நூல்களில் காணலாகும் அரிய உவமைகளைப் பயின்றதன் விளைவாக, இவர் நூலிலும் இவை இடம் பெற்றிருக்கலாம். ஞாளி என்ற மிருகமானது பல காலமாகக் கூறிவரக்கூடியப் பொய்யான உயிரினமாகும். இம்மிருகத்தின் உருவத்தைச் சில திருக்கோயில்களில் இன்றும் காணமுடிகின்றது. இவை கற்பனையால் வடிக்கப்பட்ட உருவமாகும். இம்மிருகம் குறித்தும், நரகம் குறித்தும் கூறுகின்றார். இதை,

"மிக்கதோர் சொருபமந்த விடயங்கண் ஞாளி தின்று
கக்கியவசனம் போலுங் காலாக்கினி நரகம் போலுஞ் " (32)

என்ற பாடல் சுட்டும். இக்கற்பனை இல்லன படைத்தலாகக் காணப்படுகின்றது. தேவர்கள் பயனல்படுத்தும் பொருள்களில் ஒன்று தேவாமிர்தம் ஆகும். இது தன்னளவில் இன்பமயமானதாகவும், அருந்துவர்களுக்கு இன்ப மயமானதாகவும் இருக்கின்றது. இதனை,

"தானின்பவடிவமாகித் தனையடைந்தவர்க்குமின்ப
மானதைக் கொடுக்குந்தேவா வமிர்தத்தைப்போல ஆன்மா" (33)

என்ற பாடலில் விளக்குகின்றார். ஆன்மா தன்னை அடையும் பஞ்சகோசங்களுக்கு இன்பம் தரும். அதுபோல தேவாமிர்தம் இருக்கும் என்று இல்லன படைத்தல் கற்பனையைக் கூறியுள்ளார்.

கருத்து விளக்கக் கற்பனை

இயற்கைக் காட்சிகளைக் கண்ணுற்ற கவிஞன் தான் கண்டவற்றை அப்படியே கூறாது அக்காட்சிகளால் தன் உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்ச்சிகளை மட்டிலும் சித்தரித்ததால் அதனைக் கருத்துவிளக்கக் கற்பனை என்று

கூறலாம். (34) என்கிறார். ந. சுப்பு ரெட்டியார் . இக்கருத்து விளக்கக் கற்பனை நாகலிங்கய்யா பாடல்களில் இடம் பெற்றுள்ளது.

வானத்தின் தன்மையினைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். நாகலிங்கய்யாவும் வானத்தைப் பார்க்கின்றார். அது இவ்வுலகில் பற்றற்று நிற்கும் ஒன்றாக இருக்கின்றது என்கின்றார். வானம் நிலையானது தான் அக்காட்சி தம் உள்ளத்தில் ஏற்படுத்திய கிளர்ச்சியை,

வான் போல் பற்றற்று (35)
வானமது போற் தொடர்பற்று (36)
வானமிடை வெளியற்று இருத்தல் போல (37)
வானஞ் சாதுர்ப்பூதமதின் மருவாமல் தான் இருப்பது போல் (38)
வருகின்ற ராகத்து வேடநீக்கின் வானம் போற் பேதமிலாத
பேதமாக (39)

என்ற பாடல்கள் மூலம் விளக்குகின்றார். வானத்தில் கந்தருவநகரம் என்பது கானல் நீருக்கு ஒப்புடையுடையதாகும். நன்கு வெய்யில் அடிக்கும் சமயத்தில் தூரத்தில் நீர் இருப்பது, போன்று தெரியும். ஆனால் அதனருகே சென்றால் நீர் இருக்காது. இதைக் கானல் நீர் என்கின்றனர். இத்தன்மையினையுடையது கந்தருவநகரம். நாகலிங்கய்யா அதை உடலுக்கு உவமையாகக் கூறுகின்றார். இதனை

ஆனதனில் விளங்குகின்ற சரீரமாதி யறிவதனில்
விவர்த்தமதாய்த் தோன்றலாலே
வானதனிற் கந்தருவ நகரம் போலும் வளர்கானனீர் போலு
மருவப்பட்ட (40)

என்ற பாடலில் சுட்டிக் கூறுகின்றார். நாகலிங்கய்யாவின் கருத்து விளக்கக் கற்பனைகள் தத்துவங்களை எளிமையாகப் புரிந்து கொள்வதற்குப் பயன்படுகின்றன.

உவமை நலம்

இயற்கையாக மனிதனிடம் அமைந்த இயல்புகளில் ஒன்று பார்க்கும் பொருள்களை ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுப் பார்ப்பதும் உவமையாகக் கூறுவதும் ஆகும். ஒரு நூலைப் படைக்கும் ஆசிரியன் தான், சொல்ல நினைக்கும் கருத்தை மரபுவழிப்பட்ட பல உத்திகளின் மூலம் வெளிப்படுத்துவான். அவவுத்திகளில் உவமையாகக் கூறுவதும் ஒன்றாகும். ஆசிரியன் தான் சொல்ல வந்ததைப் பிறர் புரிந்து கொள்ளு மாறும் அழகாகவும் எளிமையாகவும் சொல்ல வேண்டும், அதற்கு மிகச் சிறந்த கருவி உவமை என்பதில் சிறிதும் ஐயமில்லை. உவமை என்பது கவிஞனின் அனுபவப் பொருளாகும். பொருள் என்பது அவன் காணும் புதிய பொருளாகும். (41) என்கின்றார். இரா. சீனிவாசன் "ஏதாவது ஒரு காரணத்தால் ஒரு பொருளோடு ஒப்புமை உடைய இன்னொன்றினை ஒப்புமை நோக்கில் எடுத்தும்கூறும்பொழுது அது உவமையாகிறது (42) என்பர் பொற்கே.

நாகலிங்கய்யா, அத்வைதக் கருத்துக்களை எளிய தமிழில் எழுதவேண்டும் என்று நினைத்து உவமைகளுடன் அதை எழுதி உள்ளார். உவமையுடன் கூறினால் தான் அது மக்களைச் சென்றடையும் என்று எண்ணி இருக்க வேண்டும். மற்ற அத்வைத நூல்களில் காணாத அளவிற்கு, இவர் உவமைகளைக் கூறிக் கருத்துக்களை விளக்குகின்றார்.

உவமை என்பது பொருளின்தன்மையைப் புலப்படுத்துவது என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

வினை,பயன், மெய், உரு என்ற நான்கே
வகை பெற வந்த உவமைத் தோற்றம் (43)

எனத் தொல்காப்பியர் உவமையின் வகைகளைச் சுட்டுவார்.

பண்பம் தொழிலும் பயனுமென்றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை (44)

என உவமை குறித்துத் தண்டியலங்காரம் கூறும்.

பண்பு உவமை

பண்பு காரணமாக ஒன்றாகிப் பொருளோடு பொருள் இயைய வைத்து ஒப்புமை புலப்படப் பாடுவது பண்பு உவமையாகும். நாகலிங்கய்யா பண்பு உவமையைப் பயன்படுத்திப் பல பாடல்கள் எழுதியுள்ளார். கழனிப்பகுதியில் (கோவிலூரில்) அடியார்கள் சூழ, முத்துராமலிங்கதேசிகர் வீற்றிருக்கின்றார், அவரோடு, அடியார்கள் பலரும் உள்ளனர். இக்காட்சி நட்சத்திரங்களோடு இருக்கும் சந்திரனை ஒப்பதாக இருக்கின்றது என்று கூறுகின்றார்.

குன்றாதிங் குண்டெனவே யுடுக்கள் சூழ்ந்த
குறைவிலாச் சந்திரனுக்கு கொப்பதாக
நன்னுறவே கழனியின் கண்ணடியரோடு நாயேனையாட்
கொண்ட நாதன் சொன்னான் (45)

என்பது பாடல் ஆன்மாவானது பஞ்சகோசம், அவஸ்தை போன்றவற்றிலிருந்து நீங்கிப் பிரகாசமாக இருக்க வேண்டும். என்ற தத்துவத்தைச் சூரியனை உவமையாகக் கூறி விளக்குகின்றார்.

"தானுமே பிரகாசமதாகியுஞ் சடமதாங் கடமாதி விளக்கிடும்
பானுபோற் பிரகாசமதாகியே பங்கமின்றியிருந்தைந்து
கோசமும்" (46)

தொழில் உவமை

தொழில் காரணமாகப் பொருளோடு பொருள் இளைய வைத்து ஒப்புமை புலப்படப் பாடுவது தொழில் உவமையாகும். அடர்ந்த காட்டில் சிறிய கனலை வைத்தால் போதும் அக்காடு முழுவதும் அழிந்துவிடும். காடுமட்டுமல்ல, வைத்தகனலும் அதில் காணாமல் போய்விடும். அதை

"காட்டமதிற் செனித்த கனல் காட்டமதைச் சுட்டுக்
காட்டமுடன் அக்கனலும் அழிவதுவே போல " (47)

என்ற பாடலில் குறிப்பிடும் அத்வைதத்துவத்தை விளக்குகின்றார். இங்கு தொழில் இரண்டு பொருள்களுக்கும் இடையே ஒப்புமையாக வந்தது. அத்வைதத் தத்துவங்களைச் சொல்லும் நிலையில் தொழில் உவமையினை அதிகளவில் கூறுகின்றார். பார்க்கும் காட்சியானது உவமையாகச் சொல்லப் படுகின்றது. இதனை,

நிரையுள்ள கூத்தாடி தனக்கொப்பாக நியமிக்கக் கூத்து நிலையில்லாதே போல் (48)
இன்பம் போல் கொல்லாமல் கொல்லவரும் விவேகியானோன் (49)

என்ற பாடல் வரிகள் கொண்டு உணரலாம்

பயன் உவமை

பயன் காரணமாகப் பொருளோடு பொருளோடு வைத்து ஒப்புமை புலப்படப்பாடுவது பயன் உவமை ஆகும். திருவள்ளுவர்,

"உருணி நீர் நிறைந்தற்றே - உலகவாம்
பேரறிவாளன் திரு " (பா - 215)

என்பர் நாகலிங்கய்யாவும், நல்ல மனம் படைத்த பெரியோர்களிடம் வந்தசெல்லமானது பயனுடையதாகும். அது எத்தன்மையுடையது என்றால் ஒரு அழகான ஊரின் நடுவாக குளம் (தடாகம்) ஒன்று இருப்பதைப் போன்றதாகும். நல்ல மனம் இல்லாத மயக்கமுடை யோரிடத்து பொருள் சேர்ந்தால் அது, நகர் நடுவில் எட்டி (மரம்) வளர்ந்தது போலாகும் என்பதை, அவளுடைய பெரியோர்க்குச் செல்வம் வந்தால் அழகான நகர் நடுவிற்றடாகம் போல,

மருளறவேயுதாரமுடனிரக்கந்தோன்று மயக்கமுடையோர்
இடத்தினிதகள் சேர்ந்தாற்
றிருவான நகர்நடுவில் எட்டிபோலச் சிறப்படையாதி
தலினாற் செல்வம் பெற்றார்க்கு
அருளானவுதாரமுடனிரக்கஞ் தோன்றா தவிவேகத்தா
லாகுமறிவாயென்றார் (50)

என்ற பாடல் விளக்கி நிற்கும்.

பலபொருள் உவமை

பலபொருள் உவமை என்பது ஒரு பொருட்கு பலவுவமை சுட்டுவது (51) என்கின்றது. தண்டியலங்காரம். சீவனைப்பற்றி விளக்கும் போது நாகலிங்கய்யா சீவன் பலவாறான வடிவில் இருக்கலாம். ஆனால் அவை ஒன்றே என்கிறார் இதனை விளக்க பல பொருள்களை உவமையாக ஒரே பாடலில் கூறிகின்றார் அப்பாடலானது,

நாட்டமான கடகலச நாநாவாயு மண்ணொன்றாம்
வேட்டு கடகமகுடாதி வெவ்வேறாயும் பொன்னொன்றா
மீட்டிவாலாவாள் பலவாயிருந்தும் மயமொன்றாம் அவைபோற்
றேட்டு பி - பரசீவ. செகங்களாயினும் மேகம் (52)

என்கின்றது. கலசம் பல ஆனால் மண் ஒன்றுதான் மகுடம் பல. ஆனால் பொன் ஒன்றுதான், கருவி பல. ஆனால் இரும்பு ஒன்றுதான். அவைபோல சீவன்களின் வடிவம் பலவாக இருப்பினும் பரம் ஒன்றே ஆகும். மேலும் ஒரு பாடலில்,

நன்றாணபு மானன்றித் தறியே போலு
நலமான ரசிதமின்றிக் கிளிஞ்சல் போலும் (53)

என்கின்றார். தன் குருவான முத்துராமலிங்கத் தேசிகரின் குணநலன்களைப் பல்வேறு புராண கதாபாத்திரங்களின் தன்மையோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார். அப்பாடல் பல பொரு உவமைக்கு சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது.

மணியான பொறுமையினிற் றருமர்போலு மலர்வான
கொடையதனிற்ற தீசிபோலுந்
துணிவான வாக்கரிச்சந்திரனே பாலுஞ் சுகமான லீலைதனிற்
கிருஷ்ணன் போலுந்,
திணியான ஞானமதிற் சனகன் போலுஞ் சிவபணியிற்
றிருநாவுக்கரசே போலுந்
மணியான போதனையில் வசிட்டர் போலும் அடுத்த முத்துராமர்
திருவருளை போற்றி (54)

இப்பாடல் பலவயிற்போலியுவமை என்ற உவமையணிக்குச் சான்றோகக் கூறலாம். பலவயிற்போலியுவமை என்பது ஒரு தொடர் மொழிக்கண் பல உவமை வந்தால் வந்த உவமை தோறும் உவமைச்சொற் தோன்ற புணர்ப்பது ஆகும்.

அத்வைதிகள், கானல்நீர், பழதையைப் பாம்பெனக் காணுதல், வெள்ளியெனச் சிப்பியை நினைத்தல் என்ற கருத்துப்புலப்பட பல உவமைகள் கையாள்வர். இதைப் போல நாகலிங்கய்யாவும் தமது பாடல்களில் இவ்வுமைகளை எடுத்தாள்கின்றார், இதனை,

பழுதைப் பாம்பது முன்பின் நடுவுமே அன்றி பதார்த்தங்கள்
இருத்தலையும் கொடாததே போல் (55)
கானிலிற் சலமும் முன்பின் (56)
சொன்னவொரு பழதையின் வந்த சற்பஞ் சுத்தமதாம்
பழதையெனச் சொல்வதே போல் (57)
நன்றான புமானன்றித் தறியே போலுந்
நலமான ரசிதமின்றிக் கிளிஞ்சல்போலும் (58)

என்ற பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. பல உவமைகளை ஒரே பாடலில் அடுக்கிக் கூறுதல் என்பது ஆசிரியரின் புலமைத் திறனைக் காட்டும் பண்பாகும். நாகலிங்கய்யா இப்பண்பைப் பல பாடல்களில் வெளிக்காட்டியுள்ளார்.

நன்றானபு மானன்றித் தறியே போலுந் நலமான ரகிதமின்றிக்
கிளிஞ்சல்போலும் (59)
அன்றான முலைத்தாதி கதையே போலுநலமான காதி முனி
கனாவைப் போலும் (60)
ஞாளிதின்று கக்கிய வசனம் போலும் கலாக்கினி நரகம் போலும்
(61)

என்னும் பாடல்களைக் கொண்டு தெளியலாம்.

இலக்கியமானது சிறப்புற்று வாழ வழிசெய்வன. உவமைகள் ஆசிரியன் தான் கூற நினைத்த கருத்தைத் தன் அனுபவத்ததால் பெற்ற காட்சிகளைக் கொண்டே கூறுவான். நாகலிங்கய்யாவின் நூல்கள் அனைத்திலம் சீரிய உண்மைகள் பொருத்தமான உவமைகளாக அமைந்து படிப்போருக்கு இன்பம் தருகின்றன.

சொல் நயம்

கவிஞன் தன் கருத்தையும் உணர்வையும் சிறப்பான சொற்களால் வெளிப்படுத்துகின்றான் உயர் கவிதைகளில் சொற்கள் கேவலம் அருபமான கருத்துச் சாயைகளை மட்டும் குறித்து நிற்பன அல்ல. கவிதையிலே பயிலும் சொற்கள், உரை நடையில் வருவனவற்றைவிட ஆற்றல் மிக்கவை. கவிதையிலே அதான் சொற்கள் பூரணத்துவத்தை அடைந்துள்ளன. (62) என்று கூறுவர். நாகலிங்கய்யா சொற்களைத்தக்க இடத்நதில் கையாண்டு பாடல்களுக்கு இனிமையூட்டி உள்ளார்.

தன்னுடைய குருநாதரைப் பற்றிச் சொல்லும் இடந்தோரும் பெயருக்குமுன் அடைமொழி கொடுத்துச் சொல்லுகின்றார். இவ்விதம் சொல்லும் பாங்கில் சொல்நயத்தைக் காணமுடிகின்றது. இதனைத் திகழ்முத்து ராமையன் (ஞான அந்தாதி - பா 11) ஞான வடிவான முத்துராமலிங்க குரு (ஆத்ம நாமம் - 10) முத்தனே முத்துராம முதல்வனே (ஞான அந்தாதி - 2) பவமகற்று முத்தய்ய முதல்வன் (ஞான அந்தாதி - 93) வையர் முத்துராமர் (ஞான அந்தாதி - 99) அருளுமுத்து ராமலிங்கேசா (ஏதுசொருபங்காரியம் - 2) என்று கூறும்பாங்கால் அறியலாம். ஆன்மாவிற்குப் பரஆன்மா என்று பல இடங்களில் அடை கொடுத்துக் கூறுகின்றார்.

அருள் வடிவே யச்சுதனே யமலா போற்றி
யடுத்தவரைச் சிவமாக்குமன்பே போற்றி
பொருண்மு முதுங் கடந்த பரம்பொருளே போற்றி
போதவடிவாயெழுந்த புனிதா போற்றி
குருவான பெரியோர் கடனின் மேலாங் குருமணி
யாயெழுந்த குணக்குன்றே போற்றி (64)

இப்பாடலில், முதலெழுத்து குறில் - ஓசை ஒத்து நிற்க, இரண்டாம் எழுத்து ரு ஒன்றிவர கொடுக்கப்பட்டிருக்கின்றது. அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒத்துவருகின்றது.

நாகலிங்கய்யா தம் நான்கு நூல்களில் பல பாடல்களில் எதுகைத் தொடையினைப் பயன்படுத்தியிருப்பது சிறப்பாகும். எதுகையின் வகைகளைப் பயன்படுத்தியும் செம்மையாகப் பாடல் புனைந்துள்ளார்.

அடிதோறுந் தலையெழுத்தொப்பது மோனை (65) எனத் தொல்காப்பியமும் எழுவாய் எழுத்தொன்றின் மோனை (66) என்று யாப்பெருங்கலக்காரிகையும் கூறும். மோனை என்பது செய்யுளில் சீர்களிலோ, அடிகளிலோ, முதலெழுத்து ஒன்றிவரத் தொகுப்பதாகும். நாகலிங்கய்யாவின் பாடல்களில் இவ்வகைத் தொடைகள் பெருமளவில் கையாளப்பெற்றுள்ளன.

சொல் அல்லது பொருள் இவை தம்முள் முரண்பட்டு வரத்தொடுப்பது முரண்தொடையாகும். நாகலிங்கய்யா தமது நுல்களில் இத்தொடையினை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். சொல், பொருள் நிலைகளில் முரண்தொடையைப் பயன்படுத்துவதற்கு, பாடுபொருள் ஒரு காரணமாக அமைகின்றது. இதனை,

“வனமான கோசமைந்தும் வருவதன் முன்னும் பின்னும் ” (67)

என்ற பாடல் விளக்கும். இப்பாடலில் பயின்றுவந்துள்ள முரண் கடையிணை முரண் ஆகும் மேலும்,

“நானுமே பருத்திளைத்தேனானுயர் வெண்கையாலு
(இடைப்புணர்முரண்)” (68)

“வரமான பூமியிலிறந்து மேயப்பூமி மாத்திரம் இருத்தல்
போலத்” (69) (பின்முரண்)

"பிறப்பு இறப்பாதியாம் விகாரமுள தனகோசம் பேசிடும்
பசிகடாகம்" (70)

"பேய்த்தேராஞ் சிற்றறிவிற் சுகதுக்கங்கள் பெரியவனான்
சிறியவனான் பிறந்திறந்தேன்" (71) (கடைக்கூழை முரண்)

"சிதாகாசாமான தன்னினலைகின்ற மனமாதியுயர்ந்துந்
தாழ்ந்துந்" (72) (கடையிணை முரண்)

"தீனமுறு முயற்வுதாழ்வு வுற்றுமே யென்றுந் திகழ்
பேதமாயுறலாம் விசமாமன்றே "(73) (இடைப்புணர்முரண்)

என்ற பாடல்களில் முரண்தொடைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. நாகலிங்கய்யா, இணைமோனை, பொழிப்பு மோனை போன்ற மோனைத் தொடைகளை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளார் . மோனைத்தொடை ஓசைநயத்தைத் தருவதாகும். எளிதில் மனனமும் ஆகும். எனவே செய்யுள்களில் மோனைத் தொடைகளை எளிமையாகப் பயன்படுத்தி மக்களைச் சென்றடைய வழி வகுத்துள்ளார். முரண் தொடையும் பல பாடல்களில் பயின்றுவந்துள்ளன.

- பாரதிசந்திரன்

வேதாந்தக் கும்மி

கண்டனூர்
ஸ்ரீமத் நா.பெ.நா.மு. முத்துராமய்யா அவர்கள்
இயற்றியவர்

1. செந்தமி ழூா லுறும் வேதாந் தக்கும்மி
சிறப்புடனே மிகப் பாடுதற்குப்
பந்தம கற்றுநம் வன்னிவி நாயகர்
பாதாம்பு யுத்துணை காப்பாமே.

2. பூதல மீதி லுயர்வா னமிகப்
பொற்புள வத்துவி தமாரும்
வேநாந் தக்கும்மிள் எம்பிட ஷண்முக
வேலாயு தன்பதங் காப்பாமே.

3 கற்றவத் தோருணர் வேதாந்தக் கும்மியப்பா
நாதமு டனோநாம் பாடு தற்குப்
பற்றவிட் டோர்க்கருள் கொள்ளவா ளீசர்
பாதாம்பு யத்துணை காப்பாமே.

4. அருமைப் பதங்க ளமைந்துயர் கும்மியை
அன்புட னேநன்கு பாடு தற்குத்
திருநெல்லை நாயகி பாதாம்பு யத்துணை
சிந்தித்து வாழ்த்திநின் றேத்தி னனே.

5. காண்டற் கரியதாம் வேதாந்தக் கும்மியைக்
களிப்பு டனேநாம் பாடு தற்கு
ஆண்டவ னாகவி ளங்கிடு முத்துரா
மையன் திருவடி காப்பாமே.

6. கோதிலா வேதாந்தக் கும்மியைப் பாடிட
கோவிலூர் தன்னி லேயு றையுஞ்
சாதுக்க ளானபெ ரியோர் திருவடி
தாழ்த்து குவித்துன் றேத்தினனே.

7. எகமே வாத்து விதமுதல் வாக்கியம்
எடுத்தோதிக் கும்மியைப் பாடு தற்க
நாகவிலிங் கக்குரு பாதாம் புயத்துணை
நாடோறும் வாழ்த்திநின் றேத்தி னனே.

8. வேதாந்த நூலுக்க திகாரி முத்தாப
வேதனை நீங்கவே யாசை கொண்டு
சாதன நான்கும டைந்தே குருவினைச்
சார்ந்தவ னாமடி ஞானப் பெண்ணே!

9. திருக்கு த்ருசிய மானவி ரண்டினில்
செப்பருந் திருக்கு என்னு மது
சுருக்கஞ் சாதிவி சாதிசு வகதம்
தோன்றா தவத்து நித்திய மாம்.

10. ஒருஞ் சுசாதி விசாதி சுவகதம்
உள்ள திருசிய மாகும் பொருள்
தேரும் பொழுது அசத்திய மாமென்று
தெளிவது வேமிகும் ஞானப் பெண்ணே!

11. அத்தியா ரோபம் அபவாத மென்பது
ஆராய்ந் தறிகின்ற புத்தியி னால்
சித்தத் துறுபந்த மோக்ஷந் தெரிவது
சீரான வேதாந்தம் ஞானப் பெண்ணே!

12. சத்துசித் தானந்த நித்திய பூரணந்
தானான வஸ்து வாகு மனதப்
புத்தியி னாலுணர்ந் தின்பமுந் துன்பமும்
பொருந்தாதோன் வேதாந்தி ஞானப்பெண்ணே!

13. தேஹாதி களிலபி மானங்கள் வைப்பதே
தீர்க்கமாப் பற்றிடு பந்தம தாம்
மோக மதமபி மானம் விடுவதே
முக்தியென்றெண்ணடி ஞானப்பெண்ணே

14. திரிபுடி யற்றவி டந்தனி லேயங்கு
திகழ்கின்ற காக்ஷியே தானென் றெணிச்
சரியாயு ணர்ந்ததைக் காண்பதுவே யுற்ற
தத்துவ தாவது ஞானப்பெண்ணே!

15. பஞ்ச கோசத்தின் பகுப்பையு ணர்ந்தங்கு
பார்ப்பது வேமிகு ஞான மதாம்
உஞ்சும் படிக்குண ராமற் றிரிவது
உத்தம மல்லடி ஞானப்பெண்ணே!

16. அவத்தாத் திரயத்துஞ் சாக்ஷிநா னென்பதை
அறியாம விருந்தவஞ் ஞானத் தினால்
புவனத்தி லேபல வாகப் புலம்பும்
புலப்பத்தைக்கேளாதே ஞானப்பெண்ணே!

17. வேதாந்த நூற்கதி காரிதா னில்லென
விவேக மில்லாது விளம்பிடுவர்
நாதனாரு சைத்திட்ட நூல்வழிச் செல்லாதார்
நவிலுவ தாமடி ஞானப்பெண்ணே!

18. மெய்யினைப் பொய்யினை மெய்யாயுரைத்திடும்
வேதாந்த நூலினைப் போன்ற தொரு
ஐயந்த விர்ந்தருள் ஆனந்த நூல்வேறு
அவனியி லேதடி ஞானப்பெண்ணே!

19. கற்பனை யான சகத்த னைத்தும்
காரண மானதோர் வஸ்து விலே
சொற்பனம் போலவே தோன்றின தாகவே
துணிந்து கொள்ளடி ஞானப்பெண்ணே!

20. அரவதாய்க் கயிறது தோன்றுதல் போலவே
அத்து விதமாஞ் சொரூப மதே
திரமாகுஞ் சகத்தாய்த் தோற்றுவ தாமெனச்
சிந்தையிற் கொள்ளடி ஞானப்பெண்ணே!

21. பொன்னும் பணிகளாய்த் தோன்றுதல் போலவே
பொருளே சகந்தாய்த் தோற்று தன்றி
நன்னய மாகாச் சகமது வேறே
நாடுதற் கொன்றன்று ஞானப்பெண்ணே!

22. வாக்கும் னதுக்கு மெட்டியு மெட்டாத
வஸ்துவின் தன்மையை யுணர்வ தற்க
பாக்கிய மானவே தாந்தநூ லன்றியே
பகரவோர் நூலேது ஞானப்பெண்ணே!

23. விவர்த்த பட்சம் என்பது வோவது
வேதாந்த பட்சமே யாகு மஃஇ
பவத்தை யொழிக்குமப் பட்சத்தைப் பார்ப்பதே
பட்சத்தின் மேலாகும் ஞானப்பெண்ணே

24. ஆனையைக் கண்டவக் குருடரைப் போலவே
அறியாத சமயிக ளாங்கு ருடர்
ஊனினைச் சத்திய மாகக்கண் டாரோ
டுறவினை விட்டிடு ஞஸனப்பெண்ணே!

25. ஏகான்ம பட்சம் யாதென றறியாது
இயங்கிடும் பல்வகைச் சீவ ரொடு
மோகாதி யிற்சிக்கி முயங்கா திருப்பது
முத்திக்குமார்க்கமாம் ஞானப்பெண்ணே!

26. மாமறை கூறிடும் மாவாக்கி யங்களின்
மகிமை யுணராத மாக்கள் பலர்
நேமம் தில்லாத நூல்பல பார்த்துமே
நிரயத்துக் காளாவார் ஞானப்பெண்ணே

27. ஞானத்துக் குப்பத்தி சாதன மாமல்லால்
நவிலும் பரமுத்திக் கேது விலை
ஆனாலும் ஒர்பட்சம் பதமுத்தி பத்தியால்!
ஆதலு முண்டடி ஞானப்பெண்ணே!

28. அத்துவி தம்விசிட் டாத்துவி தமோ
டவனியிற் றுவித மாவ தன்றி
மற்ற தற்குநற் சூத்திர பாடியம்
வழங்கவே யில்லேடி ஞானப்பெண்ணே!

29. சுத்தாத் விதசித் தாந்த சைவ மாய்
சொல்லுதற் குயர்ந்த நூல்க ளிலை
வித்தைபதி னான்கிற் சொல்லாத தைப்பற்றி
மேவுறார் பெரியோர்கள் ஞானப் பெண்ணே!

30. சீவர்கட் கருளாலே வேதாந்த பட்சமே
சித்தாந்த மாமெனத் தேறு தற்கு
நாவினா லேதிருத் தேவார வாசகம்
நவின் றனனென்றெண்ணே ஞானப்பெண்ணே!

31. வருணத்தி னில்லுயர் சங்கரா சாரியர்
வைதிக சைவரே யான தோடு
நிருணய மான வத்துவி தத்தினை
நிலைநாட்டி னாடி ஞானப்பெண்ணே!

32. சித்தாந்த ரானவோர் மாயா வாதிகள்
செப்புவ தாவதென் றெண்ணி டிலோ
முத்தியில் மும்முத லுண்டென் றுரைத்திடும்
மூர்க்க வெறியாகும் ஞானப்பெண்ணே!

33. தரமுள்ள நால்வகைச் சாதிகள் தம்முடையச்
சாதிக்குத் தக்கவாங் கரும முடன்
பிரமமு ணர்ந்தவன் பிராமண னாமெனப்
பேசிடு நன்னூல்கள் ஞானப்பெண்ணே!

34. வீரசை வோரும் வீரும்பு வதுமுயர்
வேதாந்த சாஸ்திர மாவதைத் தான்
பாரினில்வேறொன்றைப் பார்த்திடாரேயவர்
பண்பது காணடி ஞானப்பெண்ணே!

35. அத்து விதமே அரிபிர மாதியாம்
அண்ணலு டையதோர் நிச்சய மென்
றுத்தம் மான நூல்களு ரைப்பதும்
உண்மையென் றெண்ணடி ஞானப்பெண்ணே

36. சுருதி யோடுக்தி யநுபவ வாயிலாய்ச்
சொல்வதைக் கேட்டெவர் சொன்னா லும்
கருதியே நாமந்த வழியில் நடப்பது
காரிய மாமடி ஞானப்பெண்ணே!

37. ஞானசம் பந்தன் நாவினுக் கரசன்
நல்வாத வூர்ப்பெரு மானு டன்றா
னானதோர் சுந்தரன் வைதிக சைவரே
யாவரென் றெண்ணடி ஞானப்பெண்ணே!

38. வைதிக சைவ ராமவர் நால்வரை
மதியிலாச் சமயிகள் தம்முடனே
ஐதிக மாசுவு ரைப்பது வோமிக
அவல மதியடி ஞானப்பெண்ணே!

39. அரிபிர மாதி யானுரு வொன்றென்று
அறியாம லேபல வாறாகப்
பொருளறி யாச்சில பூரிய ருரைப்பது
பொல்லாங்கே யாமடி ஞானப்பெண்ணே!

40. அந்தணர்க் கேமறை சொந்த மென் றாகமம்
அறைந்திடு வாக்கியந் தெள்ளி தாக
சுந்தர மூர்த்தியை வைதிக ரலரெனச்
சொல்லுவ தெம்மதி ஞானப்பெண்ணே!

41. நால்வரும் மூவர்நற் ப்ராமண ராகவும்
நால்வர் குருபூஜை நயத்திடு தல்
மேல்வரு ப்ராமண ரைக்கொடு செய்வது

வேதவி தியாகும் ஞானப்பெண்ணே!

42. ஆதிசை வரென்பதோ ரற்புத சாதியார்
அண்ணலுக்குப் பூஜை செய்ப வர்கள்
நீதிம றையுடன் ஆகம நூறனை
நேரரகக் கொள்ளுவர் ஞானப்பெண்ணே!

43. சைவ ரெனுமோர் சாதியில் லைபல
சாதி யாளருஞ் சைவ ரென்றே
உய்வ தற்காக உரைப்ப ரதனது
உண்மை தெரிந்திடு ஞானப்பெண்ணே!

44. பதிபசு பாசப் பகுப்பையு ணர்ந்தவன்
பாரினிற் சைவனா மென்றிடு வார்
விதியுண ராச்சைவ வைன்சைவ னாவது
வேடத்தைப் பூண்டன்றே ஞானப்பெண்ணே!

45. வைதிக சைவ னாவது தானுயர்
மங்கள சாஸ்திரத் தேர்ச்சியினால்
ஐதிக மெய்யை யுணர்ந்தவ னாமென்று
அகத்தினிற்கொள்ளடி ஞானப்பெண்ணே!

46. மாயனுக்கு மிகு நேயனடி யுயர்
மங்கை யுமைக்கநு கூலனடி
தூயர்கட்கு மிகு தூயனடி மிகத்
தொண்டர்கட் கேயருள் தருவ னடி

47. சிவனை யரியயன் காணா டியவன்
தேவாதி தேவனே யாவ னடி
பவத்தை யடியாருக் கொழிகப்பவ னாமவன்

பங்கயத் தாளிணைச் சூட்டிடு வோம்.

48. மேலோ ருகக்குநல் மேலோனடி யவன்
மெய்யினி லுமைபாதி யாள னடி
சலோக சாமீபம் தருவான டியவன்
சங்கர நாமந்த ரித்தானடி வேறு.

49. எல்லோர்க்கு மேலாம் இறைவ னடியவன்
இங்கித மானசொ ரூபனடி
நல்லோர் மனத்திலு திப்பா னடியவன்
நாடற் குரித்தான நாதனடி - அவன்
பாடற் குரித்தான பண்ப னடி

50. மதியைச் சிரசில் தரித்தா னடியவன்
மங்கை மீனாட்சிக் குரிய னடி
நதியைச் சிரசில் வைத்தா னடியவன்
நரியைப் பரியாக்கும் நாதனடி - அவன்
கரிக்கு ருவியைக் காத்தானடி

51. வேதத்தி னுட்பொரு ளானா னடியவன்
மேவினார்க் கின்பம் விளைப்பாண்டி
சீதளத் திங்கள்மு கத்துநல் லீர்சித்தம்
தேர்ந்து கும்மி யடியுங்கடி - அவனை
ஓர்ந்து கும்மி யடியுங்கடி

52. வேத்த மோ துவ தேதுக் கடி - மிகு
வேள்வியுங் கேள்வியு மேதுக்கடி
போதந் தருநங் கடவுளை யேஸர்ந்து

புகழ்ந்து கும்மி யடியுங்கடி - அகம்
மகிழ்ந்து கும்மி யடியுங்கடி.

53. ஐந்து தொழிலுக்கு மோர் இறைவனடியவன்
அருளினால் வேதம் அறைந்தானடி
பந்தமகற்றும் பரமனடி யவன்
பரம் பிரம்ம மான சொருபனடி - அவ்
வுரம்பெறு வோர்க்கோ ருருவனடி

54. தன்னை யொழித்தவர்க் கென்ன குறையவன்
சத்சித்தா னந்தமா யாவா னடி
முன்னை வினைகளை யொழிப்பனடி மலம்
மூடாமற் கும்மி யடியுங்கடி - புலன்
கூடாமற் கும்மி யடியுங்கடி

55. ஆங்கார மியாவு மகனுமடி - நம
தண்ணல்மே லன்பு வைத்தி ருந்தால்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளிருந் தேயங்கு
உகந்து கும்மி யடியுங்கடி - அகம்
நெகிழ்ந்து கும்மி யடியுங்கடி.

56. சிவமே பரமென் றாகுமடி யிதைச்
சாத்திர மறியாதார் தெரியாரடி
பவத்தை யொழித்தவர் பார்ப்பதடி யவர்
பார்ப்பதே யுயர்ந்த ஞானமடி - வினை
தீர்ப்பதே யுயர்ந்த தீரமடி.

உ
சிவமயம்

செல்லாயி அம்மன் கும்மிப்பாட்டு

கண்டனூர்
ஸ்ரீமத் நா.பெ.நா.மு. முத்துராமய்யா அவர்கள்
இயற்றியது
காரைக்குடி வைசிய மித்திரன் பிராஞ்சு பிரஸில்
அச்சிடப்பெற்றது 1919

நடராஜர்

சீர்வன ங்குகண்ட னூரினின் மேவிய
    தேவிசெல்லாயி யம்மையின்மேல்
நார்வள ருங்கும்மி பாடிடச் செல்வவி
    நாயகன் பொற்பதங் காப்பாமே

அண்டமெல்லாம்புக ழாநந்தக்கும்மிநல்
    வம்மைசெல் லாயிமேற் பாடுதற்குத்
தொண்ட ரெல்லாம்பணிந் தேத்தித்து திக்கு நம்
    சுந்தரேசர் பதங் காப்பாமே

சுந்தரமீனாள் பதந்தனைப் போற்றித்
    துதித்துச் செல் லாயியைப் பாடுதற்கு
பந்த மகற்றுநம் சுப்பிர மணியம்
    பாதாம் புயங்களுங் காப்பாமே

தேசமெல்லாம் புகழ் செல்லாயி யம்மைமேற்
    சிங்காரக் கும்மியைப் பாடுதற்கு
பாசமகற்றும் நடராஜர் குஞ்சித
    பாதாம் புயங்களுங் காப்பாமே.

ஆகமவேத புராண மறியொணா
அம்மை செல்லாயியைப் பாடுதற்கு
நாகலிங்க கக்குரு நாதன் பதமலர்
நானுமெந் நாளும் வணங்கினனே

தன்னை நினைந் தநல் வன்பர் களையுற்ற
சங்கடந் தீர்க்குநற் செல்லாயி
அன்னையின் மேற்கும்மி பாட்டுரைத் திடவை
யாண்டியை வேண்டிப் பணிந் தனனே

செங்கதிர் போன்ற முடிதனைக் கொண்டுள்ள
செல்லாயி யம்மை கும்மிப்பாட
மங்கையா மித்தடிக் காளிமலர்பதம்
வாழ்த்திப் பணிந்து நின்றேத் தினனே

நெற்றி மூன்றாம் பிறைச்சந்திரன் போன்று
நிகழுஞ் செல்லாயிக்கும் மிப்பாட
முத்திரிச்சந்திக் கருப்பர் முன்னிற்கவே
மும்போதுங் கண்டு நின்தேத் தினனே

பூரணசந்திரன் போன்ற முகமுன
பூரணி செல்விமேற் பாடு தற்கு
நாரண னுஞ்சிவ னுங்கூடி யீன்றருள்
நல்லய்ய னார்பத நாடினனே

மன்மத சாபபுருவ முள நல்ல
மாட்சிமை யான செல்லாய் தனக்கு
நின்மல மாமிரு நேத் திரங் கனுாயர்
நீலோற் பலமாய் நினைந்தனனே

மகரக் குழையணி காது கொண்டமலை
மாதுமை யான செல்லாய் தனக்குத்
தொகையுள தானநற் பல்வரிசை மா
துளம்விரை யென்றே ததித்தனனே

ஊரிற் சிறந் தொளிர் காரைநகர் மணிக்
கொப்பான கொப்புடை யாளுடனே
பேரிற் பெரிய நாயகி யோடருள்
பெய் திரு மையுளி யம்மையுமே

உன்னத மாகிய சாக்கை நகருகை
யுத்தமியான வுய்யவந்தாள்
நன்னய மங்கலத் தானா முலக
நாயகியானு நயப்புடனே

சித்திரை மாதங் கடைசிச் செவ்வாயிற்
சிறப்பான வுற்வசந் தானடத்திப்
பத்தியுடனக ரூராரும மிக்க
பாக்கியவான் களுங் கூடிநிற்க.

சீருறுஞ் செல்லாயி வாச லிலே நிதம்
தேவிகள் கூடிக் குலாவிமிகப்
பாருறு மானந்தக் கும்மியைக் வாயாராப்
பாடி யாடிப் படிப்பமடி

மேகவல்லி யநு ராக வல்லி யெழில்
வேதவல்லி சிவ காமவல்லி
நாகவல்லி செக மோகவல்லி திரு
நாமவல்லி கன காமவல்லி

சிங்கார ரத்தினஞ் செண்பக ரத்தினம்
சீவரத்தினக தோடுமையாள்
குங்குமரத்தினம் கோவிந்தாத்தினம்
குஞ்சாரக தினக் கோதையுடன்

அமுதாக்ஷி ஞானக்ஷி மினாக்ஷி
கமலாக்ஷி காமாக்ஷி விசாலாக்ஷி
குமுதாக்ஷி நீலாக்ஷி யென்னுநற்பேர் கொண்ட
குமரிப் பெண்களாய்க் கூடிக்கொண்டு

சீவிச்சிலர் குழற் பின்னலிட்டு மிகச்
சிங்காரக் கொண்டைச் சுருக்குமிட்டுக்
காவியங்கண் களின் மையிட்டுப் பொட்டிட்டுக்
கட்டாணி முத்துப்பற் காவியிட்டு

கோமளப் பொன்னால் மணியணி யிட்டிரு
கும்பமுலைக்கு ரவிக்கையிட்டுப்
பூமுடித்துக் கெண்டைச் சேலைகட்டி வில்லை
பூசிக்கைவீசி வரும் போது

மங்களஞ் சேர்நாக வல்லி யெனுந்தலை
மாதுமற்றோருட னீது சொல்வான்
நங்கலி தீர்த்திட இங்கருள் கூர்ந்திடும்
நன்னிதிச் செல்லாயி சன்னதி முன்

கூடிக்கும்மி யடிப்ப மென்றானருள்
கொடுக்க மின்னைப் படிப்பமென்றாள்
நாடியே நின்று நடிப்ப மென்னானவள்
நன்மலர்த் தாளைப் பிடிப்பமென்றாள்

எல்லாரு மொன்று போற் பாடிடுவோ மிசைந்
திட்டமாய் வட்டமிட் டாடிடு வோம்
பொல்லாங்கு நீக்கிடுங் கண்டநல்லூர் நங்கை
பொன்மலர்த் தாள்முடி சூடிடுவோம்.

கொங்கை யிளநீர் குலுங்கிட வேலயங்
கொண்டு சிலம்பு புலம்பிடவே
அங்கை வளையல் குலுங்குடவே நம
தம்பாள் முன் கும்மி யடிப்பமடி

மாடங்கள் மேனிலைக் கோபுரமும் முயர்
மண்டப முந்திரு மாளிகையும்
நீடும் பொன்னாலயம் மேவிய செவ்வியை
நேர்ந்துக்கும்மி யடிப்பமடி

செல்லாயி யம்மன் வாசலிலே திருத்
தேரிழுக்க நகரூராரும்
வல்லமை காட்டி வடம் பிடித்தே யவர்
வருகின்ற காட்சியைப் பாருங்கடி

ஊரார்க்குரித்தான பெண்களெல்லாமங்
கொழுங்காய்க் குலவைக ளிட்டுக் கொண்டு
தேர்தனைச் சுற்றி வருவதைப் பார்த்தங்கு
சிங்காரக்கும்மி யடிப்பமடி

வீதியிலுள்ள வீடு தோறும் நன்றாய்
விளக்குவைத்து பழந்தேங்காயுடன்
சாதிமுறைப்படி நின்று கொண்டவர்கள்
தரிசிப்பதைப் பார்த்தடிப்பமடி

கும்மியடி பெண்காள் கும்மியடி - யிரு
கொங்கை குலுங்கவே கும்மியடி
நம்மையாளுந்திருச் செல்லாயி யம்மையை
நாடிக் கும்மியடியுங்கடி - பதம் பாடிக்கும்மி யடியுங்கடி

நாடு நகரமெல்லாங் கூடிப்பல
நாடோறும் பார்த்துக் களிப்பதுடன்
கூடுதலாக வீரர்களெல்லா முளைக்
கொட்டுவதைப் பார்த்தடிப்பமடி

பத்தர்க் கருள் செய்யும் செல்லாயி யம்மைமேற்
பைந்தமிழாற் கும்மிபாட்டு செய்த
முத்தராமக்கவி வாழ்க வாழ்க வென்று
முப்போதுங் கும்மியடிப் பமடி

சீரவளருங்கண்டனூர் வாழி திருச்
செல்லாயியம்மை யருள் வாழி
பார்வளர் நாடுநகர் வாழி தினம்
பண்போடிதைப் படிப்போர்வாழி.

முற்றிற்று.

மகரக் குழையணி காது கொண்டமலை
மாதுமை யான செல்லாய் தனக்குத்
தொகையுள தானநற் பல்வரிசை மா
துளம்விரை யென்றே ததித்தனனே

ஊரிற் சிறந் தொளிர் காரைநகர் மணிக்
கொப்பான கொப்புடை யாளுடனே
பேரிற் பெரிய நாயகி யோடருள்
பெய் திரு மையுளி யம்மையுமே

உன்னத மாகிய சாக்கை நகருகை
யுத்தமியான வுய்யவந்தாள்
நன்னய மங்கலத் தானா முலக
நாயகியானு நயப்புடனே

சித்திரை மாதங் கடைசிச் செவ்வாயிற்
சிறப்பான வுற்வசந் தானடத்திப்
பத்தியுடனக ரூராரும மிக்க
பாக்கியவான் களுங் கூடிநிற்க.

சீருறுஞ் செல்லாயி வாச லிலே நிதம்
தேவிகள் கூடிக் குலாவிமிகப்
பாருறு மானந்தக் கும்மியைக் வாயாராப்
பாடி யாடிப் படிப்பமடி

மேகவல்லி யநு ராக வல்லி யெழில்
வேதவல்லி சிவ காமவல்லி
நாகவல்லி செக மோகவல்லி திரு
நாமவல்லி கன காமவல்லி

சிங்கார ரத்தினஞ் செண்பக ரத்தினம்
 சீவரத்தினக தோடுமையாள்
குங்குமரத்தினம் கோவிந்தாத்தினம்
 குஞ்சாரக தினக் கோதையுடன்

அமுதாக்ஷி ஞானக்ஷி மினாக்ஷி
 கமலாக்ஷி காமாக்ஷி விசாலாக்ஷி
குமுதாக்ஷி நீலாக்ஷி யென்னுநற்பேர் கொண்ட
 குமரிப் பெண்களாய்க் கூடிக்கொண்டு

சீவிச்சிலர் குழற் பின்னலிட்டு மிகச்
 சிங்காரக் கொண்டைச் சுருக்குமிட்டுக்
காவியங்கண் களின் மையிட்டுப் பொட்டிட்டுக்
 கட்டாணி முத்துப்பற் காவியிட்டு

கோமளப் பொன்னால் மணியணி யிட்டிரு
 கும்பமுலைக்கு ரவிக்கையிட்டுப்
பூமுடித்துக் கெண்டைச் சேலைகட்டி வில்லை
 பூசிக்கைவீசி வரும் போது

மங்களஞ் சேர்நாக வல்லி யெனுந்தலை
 மாதுமற்றோருட னீது சொல்வான்
நங்கலி தீர்த்திட இங்கருள் கூர்ந்திடும்
 நன்னிதிச் செல்லாயி சன்னதி முன்

கூடிக்கும்மி யடிப்ப மென்றானருள்
 கொடுக்க மின்னைப் படிப்பமென்றாள்
நாடியே நின்று நடிப்ப மென்னானவள்
 நன்மலர்த் தாளைப் பிடிப்பமென்றாள்

எல்லாரு மொன்று போற் பாடிடுவோ மிசைந்
திட்டமாய் வட்டமிட் டாடிடு வோம்
பொல்லாங்கு நீக்கிடுங் கண்டநல்லூர் நங்கை
பொன்மலர்த் தாள்முடி சூடிடுவோம்.

கொங்கை யிளநீர் குலுங்கிட வேலயங்
கொண்டு சிலம்பு புலம்பிடவே
அங்கை வளையல் குலுங்குடவே நம
தம்பாள் முன் கும்மி யடிப்பமடி

மாடங்கள் மேனிலைக் கோபுரமும் முயர்
மண்டப முந்திரு மாளிகையும்
நீடும் பொன்னாலயம் மேவிய செவ்வியை
நேர்ந்துக்கும்மி யடிப்பமடி

செல்லாயி யம்மன் வாசலிலே திருத்
தேரிழுக்க நகரூராரும்
வல்லமை காட்டி வடம் பிடித்தே யவர்
வருகின்ற காட்சியைப் பாருங்கடி

ஊரார்க்குரித்தான பெண்களெல்லாமங்
கொழுங்காய்க் குலவைக ளிட்டுக் கொண்டு
தேர்தனைச் சுற்றி வருவதைப் பார்த்தங்கு
சிங்காரக்கும்மி யடிப்பமடி

வீதியிலுள்ள வீடு தோறும் நன்றாய்
விளக்குவைத்து பழந்தேங்காயுடன்
சாதிமுறைப்படி நின்று கொண்டவர்கள்
தரிசிப்பதைப் பார்த்தடிப்பமடி

கும்மியடி பெண்காள் கும்மியடி - யிரு
கொங்கை குலுங்கவே கும்மியடி
நம்மையாளுந்திருச் செல்லாயி யம்மையை
நாடிக் கும்மியடியுங்கடி - பதம் பாடிக்கும்மி யடியுங்கடி

நாடு நகரமெல்லாங் கூடிப்பல
நாடோறும் பார்த்துக் களிப்பதுடன்
கூடுதலாக வீரர்களெல்லா முளைக்
கொட்டுவதைப் பார்த்தடிப்பமடி

பத்தர்க் கருள் செய்யும் செல்லாயி யம்மைமேற்
பைந்தமிழாற் கும்மிபாட்டு செய்த
முத்தராமக்கவி வாழ்க வாழ்க வென்று
முப்போதுங் கும்மியடிப் பமடி

சீரவளருங்கண்டனூர் வாழி திருச்
செல்லாயியம்மை யருள் வாழி
பார்வளர் நாடுநகர் வாழி தினம்
பண்போடிதைப் படிப்போர்வாழி.

முற்றிற்று.



இரண்டாவது மகன் இராம. நாகப்பன், மருமகள் நா. மீனாட்சி
பேத்தி நா. அலமேலு இந்திரா, பேரன் நா. கார்த்திக் ராமநாதன்



நாகமுத்து சீரடி சாய்பாபா